

# அமரர். திருமதி. பத்மலோஜனிதேவி தர்மலிங்கம்

அவர்களின்

சிவப்பதபேறு குறித்த

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருகோணமலையை பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் திருமதி. பத்மலோஜனிதேவி தர்மலிங்கம்

**அவர்கள்**

**சிவபதம் எய்தியமை குறித்த**

# நினைவு மலர்

**14.03.2023**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சிவமயம்



# சமர்ப்பணம்

எமது குடும்பத்தின்
ஜோதியாய் விளங்கி
எமை வழிநடத்தி
ஏற்றமுடன் வாழ்ந்து வந்து
சிவன் பாதமே
கதியெனவே அடைந்திட்ட
உன் பாதகமலங்களுக்கு
சிறப்பான சமர்ப்பணம்

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

கணவன்,
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கம்


| | |
|---|---|
| கல்வெட்டு | 1 - 40 |
| நால்வர் துதி | 41 |
| விநாயகர் துதி | 42 |
| திருஞானசம்பந்த நாயனார் அருளிய தேவாரம் - (1-3ஆம் திருமுறை) | 43 |
| திருநாவுக்கரசு நாயனார் அருளிய தேவாரம் - (3-6ஆம் திருமுறை) | 54 |
| சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய தேவாரம் - (7ஆம் திருமுறை) | 66 |
| மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகம் - (8ஆம் திருமுறை) | 78 |
| திருவிசைப்பா - (9ஆம் திருமுறை) | 90 |
| திருப்பல்லாண்டு - (9ஆம் திருமுறை) | 96 |
| சேக்கிழார் பெருமான் அருளிய பெரியபுராணம் (12ஆம் திருமுறை) | 100 |
| திருப்புகழ் | 105 |
| கோளறு திருப்பதிகம் | 114 |
| திருநீற்றுப பதிகம் | 118 |
| திருகேதீஸ்வரப் பதிகம் | 120 |
| திருக்கோணமலை பதிகம் | 124 |
| சிவபுராணம் | 127 |
| திருப்பள்ளியெழுச்சி | 131 |
| திருவெம்பாவை | 134 |
| அச்சோப் பதிகம் | 141 |
| திருப்பொற்சுண்ணம் | 143 |
| அபிராமி அந்தாதி | 150 |
| சகலகலாவல்லிமாலை குமரகுருபர சுவாமிகள் | 171 |
| பஞ்சபுராணம் 1 | 174 |
| 2. தேவாரம் | 176 |
| 3. தேவாரம் | 178 |
| 4. தேவாரம் | 180 |
| 5. தேவாரம் | 182 |
| பிள்ளையார் கதை | 184 |
| போற்றி திரு அகவல் | 209 |
| காரியசித்தி மாலை | 211 |
| வருக்கைக் கோவை | 212 |
| விநாயகர் கவசம் | 214 |
| கந்தர் சஷ்டி கவசம் | 220 |
| கௌரி காப்பு | 226 |
| திருமந்திரமும் திருக்குறளும் ஒருமைப்பாடு | 229 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
25
-
03
-
1938

மறைவு
12
-
02
-
2023

அமரர்
திருமதி. பத்மலோஜனிதேவி தர்மலிங்கம்
(பத்மா ஆசிரியர்) அவர்கள்

## திதி வெண்பா

ஆண்டளகு சுபகிருது தை அபரபக்க ஸ்ப்தமியில்
விண்ணகம் விரைந்திட்ட விருப்பமிகு பத்மா
சிவனே கதியென்று சேரும் பெரும்நோக்கில்
ஈசனடி சேர்ந்தார் இனிதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பஞ்ச புராணங்கள்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்து அடி போற்று கின்றேனே.

## தேவாரம்

நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பும்
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலங் கொழிக்குங்
கோணமா மலையமர்ந் தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே !
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே !
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே !
சித்தத்துள் தித்திக்கும் தேனே !
அளிவளர் உள்ளத்(து) ஆனந்தக் கனியே !
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்தும் குடிகுடி
ஈசற்(கு)ஆட் செய்மின் குழாம்புகுந்து
அண்டங் கடந்த பொருள்அள
வில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள்
என்றே பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புராணம்

வேதநெறி தழைத்தோங்கமிகு சைவத்துறை விளங்க(ப்)
பூதபரம் பரைபொழியப் புனிதவனாய் மலர்ந்தழுத
சீத வள வயற் புகழ்ற் திரு ஞான சம்பந்தர்
பாத மலர் தலைகொண்டு திருத்தொண்டு பரவுவாம்

# திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மா திருப்புகழ் பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற்கு அருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநியாத
வெற்றி வேலாயுதப் பெருமாளே

# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திருமதி. பத்மலோஜனிதேவி தர்மலிங்கம் அவர்களின் வாழ்க்கை வரலாறு

இந்து சமுத்திரத்தில் நித்திலமாக விளங்குகின்ற இலங்கைத் திருநாட்டின் தெட்சணகைலாயம் என்று சிறப்பாகப் போற்றப்படும் திருக்கோணேஸ்வர பெருமான் எழுந்தருளியுள்ள சைவமும் தமிழும் தழைத்தோங்குகின்ற திருக்கோணமலை எனும் புண்ணிய பூமியில் உயர் வேளாண் மரபில் முத்துக்குமாரு இராசமணி தம்பதியரினருக்கு சிரேஷ்ட புதல்வியாக 1938ம் ஆண்டு பங்குனி மாதம் 25ம் நாள் அமரர் பத்மலோஜனிதேவி அவர்கள் பிறந்தார்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்

என்ற வள்ளுவனின் வாக்கிற்கமைய இவ் உலகிலே வாழவேண்டிய அறநெறியில் வாழ்ந்துவந்து வானுலகத்திலுள்ள தெய்வமுறையில் வைத்து மதிக்கப்படவேண்டியவராக அவரது வாழ்க்கை முறை அமைந்தது என்றால் அது மிகையாகாது.

இவ் உலகிலே பலர் ஜனனிப்பதும், மரணிப்பதும் இயல்பான விடயம் எனினும் ஒருசிலரது இழப்பு ஈடிணையில்லா இழப்பாகிவிடுகின்றது. அந்த வகையில் அமரர் அவர்களது வாழ்க்கைமுறை சிறுபராயத்திலிருந்து அவரது இறுதிக்காலம் வரை மற்றவர்களுக்கெல்லாம் ஓர் எடுத்துக்காட்டான வாழ்க்கைமுறையாக அமைந்ததை ஊரார் அறிவர்.

அமரர் அவர்கள் தனது கல்வியை திருகோணமலை ஸ்ரீசண்முகா வித்தியாலயத்திலும், யாழ்ப்பாணம் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியிலும் கல்வி பயின்று வந்தார். கல்வி பயின்ற காலத்தில் எவ்வாறு கல்வியில் மிகச்சிறப்பான முறையில் உயர்ந்த அடைவுநிலையைப் பெற்றாரோ, அதற்கு நிகராக பேச்சாற்றல், எழுத்தாற்றல், கவிபுனைதல், நாடகத்துறை மற்றும் தலைமைத்துவ பண்புகள் ஆகியவற்றிலும் மிகச்சிறந்து விளங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னார் இளம் வயது முதல் ஆன்மீகத்தில் மிகவும் ஈடுபாடு கொண்டவராகத் திகழ்ந்த அதேவேளை இயல்பாகவே சுறுசுறுப்பும், தலைமைத்துவ பண்புடன் எடுத்த பணியை குறிப்பிட்ட கால எல்லைக்குள் திறம்பட செய்து முடிப்பவராக இருந்தமை அக்காலங்களில் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் சமூகத்தினரால் வியப்புடன் பாராட்டப்பட்ட விடயமாகும்.

தனது இருபதாவது வயதிலேயே ஆசிரியப்பணியேற்று மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் ஆசிரியப்பயிற்சியை பூர்த்தி செய்து திருகோணமலை ஸ்ரீசண்முகா வித்தியாலயம் மற்றும் திருகோணமலை ஸ்ரீகோணேஸ்வரா வித்தியாலயம் ஆகிய பாடசாலையில் ஒரு புகழ்பெற்ற ஆசிரியராக சேவையாற்றி தனது 50ஆவது வயதில் ஓய்வுபெற்றார். தமிழ் மொழியில் பாண்டித்தியம் பெற்று விளங்கியமையால் பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்கு தமிழ் மொழியினையும், தமிழ் இலக்கியம் மற்றும் இலக்கணத்தினையும் சிறப்பான முறையில் கற்பித்து சமூகத்துக்கு சிறந்த மாணாக்கர்களை கொடுத்த பெருமையை திருகோணமலை மக்கள் யாவரும் அறிவர்.

இவரின் கற்பித்தல் வழிமுறை பிரத்தியேகமான முறைமையாகும். இன்று உள்ளூரிலும் வெளியூரிலும் உயர்நிலையில் பல பதவிகளை வகிக்கும் மாணாக்கர்கள் இவரை என்றுமே மறந்திருக்க முடியாது. காரணம் கல்வியை மாணவர்களுக்கு புகட்டும் போது அவர்கள் சிறந்தமுறையில் கல்வியை உள்வாங்கியதுடன் சிறந்த நற்பண்புகளையும் மாணாக்கர்களின் உள்ளத்தில் விதைத்தது இவருக்கே உரிய தனிப்பண்பாகும். இதனாலேயே சகஆசிரியர்கள் மத்தியில் அமரர் அவர்கள் பெரிதும் மதிக்கத்தக்க ஒருவராக மிளிர்ந்தார்.

1962ம் ஆண்டு யாழ்ப்பாணம் கரவெட்டி வடக்கைச் சேர்ந்த காலம்சென்றவர்களான கந்தவனம், மாணிக்கம் தம்பதிகளின் ஏக புதல்வரான நற்குணமுடைய தர்மலிங்கம் (பிரதம கணக்காளர்) அவர்களை வாழ்க்கைத் துணைவராக அடையப்பெற்று இல்லற வாழ்க்கையை இனிதாக ஆரம்பித்தார். இருவரும் இணைபிரியா தம்பதியினராக ஒற்றுமையுடனும், ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுப்புடனும் வாழ்ந்து வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்
மகனைச் சான்றோர் எனக்கேட்ட தாய்"

என்ற வள்ளுவனின் வாக்கிற்கமைய நற்பண்புகள் நிறைந்த மூன்று பிள்ளைச்செல்வங்களை பெற்றெடுத்தார். பிள்ளைகள் அவர்கள் பிறந்த காலத்தில் பெற்ற மகிழ்ச்சியை விட இன்று அவர்கள் வாழ்கின்ற வாழ்வை நினைத்து பெரிதும் மகிழ்வாக வாழ்ந்து வந்தார். குறிப்பாக பார்த்தீபன் (அவுஸ்ரேலியா), வைத்தியர் தக்ஷாயினி (லண்டன்) மற்றும் சிவதர்ஷினி (நோர்வே) ஆகியோர்களை செல்வங்களாகப்பெற்று அவர்களை உயர்ந்த நிலைக்கு கொண்டுசென்ற பெருமை இவரையும் இவரது கணவரையும் சாரும்.

தனது தாய் தந்தையருடன் எவ்வாறு அன்பு செலுத்தி வாழ்ந்தாரோ, அவ்வாறே தனது மாமியாரையும் மதித்து வாழ்ந்ததை யாவரும் அறிவர்.

கணவனின் தொழில் நிமிர்த்தமும் பிள்ளைகளின் கல்வி தொழில் நிமிர்த்தமும் 1985 ஆம் ஆண்டிலிருந்து இறுதிக்காலம் வரை யாழ்ப்பாணம் திருகோணமலை கொழும்பு ஆகிய இடங்களில் வாழ்ந்து வந்து தனது இறுதிக்காலத்தில் திருகோணமலையில் வசித்து வந்தார்

அமரர் அவர்கள் மாணவர்களது கல்வி மேம்பாட்டிற்காக உழைத்த அதேவேளை தனது குடும்பத்தினருக்காகவும் அயராது உழைத்து தனது வாரிசுகளை அவையத்தில் முந்தியிருக்கச்செய்தமை இன்றும் எல்லோராலும் பாராட்டப்படுகின்றது.

இவர் தனது பிள்ளைகளுக்கு சிறந்த மருமக்களை தேர்ந்தெடுத்து மணம் முடித்து வைத்தார். பார்த்தீபன் அவர்களுக்கு சித்திரா அவர்களையும், தக்ஷாயினி அவர்களுக்கு சிற்றம்பலம் கதிரவேல் அவர்களையும் சிவதர்ஷினி அவர்களுக்கு முத்துராஜா சுகுமார் அவர்களையும் திருமணம் செய்து வைத்தார். அன்னார் மருமக்களுடன் மிகுந்த பாசத்துடன் தனது பிள்ளைகளைப் போலவே அன்புடனும், பரிவுடனும் நடந்து கொண்டமை எல்லோரும் அறிந்ததே மேலும் ரிஷிதர் (பொறியியலாளர்) மற்றும் சஞ்சீவ்தர் (பொறியியல் மாணவர்) ஆகியோரை பேரக்குழந்தைகளாகப் பெற்று மகிழ்ந்து வந்தார். பெறாமக்கள் யாவரையும் தன் பிள்ளைகளைப்போல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணி வந்தமை ஓர் உன்னத பண்பாகும்.

அருந்ததி தேவி, சரோஜினி தேவி, கிருஸ்ணதாசன், மறைமலர்ச் செல்வன், பற்குண தேவி மற்றும் சாந்தினி தேவி ஆகிய சகோதர சகோதரிகளுடன் மிகுந்த பாசத்துடன் ஒரு மூத்த சகோதரியாக முன்னின்று அவர்களுக்கு வழிகாட்டியாக வாழ்ந்து வந்தார்.

குறிப்பாக இவரது இல்லத்தின் எல்லைக்குள் அமைந்த குலதெய்வமான வீரபத்திர பெருமானை மிகவும் பக்திசிரத்தையுடன் தினமும் வழிபட்டு வந்தமை அவரது ஆன்மீக சிந்தனைக்கும், செயலுக்கும் ஓர் எடுத்துக்காட்டாகும். அத்துடன் தனது இல்லத்தின் அருகில் இருந்த விசாலாட்ஷி சமேத விஸ்வநாத (சிவன் கோவில்) பெருமானிடம் அதீத ஈடுபாடு கொண்டு பக்தி சிரத்தையுடன் தவறாது வழிபட்டுவந்தமை ஓர் இறையம்சமாகும். குறிப்பாக ஸ்ரீ சத்திய சாயி பாபா அவர்களைத் தன் குருவாக ஏற்றுக்கொண்டு அவரின் போதனைகளைப் பின்பற்றி வாழ்ந்து வந்தார்.

இவ்வாறான மனிதாபிமானமிக்க ஒரு சிறந்த பண்பாளர், உன்னத ஆன்மீகவாதி, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, நேர்மை மற்றும் நேரந்தவறாமை, ஏழைகளிடத்தில் அன்பு கொண்டமை, பக்கச்சார்பின்மை மற்றும் சமூகத்தின் பக்கம் பார்வை கொண்டு விழிப்புணர்வுடன் செயற்பட்டமை போன்ற பல உயரிய பண்புகளைக்கொண்ட அன்னார் சுகவீனம் காரணமாக சிகிச்சை பெற்று இறுதியில் 12.02.2023 அன்று சிவபதம் அடைந்தார். இவரின் வாழ்வு முறைமை மற்றவர்களுக்கெல்லாம் ஓர் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

அன்னாரின் ஆன்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இல் வாழ்வில் என் இனிய மனைவி

ஆண்டு அறுபத்தியிரண்டில்
அன்புடனே உன்னை கரம் பிடித்தேன்
அன்று முதல் இறுதி வரை
இணை பிரியா வாழ்ந்து வந்தோம்

வாரிசு மூன்றினையோ
வரமாக பெற்றிட்டோம்
வளமான வாழ்வுதனை
வாழ்நாளில் கண்டு கொண்டோம்

முத்தான மூவரையும்
முறையாக பயிற்றுவித்து
முன்னேற்ற பாதையிலே
செல்வதற்கோ வழி வகுத்தீர்

இன்பத்திலும் துன்பத்திலும்
இருவருமே பங்கு கொண்டு
இணைபிரியா தம்பதியாய்
இருந்து வந்தோம் வாழ்வதனில்

என் வாழ்வில் பல உயர்வு
ஏற்றத்துடன் நான் பெறவே
பல வழிகள் நீ சமைத்தாய்
பல அடைவு நான் பெற்றேன்.

என் முயற்சி வளர்ச்சியிலே
உறுதுணையாய் நீ வாழ்ந்தாய்
குடும்பத்தை நிருவகித்து
குலவிளக்காய் நீ திகழ்ந்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் குறியே இருவருக்கும்
ஒன்றாக அமைந்ததினால்
சீரான மருமக்கள்
சிறப்புடனே நாம் பெற்றோம்

பேறாக பெற்றிட்டோம்
பேரர்கள் இருவரையும்
கல்விதனில் முன்னேற்றம்
கண்டு கொண்டோம் களிப்புடனே

அன்பாக கதை பேசி
அனைவரையும் ஆதரித்து
பண்பான வாழ்வுதனை
பாரினிலே வாழ்ந்து வந்தீர்

எண்பத்தி நான்கு வயது வரை
ஏற்றமுடன் வாழ்ந்து வந்து
ஏன் சென்றீர் எமை விட்டு
எட்டாத தொலைதூரம்

மாறுமா உம் நினைவு
மறையுமா கணப்பொழுதில்
உம் ஆத்மா சாந்தி பெற
உளமாற வேண்டுகிறேன்

அன்பு கணவன்
கந்தவனம் தர்மலிங்கம்
ஓய்வு பெற்ற கணக்காளர்
திருகோணமலை நகர சபை
கொழும்பு மாநகர சபை
யாழ்ப்பாணம் மாநகர சபை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகன் பிரலாபம்

அம்மா என்னை இப் பூவுலகில்
மனிதனாய் உருவாக்கி
மறைந்து விட்ட தெய்வமே
உங்கள் அன்பு மொழிகளையும்
ஆதரிக்கும் பண்புகளையும்
நினைத்து நினைத்து கலங்குகிறேன்

அம்மா நாளும் பொழுதும்
உங்களை மறக்க முடியாத
நினைவலைகள் என்னை
நிலைகுலைய வைக்கின்றதே அம்மா!
ஐயகோ! உங்களுடைய ஒவ்வொரு
செயல்பாடுகளையும் எண்ணி எண்ணி
உள்ளம் விம்முகிறதம்மா

கண்ணீர் தான் கரைந்து கரைந்து
உள்ளமே கனக்கின்றது
நீங்கள் எங்களோடு இல்லையென்றாலும்.
நீங்கள் எமக்களித்த வாழ்க்கை முறை
எங்களோடு துணை நிற்கும் அம்மா!

இறைவன் திருப்பாதத்தில் இளைப்பாற
என்றும் இறைவனை வேண்டிக் கொண்டே இருப்பேன்

அன்பு மகன் தர்மலிங்கம் பார்த்திபன்
அவுஸ்திரேலியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆருயிர் தாய்க்கு....

அம்மா என்பதே அன்பின் வடிவம்
இம்மாநிலத்தில் நீரே என் தெய்வம்
அம்மா என உமை அழைக்க
என்ன புண்ணியம் தான் செய்தேனோ

அகிலம் காக்கும் அப்பனும் அம்மையுமாய்
பப்பாவும் நீங்களும் அரவணைத்தீர்
சொல்லும் பொருளுமாய் கல்வி ஊட்டி
அன்பையும் பண்பையும் அறிவையும் வளர்த்தீர்

குடும்பத்தில் குலவிளக்காய் குணம் காத்தீர்
முத்தாக பெற்றெடுத்த எம்மூவரையும்
முதுகெலும்பாய் நீர் இருந்து கரை சேர்த்தீர்
எம் குடும்பத்தின் முகவரியே நீங்கள் தானம்மா

கல்லூரி வாழ்க்கையில் நான் கரை சேர
கண்ணும் கருத்துமாய் கல்வி புகட்டினீர்
மண்ணுயிர் காக்கும் உன் மனிதாபிமானத்தால் - எனை
மருத்துவராக்கி அகம் மகிழ்ந்தீர்

மண வாழ்க்கை எனக்கமைத்து
மகிழ்வுடனே மருமகனை "கதிர்" உங்கள் மகன் என்பீர்
நினைக்கவில்லை அம்மா நாம்
நிலையில்லாதது மனித வாழ்வு என்று

அதிகாலை எழுந்ததும் முதற்கடமை
அம்மா உங்கள் அழகுமுகம் காண்பதும்
அன்பு வார்த்தைகள் கேட்பதும் தான்
ஆயிரம் மயில்களுக்கு அப்பால் நான் வாழ்ந்து வந்தாலும்
ஆவலுடன் உமை காண ஓடோடி வருவேனே அம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனை விட்டு ஏன் பிரிந்தீர்
என் நெஞ்சம் தவிக்குதம்மா
என் நினைவே நீங்கள் தானம்மா
உமது அழகுமுகத்தை எப்போது காண்பேன் அம்மா
உரு தந்து உயிர் காத்த அன்னையே
நீங்கள் இல்லா உலகம் எனக்கு வெறுமையே

தோன்றில் புகழோடு தோன்றுக எனும்
வள்ளுவர் வாக்கை மனதில் பதித்து
கல்வியில் கலங்கரை விளக்காய்
பத்மா டீச்சர் என பலராலும் அறியப்பட்டீர்.

என்னை எனக்கு அறிவித்து என்னை
உருவாக்கிய அன்னையே - உம்மை
அம்மா என்பேனா? என் ஆருயிர் என்பேனா?
அனைத்தும் எனக்கு நீயே அம்மா

பகல் இரவு பாராது பாசம் காட்டி
பக்குவமாய் தக்கவையெல்லாம் அறியவைத்து
உண்மை நேர்மை நியாயம் புரியவைத்து
தங்கள் இதயத்தில் ராசாத்தியாய் அமர வைத்து
கல்வி கடமை கண்ணியம் கட்டுப்பாட்டுடன்
இல்லற வாழ்விலும் இன்பமாய் நான் வாழ
இறுதிவரை எனக்காய் இருந்த தாயே
இனி ஓர் பிறப்பு உண்டேல்
தங்கள் மகளாய் மீண்டும் பிறக்க வேண்டும் அம்மா

சிவநாமம் தினம் சொல்வீர்கள்
சிவன் அடியே சேர்ந்திருங்கள்

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அன்பு மகள்
Dr. தக்ஷாயணி கதிரவேல்
லண்டன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் நினைவில் அம்மா

முத்துக்குமாரின் மூத்த புதல்வியாக பிறந்த
முத்தே ராசமணியின் மாதவத்தால் கிடைத்த மாமணியே
பத்மலோஜனி தேவி என்று பெயர் சூட்டப்பட்டு
பெருமையாக வாழ்ந்தீர்களே
பன்முகத் திறமைகளை கொண்டீர்கள்
தமிழில் பல புலமை படைத்தீர்கள்.
உமது கல்லூரி காலத்தில்
கவிதை போட்டிகளில் வெற்றிவாகை சூடினீர்கள்
கம்பன் வீட்டு கைத்தறியும் கவி பாடும் என்பார்கள்
ஆனால் என் அம்மாவின் பேனா கூட கவி பாடும்.
நல்லாசிரியராக நல்ல மாணவ மணிகளை தந்தீர்.
நான் இவ்வுலகிற்கு வருவதற்கு முன்பே
என்னை நேசித்த ஜீவன் என் அம்மா.
என் முகம் பார்க்கும் முன்பே
என் குரல் கேட்கும் முன்பே
என்னை நேசித்தவர் எனது அம்மா.
நான் பார்த்த முதல் முகம்
நான் பேசிய முதல் வார்த்தை
நான் பார்த்த முதல் கடவுள் அம்மா.
பத்து திங்கள் வலி தாங்கி மறுபிறவி எடுத்து
எனக்கு உயிர் கொடுத்து உதிரத்தை பாலாக்கி
தாலாட்டி சீராட்டி, பல இரவுகள் தூக்கத்தை தொலைத்து
என் கை பிடித்து நடை பழக்கினீர்கள்.
நிலா முற்றத்தில் நீங்கள் ஊட்டிய சோறு தான்
எனக்கு தேவ அமிர்தம்.
எனது இன்பமும் துன்பமும் புரிந்து கொண்ட
அகராதி புத்தகம் அம்மா.
ஆயிரம் உறவுகள் இருந்தாலும் உன்னை
மட்டுமே தேட வைத்தாய்.
அருகில் இருக்கும் போதே அள்ளிக் கொள்ள வேண்டும்
அன்னையின் அன்பை தொலைந்த பின்பு தேடினாலும்
கிடைக்காதது அன்னை என்னும் பொக்கிஷம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் இவ்வுலகில் பெருமையாக அமர்ந்த சிம்மாசனம்
என் அம்மாவின் கருவறை
நான் முதன் முதலில் கேட்ட தேவகானம்
உன் இதயத்துடிப்பு
உங்கள் கருவறையில் இருக்கும்போது நான் கேட்டது
அந்த தேவகானத்தை விட மேலான ஒரு தேவகானத்தை
நான் என் வாழ்வில் கேட்டதில்லை
நான் இனியும் கேட்கப் போவதில்லை
நான் இறைவனிடம் வேண்டுகிறேன்
நான் இன்னும் பல பிறவிகள் எடுக்க வேண்டும்
ஒவ்வொரு பிறவியிலும் எனது அம்மாவின் கருவறை எனும்
சிம்மாசனத்தில் ஆனந்தமாக அமர வேண்டும்
என்று வேண்டுகிறேன்

சூரியனுக்கு இரவில் ஓய்வு
சந்திரனுக்கு பகலில் ஓய்வு
ஆனால் என் அம்மாவிற்கு ஓய்வே இருந்ததில்லை.
அதனால் தான் இறைவன் நிரந்தர ஓய்வு தந்தானோ?
எமது குடும்பத்தின் விலை மதிப்பில்லாத
பொக்கிஷத்தை இழந்து வாடுகிறோம்.
எங்களை யார் தேற்றுவார்?
நீங்கள் இல்லாத உலகத்தில் நாம் எப்படி வாழ்வோம்?
நீங்கள் எங்கள் குடும்பத்திற்கு தந்த எல்லாவற்றிற்கும்
கோடி நன்றிகள். உங்கள் பாதங்களில் எமது கண்ணீரை
காணிக்கையாக்குகின்றோம்.

உங்களின் 85ஆவது பிறந்தநாளை 25.3.23 அன்று
இறைவனின் திருப்பாதங்களில் ஆனந்தமாக கொண்டாடுங்கள்.
உங்களுக்கு எங்களின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்.
உங்களது ஆன்மா இறைவனின் பொற்பாதங்களில்
சாந்தி அடையட்டும்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

அன்பு மகள்
சிவதர்ஷினி சுகுமார்
நோர்வே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாமி எங்கள் மறையாத முழுநிலவு

நீண்ட நெடுந்தூரம் நிறைவாக பயணித்து
நிறைவான சேவைகளை நீர் அளித்தீர் பொது நோக்கில்
மருமகளெனை பிள்ளைபோல் மனநிறைவாய் நடாத்திவந்தீர்
தொலை தூரம் நானிருந்தும் தொடர்புகளை பேணிவந்தீர்
மறக்காமல் என்னுடன் தினம் மனம்விட்டு பேசிவந்தீர்
அன்றாடம் உம் நினைவு மாறாது எம்மனதில்
எங்கள் குடும்பத்தில் ஏற்றமிகு தலைவி நீரே
ஏன் பிரிந்து சென்றீரோ ஏங்கியே தவிக்கின்றோம்.
மாமி நீங்கள் எங்கள் மறையாத முழுநிலவு
உமைப்போல் யார்தானோ இனி வாழ்வில் எம்முடனே.

சித்திரா பார்த்திபன்
அன்பு மருமகள்
அவுஸ்திரேலியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் நினைவில் என்றுமே நீங்காத அன்பு மாமியார்

மனித வாழ்வில் நாம் அனைவரும் ஒருநாள் மரணிப்பது என்பது யதார்த்தமான உண்மை. எனினும் சிலரது இழப்பை எம்மால் ஏற்றுக் கொள்ள முடிவதில்லை. அந்த வகையில் என் தாய்க்கு நிகராக மிகவும் மதிக்கத்தக்கவராக வாழ்ந்த எனது மாமியாரின் பிரிவு துயரை என்னால் ஜீரணிக்க முடியவில்லை. எனது மனைவியை கரம் பிடித்த நாள் முதல் என்னையும் மற்றொரு பிள்ளையாக காத்து வந்ததை என்றுமே மறக்க முடியாது. அன்பு வார்த்தைகள் பேசியதை மட்டுமே நான் அவரிடம் அவதானித்த விடயம் ஆகும். என்றுமே என்னை கடிந்து பேசியதில்லை.

எனது மாமியாரை நான் பல சந்தர்ப்பங்களில் வியந்து பார்த்ததுண்டு. ஒரு சிறந்த குடும்ப தலைவியாக வாழ்ந்து வந்த அதே வேளை சமூகத்தின் முன்னேற்றத்திற்காகவும் பல வழிகளில் உதவிகள் புரிந்து வந்ததை என் கண்ணூடாக கண்டு கொண்டேன். உங்கள் மனதோ கள்ளம் கபடமற்ற குழந்தை உள்ளம். எல்லோரையும் அன்புடன் அரவணைத்து பாசம் காட்டி வாழ்ந்து வந்ததை நாம் அறிவோம்.

"தோன்றின் புகழொடு தோன்றுக - அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்கின்ற வள்ளுவனின் வாக்குக்கு ஏற்ப உங்கள் வாழ்க்கையில் மற்றவர்களுக்கு மத்தியில் என்றுமே புகழோடு வாழ்ந்து வந்தது உயர்வானதாகும்.

மனிதாபிமானம் மிக்க ஒருவராக இருந்து வந்தமை உங்கள் உயர் பண்புக்கு எடுத்துக்காட்டாகும். எச் சந்தர்ப்பத்திலும் மனதை தளர விடாது மற்றவர்களுக்கு அன்புடன் உங்கள் நிலையில் நின்று மாறாது கருணை உள்ளம் கொண்டவராக இருந்தமையும் சிறப்பம்சமாகும்.

ஏழைகளிடம் அன்பு கொண்ட தன்மை, நல்ல மாணாக்கர்களை இச்சமூகத்துக்கு கொடுத்தமை, எதிர்காலத்தில் சிறந்த குறிக்கோள்களை அடைவதற்காக குடும்பத்தினருடன் சேர்ந்து வாழ்ந்தமை, என்றுமே சிரித்த முகத்துடன் எல்லோரையும் வரவேற்று வாழ்ந்தமை, மற்றும் குடும்ப உறவினர்கள் அனைவரிடமும் எதுவித வேறுபாடும் இன்றி எல்லோரையும் அரவணைத்து நடாத்தியமை என்பன உங்களிடம் நான் கண்ட நற்பண்பு களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் நாம் எமது தாய் நாட்டுக்கு வரும் போது நீங்கள் இன் முகத்துடன் எங்களை வரவேற்று உபசரிக்கும் காலம் இல்லையே என்று நினைக்கும் பொழுது என் மனம் மிகவும் மன வேதனை அடைகிறது. உம்மைப்போல இத்தரணிதனில் இனி யார் வருவாரோ.

உங்கள் பிரிவு தாங்கொணாத் துயரத்தை எம் மத்தியில் ஏற்படுத்தி உள்ளது உங்கள் ஆத்மா சிவனின் பாதார விந்தங்களை அடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

ஓம் சாந்தி

அன்பு மருமகன்
கதிரவேல் சிற்றம்பலம்
லண்டன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பு காட்டி ஆதரித்த மாமியார்...

என் அன்பு மாமியாரின் பிரிவு துயர் கேட்டு மிகவும் மன வேதனை அடைந்தேன். எம்மை நீங்கள் சந்திக்கும் ஒவ்வொரு தருணத்திலும் எமக்கு அன்பு காட்டி, எம்மை அன்புடன் வரவேற்று உபசரிக்கும் தன்மையை என்னால் என்றுமே மறக்க முடியாது.

தங்களின் நற்குணங்களை நான் பல தருணங்களில் வியந்து பார்த்ததுண்டு. தங்கள் பிள்ளைகளைப் போலவே என்னையும் பரிவுடன் அன்பு காட்டி நடத்தியது தங்கள் பெரும்தன்மைக்கு எடுத்துக்காட்டாகும். உங்கள் பேரப்பிள்ளைகளும் தங்கள் பிரிவினால் தாங்கொணாத் துயரத்தை அடைந்துள்ளனர்.


மீண்டும் ஒருமுறை என் தாய் நாட்டுக்கு வரும் பொழுது உங்களை காண முடியாது என்பதை நினைக்கையில் என் மனம் வாடுகிறது. உங்கள் ஆத்மா சிவபதம் அடைவதற்கு எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கிறேன்.

அன்புடன் மருமகன்
முத்துராஜா சுகுமார்
நோர்வே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமணத்தின்போது....



60வது திருமண தினத்தின்போது....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்...

மூத்த அக்காவாக, தாயாக, ஆசிரியராக இருந்து என்னை பாதுகாத்து வளர்த்தீர்கள். பாசத்துடன் என்னை "ராசு" என்று அழைப்பீர்கள். கேட்டதெல்லாம் வாங்கித் தருவீர்கள். அத்தானைப் "பப்பா" என்று தான் அழைப்போம். நீங்கள் இருவரும் தாய் தகப்பன் மாதிரி. என் சிறுவயதில் உங்களுடன் கூடி பேசி சிரித்த நாட்கள் எத்தனை.

காடு, மலை, கடல் கடந்து கனடா நாட்டில் குடியமர்ந்து இருக்கின்றோம். உங்கள் முகத்தை பார்க்க முடியாமல் ஏங்கி தவிக்கின்றோம். எனக்கும் பவானிக்கும் இல்லற வாழ்வை தேடி தந்தீர்கள்.

பெரியத்தை உங்களைப் பற்றி அப்பா அம்மா சொல்வார்கள். உங்களுடன் பழகிய நாட்கள் குறைவு. உங்களை பார்க்க முடியவில்லை என்று எங்கள் மனம் ஏங்குகிறது. உங்கள் ஆத்மா சாந்தியடையட்டும்.

சாந்தி சாந்தி சாந்தி

உங்கள் நினைவுகளில் ஏங்கும்
கிருஷ்ணதாசன் முத்துக்குமார்
கிருஷ்ணதாசன் பவானி
கிருஷ்ணதாசன் செல்வகுமார்
செல்வகுமார் ஜானு
ரேமன் செல்வகுமாரி
ஷெல்டன் பிரியா
(செல்வகுமார் பிள்ளைகள்)
(கனடா)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அக்கா என்றழைக்க என் இதயத்தில்
## நிறைந்திருக்கும் உன் அழகு முகம்
## இனி எப்போது காண்பேன்...

முத்துக்குமார் ராசமணியின் குழந்தைகளாய் நாம் பிறந்தோம்..
ஆறு வயதில் நீயும், பிறந்த சிலநாளில் நானும் எம் தாயை இழந்தோம்....
தாயார் ராசமணியின் தாய்மாமன் வைரமுத்துவும் அவர் மனைவி சீதேவிப்பிள்ளையும் எமை உயிராக வளர்த்தெடுத்தார்கள்....
உன்கல்வி சிறப்புற 12 வயது முதல் 19 வயது வரை உன்னை தி/சண்முகா இந்துக்கல்லூரி விடுதியில் படிக்க வைத்தார் நம் பாட்டனார் வைரமுத்து...
நீயும் கல்வியை முறையாய் பயின்று 20 வயதில் ஆசிரியையானாய்...
நினைவுக்கு வருகிறது நாம் கடந்த காலங்கள்....
விளையாட்டு வேகத்தில் மறந்து வேப்பமரத்தடியில் வைத்திட்ட என் உணவை காகங்கள் சுவைத்து விட
நீயோ எனைக்கடிந்தாலும் விடுதி வரை அழைத்து சென்று உன் உணவை ஊட்டி விடுவாய்....
என் படிப்போடு நாடகம், பேச்சுப் போட்டிகளிலும் எனை ஊக்குவித்தாய்...
உன்னோடு பாலம்பட்டார் கோவிலுக்கு நடப்பது, படம் பார்க்கப் போவது இன்னும் மறக்க முடியவில்லை...
நீ விடுதியில் இருந்தபோது நான் உனக்கு வீட்டில் இருந்து தின்பண்டம் கொண்டு வருவேன்....
வேலை முடிந்து வரும்போது நீ எனக்காக பல தின்பண்டங்கள் வாங்கி வருவாய்.....
என் முதல் பாவாடை தாவணியை அழகாக உடுத்தி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலங்கரித்து அழகு பார்த்தாய்...
என் நினைவில் நாடகம், கவிதை, பேச்சு யாவிலும் நீ சகல கலா வல்லியன்றோ.....
அழகாய் உடை உடுத்து நீ நடந்து வருவது
என் இதயத்தில் சிற்பமாய்
இறுதி அவரை நிற்கிறது அன்பு அக்கா....
குடும்ப வாழ்க்கையிலும் கணவர் குழந்தைகளை கடமை கண்ணியமாய்
கருத்தோடு கவனித்தாய் .......
கல்வித்துறையும் மாணவர் வளர்ச்சியும்
உன் அயராத உழைப்பன்றோ....
உன் பணிகள் சிறப்புற உன் கணவரும் உன் வார்த்தை மாறாத் தருமராதலினால்..
உனக்கமைந்த மாமியாரும் உன் குடும்ப நலம்காத்த
இன்னுமொரு தாயன்றோ....
இறைவன எமக்களித்த இந்திரா, தேவி, ராசு, குட்டி, சாந்தி சகோதர்களும்
நம் நலம் கருதிய நம் சிற்றன்னை ராசம்மாவும் நம் அன்பு உறவன்றோ....
மூத்தவளாய் நீ பிறந்து அவர்களையும் அரவணைத்தாய்....,
திருமணமாகி வந்த ஆர்த்தி, கோகுலனையும் ஆசீர்வதித்தாய்..
கண் மூடி திறப்பதற்குள் உன் கண்ணை மூடி விட்டாய்...
கண்கள் ஆறாகச் சொரிகிறது
இதயத்தை இரும்பாக்கி இறைவனைக் கேட்கின்றேன் என் அன்பு அக்கா ஆத்மா சாந்தி அடையட்டும்?

சாந்தி, சாந்தி, சாந்தி

அன்புத் தங்கை

திருமதி. அருந்ததி தவரட்ணராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைந்து இரங்கல்

எங்கள் அன்புக்குரிய அக்கா
நீங்கள் தான்என் பாசத்திற்குரிய மூத்த அக்கா
"மறைமலர்ச்செல்வன்" என்னை "குட்டி" "குட்டி" எனக் கொஞ்சிக்
குலாவுவதை இனி எப்போது காண்பேன் அக்கா.

என் உள்ளம் கசிந்துருகி அழுகின்றேன்.
அக்கா என் உடன்பிறவா சகோதரியே "கிளி, நீர் சொல்லுவது
சரியாயிருக்கும்" - என என்னை முதன்மைபடுத்திய உங்கள்
நம்பிக்கை வார்த்தைகள்.
இனி எங்கே கேட்போம் அக்கா

அம்மாவிற்கு அம்மாவாய் என்னை அரவணைத்து காத்த என்
பெரியம்மா "கிருஷாந்த்" "கிருஷாந்த்" என்ற உங்கள் அன்புக்குரல்
என் காதில் அனுதினமும் ஒலிக்கின்றது.
பெரியம்மா, நீங்கள் இறையடி சேர என்றும் நான் பிரார்த்திக்கின்றேன்.

அத்தையாய், அம்மாவாய், ஆசானாய் பெரிய அத்தை நீங்கள் -
எனக்குப் பாசம் காட்டினீர்கள்
பாதியில் ஏன் எமை விட்டுப் பிரிந்தீர்கள்!
"ரூபி" "ரூபி" என இனி என்னை எப்போது அழைப்பீர்கள் அத்தை

பாட்டி, எங்கள் பாசமான பெரிய பாட்டி "சித்தார்த்",
"சிவன்யன் என்று இனி எம்மை கூப்பிட மாட்டீர்களா?
எமக்கு எதுவும் தெரியாத போது எங்கே போனீர்கள் எம்மை விட்டு!
"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்" என்பது வள்ளுவன் வாக்கு.
அது போல் எங்கள் உள்ளங்களில் நிலைத்து வாழ்ந்த நீங்கள் இறைவனடி
சேர பிராத்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!
மறைமலர்ச்செல்வன் (குட்டி) ஜெயக்குமாரி (கிளி)
யோக சொரூபி (ரூபி)
கிருஷாத் குமார்(கிஷாந்த்)
சித்தார்த்
ஷிவன்யன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கை மைத்துனர் புலம்பல்

அன்பே உருவான தாயின்
முதல் கருவில் அவதரித்து
நாநிலத்தில் ஓர் நிலவாய்
அவனியில் ஆசிரியையாய் உயர்ந்து
இல்லந்தனில் இன்பமாய் வாழ்ந்து
இனியவனின் தாரமாய் ஆனீர்
பேர் சொல்ல தலைமகன் தந்து
ஊருக்கு போதித்த உத்தமரானீர்
இனிய மூன்று குழந்தைகள் பெற்றெடுத்து
உற்றமும் சுற்றமும் மகிழ்ந்து நிற்க
பண்பாளர் பெயர் சொல்லும் பக்கங்களில்
அக்கா உமது பெயரும் நிலைக்கட்டும்
எங்கு பார்த்தாலும் உமது முகம் தெரிகிறது
எங்கு சென்றாலும் உன் குரல் கேட்கிறது
உனை இழந்து தவிக்கும் - இந்நிலை வருமென்று
கனவிலும் நினைக்கவில்லை மூத்தக்கா

தங்கை பற்குணதேவி சர்வானந்தன்
மைத்துனர் தம்பிஐயா சர்வானந்தன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலறியது தொலைபேசி...

அலைபேசியை எடுத்தேன்
செய்தி கேட்டேன்
இடி விழுந்த நாகம் போல்
பதறிப் போனேன்
செய்தி கேட்டு கணவன் பிள்ளைகள்
மனம் கலங்கி நின்றார்கள்
தாயாக சகோதரியாக ஆசிரியராக தெய்வமாக
எங்களை கட்டுப்பாடாக கண்ணியமாக
கடவுள் பக்தி உள்ளவராக
நற்சிந்தனையாக விருந்தோம்பல் செய்ய பழக்கி வைத்தீர்கள்
நீங்கள் செய்த சேவை எழுத்தில் அடங்காது
கணவர், சிந்துரிகா, சியானா, தினேஸ் பேரப் பிள்ளைகள்
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
இறைவனை பிராத்திக்கின்றோம்

சாந்தி சாந்தி சாந்தி

அக்கா உங்கள் நினைவுகளுடன்
மோகனமூர்த்தி காசிப்பிள்ளை
மோகனமூர்த்தி சாந்தினிதேவி
தினேஷ் சிந்துரிகா
மோகனமூர்த்தி சியானா
(சுவிஸ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பான அம்மம்மாவுக்கு
# பேரப்பிள்ளைகள் உருக்கத்துடன்

எங்கள் அம்மம்மா

எங்களை தாலாட்டி, சீராட்டி, உணவூட்டி மகிழ்வித்தீர்கள்.

எங்களுடைய பிறந்தநாளுக்கு பல பரிசுகள் அனுப்புவீர்கள்.

பிறந்தநாளுக்கு வாழ்த்துக்கள் சொல்வீர்கள்.

ஒவ்வொரு முறையும் நாம் அங்கு வரும்போது

இன்முகத்துடன் வரவேற்று அன்பாக வழி அனுப்பி வைப்பீர்கள்.

எங்கள் அம்மம்மா இனி நாம் எங்கே போய் தேடுவோம்.

நாம் அம்மம்மா என்று அழைக்க இனி

யார் எங்களுக்கு இருக்கிறார்.

காலம் உள்ளவரை எங்கள் அம்மம்மாவின் அன்பு முகம்

எங்கள் நினைவை விட்டு மாறாது.

கடைசியாக உங்களின் அன்பு முகத்தை பார்ப்பதற்கு

நாங்கள் கொடுத்து வைக்கவில்லை.

நாங்கள் உங்களுக்கு நன்றியுடன்

உங்கள் பாதங்களில் சிரம் தாழ்த்தி வணங்குகிறோம்.

உமது ஆன்மா சிவபதம் அடைய

இறைவனை வேண்டுகிறோம்.

ரிஷிதர் சுகுமார்,
சஞ்சீவ்தர் சுகுமார்
நோர்வே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் அன்பு பெரியம்மா

முத்துக்குமார் குடும்பத்தில்
மூத்தவளாய் நீ பிறந்தாய்...
பாசமாய் எல்லோரும் பெரியம்மா
என்றழைத்தோம்.....
நினைவுக்கு வருகிறது உன் பணி முடிந்து
அம்மாவை பார்க்க வரும்போது
தினம் ஒரு இனிப்பு வகை எமக்காக
வாங்கி வருவாய்...
நாமும் தேனீக்களாக உன்னை வட்டமிடுவது
தேயாத நினைவாக எம்முள்ளே உறைகிறது...
பள்ளிக்காலங்களில் நாம் உட்பட
மாணவர்கள் பெருமையாக கூறுவது
எம் காதுகளில் ஒலிக்கிறது.....
சமயமும் தமிழும் பத்மா ரீச்சரிடம் கற்றால்
பசுமையாக நினைவில் நிற்குமென்று....
பிறர்க்கு கொடுத்து வாழ்வதில்
உனக்கு வேறுபாடு இருந்ததில்லை....
பண்டிகைகள் வந்தால் உன் குழந்தைகள் போல்
எமக்கும் அழகாக
ஆடை தைத்து ,அணிய வைத்து,
அகம் மகிழ்ந்திடுவாய்......
நாம் நடனம் நாடகங்களில் சேர்ந்தபோது
கச்சிதமாய் அலங்கரித்து
மேடைக்கு அனுப்பி வைப்பாய்.....
உன்னிடம் பயின்ற மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகெங்கும் உன்னதமாய் தொழில்
ஆற்றுவது உண்மையில் பெருமையன்றோ....
புலமைப்பரிசு, பொதுத்தராதர பரிட்சைகளுக்கு
மாணவரை தயார்படுத்த உன் ஊன் உறக்கம் மறந்துழைத்தாய்...
உன் கடமை உணர்வுக்கு நன்றி சொல்ல வார்த்தை இல்லை...
உன் எழுத்து வன்மையும், பேச்சுத்திறனும், சொற்பொழிவுகளும்
நீ மறைந்தாலும் இப்புவியில் உன்னை
வாடாத மலராக வாழவைக்கும்....
இறுதிவரை சலிக்காமல் ஓடிஓடி உழைத்த உன் உடல்
12.02.2023 ஓய்வெடுத்து ஓய்ந்ததுவோ.....
என்ன சொல்லி எம்துயர் ஆற்றிடுவோம்
எம் அருமை பெரியம்மா......
வந்தவர்கள் யாவருமே ஓர்நாள் போவது தான் நியதி
என்று உண்மை உரைத்தாலும் உள்ளம் ஏற்க மறுக்கிறதே...
மனதை மரமாக்கி, கண்ணீரை காணிக்கையாக்கி,
பிரிய மனமின்றி பிரியாவிடை கொடுக்கின்றோம்.....
ஒப்பற்ற ஓய்வெடுத்து
உன் ஆத்மா சாந்தியில் உறங்கிடவே
இறைவனை இரு கரம் கூப்பி வணங்குகிறோம்.

பேறாமக்கள்

கலைமகள், சுதேசன், கீத்தா, சுபத்ரா, கம்சவாகினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெறா மக்கள் நினைவுகள்...

மண் மடியில் கண்ணுறங்க கடமையெல்லாம்
முடித்து விட்டீர்
மனதினிலே உள்ளதை உள்ளபடியே
கூறும் உங்கள் பண்பு போற்றுதற்குரியது
உன் இல்லம் நாடி வந்தவர்களுக்கு
உபசரித்து உறவாடி மகிழ்ந்தீர்கள், பெரியம்மா இல்லை
என்பதை எங்கள் உள்ளம் ஏற்க மறுக்கின்றதே.
எக்காலம் சென்றாலும் உங்களை மறவோம்.
பெரியம்மா நாங்கள் செய்யும் குறும்புகளுக்கெல்லாம்
சிரிப்பீர்கள். பெரி என்று சொல்லமாய் அழைப்போமே.
ஜென்மம் நிறைந்தது சென்றவர் வாழ்க!
சிந்தை கலங்கிட வந்தவர் வாழ்க!
நீரில் மிதந்திடும் கண்களும் காய்க!
நிம்மதி நிம்மதி இவ்விடம் சூழ்க!
சாந்தி சாந்தி சாந்தி

உங்கள் நினைவுகளில் வாடும் பெறா மக்கள்
சங்கர்,
விஜேந்திரா,
கிஷோகுமார்,
சிவதரணி
(கனடா, லண்டன், ஸ்ரீலங்கா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பு பெரியம்மாவுக்கு....

அம்மா இறந்தபின் உன்னில் என் அன்னையைக் கண்டேன்.
இன்னுமொரு தாயாக உன்னை உணர்ந்தேன்.
உன்னன்பை உரைப்பதற்கு வார்த்தைகள் எனக்கில்லை பெரியம்மா.
எம் குடும்ப நலம் விளங்க பாங்காக பல உதவிகள் நீ செய்தாய்.
சிந்தித்துப்பார்க்கின்றேன் உனக்கும் எனக்கும் உள்ள பந்தம் முற்பிறப்பின் தொடர்கதையாய் இப்பிறப்பில் தொடர்ந்ததுவோ
சக்தி..என்று நீ கூப்பிடும் போதெல்லாம் எனக்குள் ஒரு சக்தி உண்மையில் ஊற்றெடுக்கும்.
சக்தி என்னை விட்டுப்போகாதே.
எப்போதும் என்னுடன் இரு என்று கூறிவிட்டு எங்கு தொலை தூரம் சென்று விட்டாய் என்னன்புப் பெரியம்மா.
என் கவலைகளை தேற்றுவதற்கு இன்னுயிராய் நீயிருந்தாய் இனி எங்கு சொல்லி ஆறிடுவேன்....
என் தந்தை தாய் இருந்தவரை சரீரத்தால் யாவர்க்கும் சளைக்காமல் உதவி செய்வர் என்னால் முடிந்தவரை நானும் அதையே உனக்கும் மற்றவர்க்கும் செய்து திருப்தி கண்டேன்.
உன் இழப்பை நினைத்து வருந்துவதா அல்லது உன் ஆன்மா ஈடேற்றம் அடைந்தது என நினைத்து ஆறுதல் அடைவதா புரியாது புலம்புகின்றேன்.
மனம் என்ற ஒன்றை மனிதன் சுமக்கும் வரை நெஞ்சின் நினைவுகளும் மறக்க முடியாததே. கண்கள் கண்ணீரில் நிரம்ப உன் நினைவுகளை இதயத்தில் சுமந்து கொண்டு உன் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகின்றேன்.

உன் அன்பு சக்தி மயில்வாகனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சாய் ராம்

# பெரியம்மம்மா மாறுமா உன் நினைவு மறையுமா கணப்பொழுதில்......

மாசி மாதம் பன்னிரெண்டில்
மலர்ந்த காலை பொழுதினிலே
கண்விழித்துக் கேட்ட சேதி
கதி கலங்க வைத்ததுவே

அன்பான பெரியம்மம்மா
ஆறாத துயில் கொண்ட சேதி
அடி வேரை உலுப்பியதே
ஆரவாரம் இல்லாமல்

எனைப்பற்றி எனக்கே
புரியாத காலம் முதல்
உன் உயிரில் நான் புகுந்தேன்
இரண்டறவே கலந்து விட்டேன்

குழந்தைப் பருவம் முதல்
தவழ்ந்து நடைபயின்று
தாவித் திரியும் வரை
எனை தாங்கி நீ வாழ்ந்தாய்

காலைக் கதிரவன்
கண் விழித்து பார்க்கு முன்பே
கண்ணா வருவான் என
காத்திருப்பாய் எனக்காக

பார்பதற்கு சுணக்கம் என்றால்
பப்பா வந்திடுவார் வாசலுக்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பாக அழைத்து வந்து
சேர்த்திடுவார் உன்னிடமே

அன்புமிகு பாசத்தை
அளவின்றி கொடுத்தாயே
அரிசி மிட்டாய் வேண்டுமென்றால்
அக்கா கடை என் வசமே

ஆரம்ப பள்ளிக்கு எனை
அப்பா அம்மா அனுப்பு முன்னே
ஏற்றமிகு மனதுடனே
ஏடு தனை துவக்கி வைத்தாய்

கல்விதனை நான் பெற்று
கனவானாய் வாழ்வதற்கே
காலம் எல்லாம் நீ விதைத்தாய்
கனிவான வழிமுறைகள்

என் வாழ்வின் இலக்கினை
இடைவிடாது பெறுவதற்கு
உன் வாழ்வில் பங்களித்தாய்
உயர்ந்த மனதுடனே

வணிக வங்கி நேர்காணல்
வளமாக வரும் பொழுது
தணித்து வைத்தாய் என் கலக்கம்
தரமாக எதிர்கொண்டேன்

உன் ஆசி கிடைத்ததனால்
உயர்வு பெற்றேன் வாழ்வதனில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிக வங்கித் தொழிலதனை
வளமாக பெற்றிட்டேன்.

பெருந்தன்மை கொண்ட எங்கள்
பெரியம்மம்மா பிரிந்தபோது
சிறுமை பட்டு நான் இருந்தேன்
சிறகொடிந்த பறவையாக

அன்போடு அரவணைத்து
அமுதளித்த உன் கையை
கண்ணாலே காண்பதெப்போ?
கதி கலங்கி நிற்கின்றேன்

உன் வருகை அறிந்தாலோ
உள் மனது துடி துடிக்கும்
இனிப்பான சுவைப்பண்டம்
ஈர்ந்திடுவாய் எமக்காக

அன்புடனே பரிமாறும்
அரிதான சுவைப்பண்டம்
என்றுமே எமக்களிக்கும்
மாறாத பாசமது

மாறுமா உன் நினைவு
மறையுமா கணப்பொழுதில்
ஏங்கியே தவிக்கின்றேன்
இனி எப்போது உனை காண்பேன்

என்றும் அன்புப் பேரன்
உமாகாந்தன் நிருத்பவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Dear Periammamma,

Hearing the news that you are no longer with us has been a deeply sadening time for us all. I will never forget the times when I was younger and you would always visit our home in Colombo and bring me my favourite nuts and murukku. You were always so kind and showered me with compliments each time we met, and I will always remember the kind and caring soul you were. Even when we visited your home in Dehiwala, you would always offer us snacks and soda and always made sure we were looked after.

It was difficult seeing you in the hospital last month. You were unable to talk, but as I held your hand, you rubbed it, and I could see from your kind eyes that you were happy to see me. With Rasathi Sithi by your side, I could see clearly you were in caring and loving hands. As painful as it is to lose you, Im glad you were able to live a long and fulfilling life with your family and loving children.

I'm upset that we are no longer able to make new memories with you, but I will cherish the ones we had and look forward to meeting you again in heaven!

Lots of love from your,
Harrish Kutty (Harrishan)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உப்பிட்டவரை உள்ளளவும் நினை

அன்பே உருவான ரீச்சர்

எனது கணவன் நோய்வாய்ப்பட்டு இருந்த வேளையில் பல வழிகளிலும் பல்வேறு உதவிகள் செய்தீர்கள். உங்கள் வீட்டு தேவைகள் அனைத்திலும் என்னையும் ஒருவராக அழைப்பீர்கள். என் உயிர் இருக்கும் வரை உங்கள் நினைவுகள் என்னுடன் இருக்கும். உங்கள் ஆத்மா சாந்தி அடைய கடவுளை பிராத்திக் கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

என்றும் நன்றி உணர்வுடன்
தர்மராசா அன்னம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாம் பெற்ற நல்லுறவே

கோணேசர் மாதுமை
குடிகொண்ட பதிதனக்கு
எங்கோ இருந்து வந்தோம்
ஏங்கித் தவித்திருந்தோம்
நல்லதோர் நிலத்தில் பட்டு
நாமும் விளைந்து நின்றோம்
ஆசான் அல்லவா- நீங்கள்
லேசா புத்தி கூறி எமை
சித்தி பெற வைத்தீர்
கடிந்து பேசவில்லை
கட்டுப்பாடுகள் விதிக்கவில்லை
பிரித்துப் பார்க்கவில்லை
பேதங்கள் கொள்ளவில்லை
விட்டுத்தூரம் சென்றாலும்
சுகம் கேட்க மறப்பதில்லை
தனியாக நாம் இருந்தால்
துணையாக வந்திடுவீர்
சுக துக்கம் யாவிலும்
பங்கு கொண்டு பகிர்ந்திடுவீர்
தாயைப் போல நீர் இருந்து
தலை தடவிச் சென்றிடுவீர்-எம்
சிரமத்தை தானுணர்ந்து
கடவுள் போல உதவிடுவீர்
மௌனமாகப் பேசி தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் மகிழச் செய்திடுவீர்
அன்பு மொழி பேசி
அரவணைத்த தாய் நீங்கள் நெஞ்சுருகச் செய்து எம்மை
பிரிந்தெங்கு சென்றீர்கள்
உம் வதன முகமும்
நீர் உரைத்த அறமும்
வழிதவறும் போது எமை
வழிப்படுத்தும் ஆசானே
மறு பிறப்பு உண்டேல்-நாம்
மகவாக வேண்டுகிறோம்
விசுவநாத விசாலாட்சி தன்னோடு
வீரபத்திர சாமியும் - உம்
சாந்தி பெற வேண்டி
தினம் போற்றுகிறோம்

வீரகுலசிங்கம்,
சுபா, தசா, ரச்சு, அபி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு டீச்சர்

அன்பு டீச்சர்
உங்கள் குடும்பத்தில் நான் இணைந்த போது என்னை நீங்கள் மிகவும் பரிவுடனும், அன்புடனும் நடாத்தி வைத்ததை நான் மறவேன்.

நீங்கள் உணவருந்தும் போது உணவை என்னுடன் பகிர்ந்து கொண்டது என்னில் நீங்கள் வைத்த பாசத்தை காட்டுகிறது. அவ்வப்போது எனது குடும்பத்தாருக்கும் பல உதவிகள் புரிந்ததை நான் என்றுமே மறவேன். உங்கள் ஆன்மாவின் ஈடேற்றத்திற்காக இறைவனை வேண்டுகிறேன்.

பாசமுடன் ரஞ்சி
சமாது ஒழுங்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா என் தெய்வம்

– ஆக்கம் அமரர். பத்மலோஜனிதேவி தர்மலிங்கம்

அன்னை என்பதோர் அன்பின் வடிவம்
என்னே அவர்புகழ் எங்ஙனம் இயம்புவன்
ஈரைந்து திங்கள் என்தனைச் சுமந்து
ஈன்று புறந்தந்த என்னுயிர்த் தெய்வம்
நேசமும் அறிவும் நிறைத்து அன்பைப்
பாசமாய்க் கொட்டிய பண்பின் சிகரம்
தோளிலே கிடந்து துவண்டு புரண்டு
தாளினால் ஏற்றித் தலைமயிர் ஈர்த்து
வாளினுங் கூரிய வல்லுகிர் அதனால்
வாலை முகமதி வாரிக் குதறினும்
சேலைத் தலைப்பால் செவ்வா யமுதம்
சீராய்த் துடைத்து சீரமது கோதி
வாரி அணைத்து வதனம் வருடும்
ஆருயிர்த் தாய்க்கு அவனியில் ஆரிணை
குடுகுடு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கௌவியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
கையினாற் புடைத்தும் காலினால் உதைத்தும்
செய்யத் தகாத திருவினை செயினும்
கையைத் தகாத திருவினை செயினும்
கையைப் பற்றிக் கனிவுடன் அணைக்கும்
தையல் தாயே அன்றி யாருளர்
சீறடி நோகாது சிற்றிடை ஏந்தி
நூறாயிரம் அடி மக்கட் காக
ஆறாய் வியர்வை ஊற்ற நடக்கும்
அன்னையை விஞ்சிட அவனியில் ஆருளர்
அல்லும் பகலும் அருகே அமர்ந்து
சொல்லும் பொருளுமாய்க் கல்வி ஊட்டி
இனிய கதைகளாய் இதி காசங்களை
இனிதாய் என்தன் செவிக் குணவாக்கி
பசுமரத்தாணி போற் பதித்தே அகத்து
அன்பையும் பண்பையும் அறிவையும் அன்றி
என்னையும் எனக்கே ஈந்த என் அன்னை
ஓரைந்து ஆண்டில் ஓங்கிய விருட்சமாய்
பாரிலே பாவையைப் பூவை யாக்கிய
பத்தினித் தெய்வமே பத்தரை மாற்றுத்
தங்கமே தாயே மங்கையர் திலகமே
இங்கிப் புவியில் என் அங்க அசைவின்
ஒவ்வோர் அணுவிலும் அம்மா" உறைகிறாள்
அம்மா" இம்மா நிலத்தில் என்தெய்வம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் சுந்தரர் மாணிக்கவாசகர்

# நால்வர் துதி

பூழியர் கோன் வெப்பு ஒழித்த புகலியர் கோன் கழல் போற்றி
ஆழி மிசைக் கல் மிதப்பில் அணைந்த பிரான் அடி போற்றி
வாழி திரு நாவலூர் வன்தொண்டர் பதம் போற்றி
ஊழி மலி திரு வாதவூரர் திருத்தாள் போற்றி

சித்திரைச் சதயம் அப்பர் சிறந்த வைகாசி மூலம்
அத்தரைப் பணி சம்பந்தர் ஆனிமா மகத்தில் அந்த
முத்தமிழ் வாதவூரர் முதியநல் ஆடி தன்னில்
சுத்தமாஞ் சோதி நாளில் சுந்தரர் கயிலை சேர்ந்தார்.

அப்பருக்கு எண்பத்தொன்று அருள் வாதவூரருக்குச்
செப்பிய நாலெட்டில் தெய்வீகம் - இப்புவியில்
சுந்தரருக்கு மூவாறு தொல் ஞான சம்பந்தருக்கு
அந்தம் பதினாறு அறி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே. - ஞானசம்பந்தர்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்து அடி போற்று கின்றேனே. - திருமூலர்

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை. -கபிலதேவ நாயனார்

வாக்குண்டாம் நல்லமனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனிநுடங்காது பூக்கொண்டு
துப்பார்திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு. - ஔவையார்

மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதினில் முற்றுறக்
கண்ணுதல் உடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம். - கந்தபுராணம்

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய்நம துள்ளம் பழுக்கவும்
பெருகும் ஆழத்துப் பிள்ளையைப் பேணுவாம். -விருத்தாசலப் புராணம்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருஞானசம்பந்த நாயனார் அருளிய

# தேவாரம்

தோடுடைய செவியன்விடை
யேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசிஎன்
உள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந்
தேத்தஅருள் செய்த
பீடுடையபிர மாபுரம்மேவிய
பெம்மானிவ னன்றே.

அங்கமும் வேதமும் ஓதுநாவர்
அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதிதவழ் மாடவீதி
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
செங்கய லார்புனற் செல்வமல்கு
சீர் கொள்செங் காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தியாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே.

பூண்டங்கு மார்பின் இலங்கைவேந்தன்
பொன்னெடுந்தோள்வரை யாலடர்த்து
நூன்மறையோர் பரவ
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
மாமலர்ச் சோலைசூழ்ந்த
சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
காண்டங்கு தோள்பெயர்த் தெல்லியாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்ணாமுலை உமையாளொடும்
உடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை
திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள்
மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை
வழுவாவண்ணம் அறுமே.

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீள்
உடையுங் கொண்ட வுருவ மென்கொலோ.

மெய்யர் ஆகிப் பொய்யைநீக்கி
வேதனையைத் துறந்து
செய்யர் ஆனார் சிந்தையானே
தேவர் குலக் கொழுந்தே
நைவன் நாயேன் உன்றன்நாமம்
நாளும் நவிற்று கின்றேன்
வையமுன்னே வந்து நல்காய்
வலிவல மேயவனே.

சிறையாரு மடக்கிளியே யிங்கேவா தேனொடுபால்
முறையாலே யுணத்தருவன் மொய்பவளத் தொடுதரளந்
துறையாருங் கடற்றோணி புரத்தீசன் றுளங்குமிளம்
பிறையாளன் திருநாமம் எனக்கொருகாற் பேசாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோடுடையான் குழையுடையான்
அரக்கன்றன் தோளடர்ந்த
பீடுடையான் போர்விடையான்
பெண்பாக மிகப்பெரியான்
சேடுடையான் செங்காட்டங்
குடியுடையான் சேர்ந்தாடும்
காடுடையான் ஆடுடையான்
கணபதீச் சரத்தானே.

உண்ணற்கு அரிய நஞ்சை உண்டு
ஒரு தோழம் தேவர்
விண்ணில் பொலிய அமுதம் அளித்த
விடைசேர் கொடி அண்ணல்
பண்ணில் சிறை வண்டு அறைபூஞ் சோலைப்
புறவம் பதியாக
எண்ணில் சிறந்த இமையோர் ஏத்த
உமையோடு இருந்தானே.

நீர்உளான்தீயுளான் அந்தரத்துள்ளான்
நினைப்பவர் மனத்துளான் நித்தமா ஏத்தும்
ஊர்உளான் எனதுரை தனதுரையாக
ஒற்றைவெள்ளேறுஉகந்து ஏறிய ஒருவன்
பார்உளார் பாடலோடு ஆடல்அறாத
பண்முரன்று அஞ்சிறை வண்டினம் பாடும்
ஏர்உளார் பைம்பொழில் இலம்பையங் கோட்டூர்
இருக்கையாப்பேணிஎன்னெழில்கொள்வதில்லையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னுயிர்த் தோற்றமும் இறுதியும் ஆகி
முடியுடை அமரர்கள் அடிபணிந்து ஏத்தப்
பின்னிய சடைமிசைப் பிறைநிறை வித்த
பேரருளாளனார் பேணிய கோயில்
பொன்னியல் நறுமலர் புனலொடு தூபம்
சாந்தமும் ஏந்திய கையினர் ஆகிக்
கன்னியர் நாள்தொறும் வேடமே பரவும்
கழுமல நினைய நம் வினைகரிசு அறுமே.

கற்றாங்கு எரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்றா வெண்திங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே.

நல்லார் அறம்சொல்லப் பொல்லார் புறம்கூற
அல்லார் அலர்தூற்ற அடியார்க்கு அருள்செய்வான்
பல்லார் தலைமாலை அணிவான் பணிந்து ஏத்தக்
கல்லார் கடல்நாகைக் காரோ ணத்தானே.

நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள்ளே
றொன்றுடையானை உமையொருபாகம் உடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறஎன்னுள்ளங் குளிரும்மே.

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவழிந்திட் டைம்மேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென்
றருள்செய்வான் அமருங்கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென்றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி
முகில்பார்க்குந் திருவையாறே.

மாதர் மடப்பிடி யும்மட வன்னமு மன்னதோர்
நடை யுடைம் மலை மகள் துணையென மகிழ்வர்
பூதவி னப்படை நின்றிசை பாடவு மாடுவர்
அவர் படர் சடை நெடு முடியதொர் புனலர்
வேதமொ டேழிசை பாடுவ ராழ்கடல் வெண்டிரை
இரைந் நுரை கரை பொரு துவிம்மி நின்றயலே
தாதவிழ் புன்னை தயங்கு மலர்ச்சிறை வண்டறை
எழில் பொழில் குயில் பயில் தருமபு ரம்பதியே.

எங்கும் ஆகி நின்றானும்
இயல்புஅறி யப்படா
மங்கை பாகங் கொண்டானும்
மதிசூடு மைந்தனும்
பங்கமில் பதினெட் டொடு
நான்குக்கு உணர்வுமாய்
அங்கம் ஆறும்சொன் னானும்
ஐயாறுடை ஐயனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓதி யாரும்அறி வாரிலை
ஓதி உலகெலாம்
சோதி யாய்நிறைந் தான்சுடர்ச்
சோதியுட் சோதியான்
வேதி யாகிவிண் ணாகிமண்
ணோடுஎரி காற்றுமாய்
ஆதி யாகிநின் றானும்ஐ
யாறுடை ஐயனே.

ஆலம் உண்டுஅமு தம்
அமரர்க்கருள் அண்ணலார்
காலன் ஆருயிர் வீட்டிய
மாமணி கண்டனார்
சால நல்லடி யார்தவத்
தார்களும் சார்விட
மால யன்வணங் கும்மழ
பாடியெம் மைந்தனே.

சோதியைச் சுண்ணவெண் ணீறணிந் திட்டஎம்
ஆதியை ஆதியும் அந்தமும் இல்லாத
வேதியை வேதியர் தாம்தொழும் வெண்ணியின்
நீதியை நினையவல் லார்வினை நில்லாவே.

தந்தையார் போயினார் தாயரும்
போயினார் தாமும் போவார்
கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார்
பார்க்கின்றார் கொண்டு போவார்
எந்தநாள் வாழ்வதற்கே மனம்
வைத்தியால் ஏழை நெஞ்சே
அந்தண்ஆ ரூர்தொழுது உய்யலாம்(ம்)
மையல்கொண்டு அஞ்சல்நெஞ்சே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பினாற் கழிநிரைத் திறைச்சிமண்

சுவர்எறிந்து இதுநம் மில்லம்

புன்புலால் நாறுதோல் போர்த்துப்

பொல்லாமை யான்முகடு கொண்டு

முன்பெலாம் ஒன்பது வாய்தலார்

குரம்பையின் மூழ்கி டாதே

அன்பனா ரூர்தொழுது உய்யலாம்)

மையல்கொண்டு அஞ்சல் நெஞ்சே.

நெடிய மால் பிரமனு(ம்) நீண்டுமண்

ணிடந்தின்ன நேடிக் காணாப்

படிய னார் பவளம்போல் உருவனார்

பனிவளர் மலையாள் பாக

வடிவனார் மதிபொதி சடையனார்

மணியணி கண்டத்து எண்டோள்

அடிகள்ஆரூர் தொழுது உய்யலா(ம்)

மையல் கொண்டு அஞ்சல் நெஞ்சே.

குணங்கள் கூறியும் குற்றங்கள் பரவியும்

குரைகழல் அடிசேரக்

கணங்கள் பாடவும் கண்டவர் பரவவும்

கருத்தறிந் தவர்மேய

மணங்கொள் பூம்பொழில் அரிசிலின் வடகரை

வருபுனல் மாகாளம்

வணங்கும் உள்ளமோடு அணையவல் லார்களை

வல்வினை அடையாவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீற்றானை நீள்சடை
மேல்நிறை வுள்ளதோர்
ஆற்றானை அழகமர்
மென்முலை யாளையோர்
கூற்றானைக் குளிர்பொழிற்
கோழம்பம் மேவிய
ஏற்றானை யேத்துமின்
நும்மிடர் ஏகவே.

என்ன புண்ணியஞ் செய்தனை
நெஞ்சமே யிருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப்
பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு
வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி யாதரித் தேத்தியும்
பாடியும் வழிபடும் அதனாலே.

இடரினுந் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோஎமை யாளுமா
றீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னருள்
ஆவடு துறையரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழினுஞ் சாவினும் வருந்தினும்போய்
வீழினும் உனகழல் விடுவேனல்லேன்
தாழிளந் தடம்புனல் தயங்குசென்னிப்
போழிள மதிவைத்த புண்ணியனே
இதுவோஎமை யாளுமா
றீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னருள்
ஆவடு துறையரனே.

மண்ணின்நல் லவண்ணம்
வாழலாம் வைகலும்
எண்ணின்நல் லகதிக்கி
யாதுமோர் குறைவிலைக்
கண்ணின்நல் லஃதுறுங்
கழுமல வளநகர்ப்
பெண்ணின்நல் லாளொடும்
பெருந்தகை யிருந்ததே.

மானின்நேர்விழி மாதராய்வழு
திக்குமாபெருந் தேவிகேள்
பானல்வாயொரு பாலனீங்கிவன்
என்றுநீபரி வெய்திடேல்
ஆனைமாமலை ஆதியாய
இடங்களிற்பல அல்லல்சேர்
ஈனர்கட்கெளி யேனலேன்திரு
ஆலவாயரன் நிற்கவே.

கருத்தனே கருதார்புர மூன்றுஎய்த
ஒருத்த னேஉமை யாளொரு கூறனே
திருத்த னேதிரு வாரூர்எந் தீவண்ண
அருத்த என்எனை அஞ்சல் என்னாததே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே.

குற்றம்நீ குணங்கள்நீ கூடலால வாயிலாய்
சுற்றம்நீ பிரானும்நீ தொடஉந்திலங்கு சோதிநீ
கற்றநூற் கருத்துநீ அருத்தமின்பம் என்றிவை
முற்றுநீ புகழ்ந்துமுன் உரைப்பதன்மு கம்மனே.

கோல மாய நீள்மதிற் கூடல்ஆல வாயிலாய்
பால னாய தொண்டு செய்து பண்டும்இன்றும் உன்னையே
நீல மாய கண்டனே நின்னையன்றி நித்தலும்
சீல மாய சிந்தையில் தேர்வதில்லை தேவரே.

ஆதிஅந்தத் ஆயினாய் ஆலவாயில் அண்ணலே
சோதியந்தம் ஆயினாய் சோதியுள்ளொர் சோதியாய்
கீதம்வந்த வாய்மையால் கிளர்தருக்கி னார்க்கல்லால்
ஓதிவந்த வாய்மையால் உணர்ந்து ரைக்கலாகுமே.

கறையிலங்கு கண்டனே கருத்திலாக் கருங்கடல்
துறையிலங்கை மன்னனைத் தோளடர ஊன்றினாய்
மறையிலங்கு பாடலாய் மதுரையால வாயிலாய்
நிறையிலங்கு நெஞ்சினால் நினைப்பதே நியமமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்றுமை சேர்வது மெய்யினையே
உணர்வது நின்னருள் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே
கனல்விழி காய்வது காமனையே
அற்றம் மறைப்பதும் உன்பணியே
அமரர்கள் செய்வதும் உன்பணியே
பெற்று முகந்தது கந்தனையே
பிரம புரத்தை யுகந்தனையே.

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகனால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவா யாவதும் இதுவே.

அட்டமா சித்திகள் அணைதரு காளத்தி வட்டவார்
சடையனை வயலணி காழியான்
சிட்டநான் மறைவல ஞானசம் பந்தன்சொல்
இட்டமாப் பாடுவார்க் கில்லையாம் பாவமே.

கரும்புதேன் கட்டியுங் கதலியின் கனிகளும்
அரும்புநீர் முகலியின் கரையினி லணிமதி
ஒருங்குவார் சடையினன் காளத்தி யொருவனை
விரும்புவா ரவர்கடாம் விண்ணுல காள்வரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநாவுக்கரசு நாயனார் அருளிய தேவாரம்

கூற்றாயின வாறுவி லக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேஇர வும்பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே

நெஞ்சம்முமக் கேயிட மாகவைத்தேன்
நினையாதொரு போதும் இருந்தறியேன்
வஞ்சம்மிது வொப்பது கண்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
நஞ்சாகி வந்தென்னை நலிவதனை
நணுகாமல் துரந்து கரந்துமிஎர்
அஞ்சேலுமென் னீர்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்னாவில் மறந்தறியேன்
உலர்ந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள் ளுறுசூலை தவிர்த்தருளாய்
அலந்தேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலபல காமத்த ராகிப்
　　　பதைத்தெழு வார்மனத் துள்ளே
கலமலக் கிட்டுத் திரியுங்
　　　கணபதி யென்னுங் களிறும்
வலமேந் திரண்டு சுடரும்
　　　வான்கயி லாய மலையும்
நலமார் கெடிலப் புனலும்
　　　உடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை
　　　அஞ்ச வருவது மில்லை.

பத்தனாய்ப் பாட மாட்டேன்
　　　பரமனே பரம யோகீ
எத்தினாற் பத்தி செய்கேன்
　　　என்னைநீ இகழ வேண்டா
முத்தனே முதல்வா தில்லை
　　　அம்பலத் தாடு கின்ற
அத்தாவுன் ஆடல் காண்பான்
　　　அடியனேன் வந்த வாறே.

ஆதியும் அறிவுமாகி அறிவினுள் செறிவு மாகிச்
சோதியுள் சுடருமாகித் தூநெறிக் கொருவனாகிப்
பாதியிற் பெண்ணுமாகிப் பரவுவார் பாங்கராகி
வேதியர் வாழும் சேய்ஞல் விரும்புமாப் பாடியாரே.

நிருத்தனை நிமலன்றன்னை நீணிலம் விண்ணின் மிக்க
விருத்தனை வேதவித்தை விளைபொருள் மூலமான
கருத்தனைக் கடல்சூழ் நாகைக் காரோணம் கோயில்கொண்ட
ஒருத்தனை உணர்தலால்நாம் உய்ந்தவா நெஞ்சினீரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைந்தமா மணலைக் கூப்பி
நேசமோடு ஆவின் பாலைக்
கறந்துகொண்டு ஆட்டக் கண்டு
கறுத்ததன் தாதை தாளை
எறிந்தமா ணிக்குஅப்போதே
எழில்கொள்சண் டீசன்என்னச்
சிறந்தபேர் அளித்தார் சேறைச்
செந்நெறிச் செல்வ னாரே.

காயமே கோயி லாகக்
கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மை யாக
மனமணி இலிங்க மாக
நேயமே நெய்யும் பாலா
நிறைய நீர் அமைய ஆட்டிப்
பூசனை ஈசனார்க்குப்
போற்றவிக் காட்டி னோமே.

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்தபொற் பாதமும் காணப் பெற்றால்
மனி(த்)தப் பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தே

முடிகொண்ட மத்தமும் முக்கண்ணின்
நோக்கு முறுவலிப்பும்
துடிகொண்ட கையும் துதைந்த
வெண்ணீறும் சுரிகுழலாள்
படிகொண்ட பாகமும் பாய்புலித்
தோலும்என் பாவி நெஞ்சிற்
குடிகொண்ட வாதில்லை அம்பலக்
கூத்தன் குரைகழலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவாய்க் கிடந்துன் கழலே

நினையும் கருத்துடை யேன்

உருவாய்த் தெரிந்து உன்றன்நாமம்

பயின்றேன் உனதருளால்

திருவாய்ப் பொலியச் சிவாய

நமவென்று நீறணிந்தேன்

தருவாய் சிவகதி நீபா

திரிப்புலி யூர்அரனே.

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா

உன்னடி என் மனத்தே

வழுவாது இருக்க வரந்தர

வேண்டும்இவ் வையகத்தே

தொழுவார்க்கு இரங்கி இருந்தருள்

செய்பா திரிப்புலியூர்ச்

செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடை

மேல்வைத்த தீவண்ணனே.

அந்தமும் ஆதியும் ஆகிநின்

றீர்அண்டம் எண்திசையும்

பந்தமும் வீடும் பரப்புகின்

றீர்பசு ஏற்றுகந்தீர்

வெந்தழல் ஓம்பும் மிழலையுள்

ளீர் என்னைத் தென்திசைக்கே

உந்திடும் போது மறக்கினும்

என்னைக் குறிக்கொள்மினே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோவிப் பிறவியே.

அல்லல் என்செயும் அருவினை என்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என்செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனார்க்
கெல்லை யில்லதோர் அடிமைபூண் டேனுக்கே

பித்த னைப்பெருங் காடரங் காவுடை
முத்தனைமுளை வெண்மதி சூடியைச்
சித்த னைச்செம்பொன் னம்பலத் துள்நின்ற
அத்த னையடி யேன்மறந்து உய்வனோ.

பண்ணின் நேர்மொழி யாள்உமை பங்கரோ
மண்ணி னார்வலம் செய்ம்மறைக் காடரோ
கண்ணி னால்உமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே.

கணக்கி லாரையும் கற்றுவல் லாரையும்
வணக்கி லாநெறி கண்டுகொண் டாரையும்
தணக்கு வார்தணிப் பார்எப் பொருளையும்
பிணக்கு வாரவர் பேரெயி லாளரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்அடி யேனையும் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே.

தந்தை தாயொடு தாரம் என்னும் தளைப்
பந்தம் ஆங்குஅறுத் துப்பயில் வெய்திய
கொந்த விழ் பொழிற் கொண்டீச் சுரவனைச்
சிந்தை செய்மின் அவனடி சேரவே.

வைத்த மாடும் மனைவியும் மக்கள்நீர்
செத்த போது செறியார் பிரிவதே
நித்த நீலக் குடியர னைந்தினை
சித்த மாகிற் சிவகதி சேர்திரே.

ஏற்றானை ஏழுலகு மானான் தன்னை
யேழ்கடலு மேழ்மலையு மானான் தன்னைக்
கூற்றானைக் கூற்ற முதைத்தான் தன்னைக்
கொடுமழுவாள் கொண்ட தோர்கையான் தன்னைக்
காற்றானைத் தீயானை நீரு மாகிக்
கடிகமழும் புன்சடைமேற் கங்கை வெள்ள
ஆற்றானை ஆரூரி லம்மான் தன்னை
அறியா தடிநாயே னயர்த்த வாறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணியைத் தித்திக்குந் தேனைப் பாலைத்
தீங்கரும்பின் இன்சுவையைத் தெளிந்த தேறல்
குருமணியைக் குழல்மொந்தை தாளம் வீணை
கொக்கரையின் சச்சரியின் பாணி யானைப்
பருமணியைப் பவளத்தைப் பசும்பொன் முத்தைப்
பருப்பதத்தில் அருங்கலத்தைப் பாவந் தீர்க்கும்
அருமணியை ஆரூரி லம்மான் தன்னை
அறியா தடிநாயே னயர்த்த வாறே.

மனத்தகத்தான் தலைமேலான் வாக்கி னுள்ளான்
வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தஞ் சிரத்தின் மேலான்
ஏழண்டத் தப்பாலான் இப்பாற் செம்பொன்
புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதி னுள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றினுள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத் துச்சி யுள்ளான்
காளத்தி யானவனென் கண்ணு ளானே.

அரியானை அந்தணர்தம் சிந்தை யானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்குந்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கள்தங் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணுகேன் என்சொல்லி எண்ணு கேனோ

எம்பெருமான் திருவடியே எண்ணி னல்லால்

கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்

கழலடியே கைதொழுது காணின் அல்லால்

ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்

ஒக்க அடைக்கும்போ துணர மாட்டேன்

புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன்

பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

பொன்னொத்த மேனிமேற் பொடியுங் கண்டேன்

புலித்தோ லுடைகண்டேன் புணரத் தன்மேல்

மின்னொத்த நுண்ணிடையாள் பாகங் கண்டேன்

மிளிர்வதொரு பாம்பும் அரைமேற் கண்டேன்

அன்னத்தே ரூர்ந்த அரக்கன் தன்னை

அலற அடர்ந்திட்ட அடியுங் கண்டேன்

சின்ன மலர்க்கொன்றைக் கண்ணி கண்டேன்

சிவனைநான் சிந்தையுட் கண்டவாறே.

திருநாமம் அஞ்செழுத்தும் செப்பா ராகில்

தீவண்ணர் திறமொருகால் பேசா ராகில்

ஒருகாலுந் திருக்கோயில் சூழா ராகில்

உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணா ராகில்

அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகில்

அளியற்றார் பிறந்தவா றேதோ வென்னில்

பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப்

பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின் றாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதி யென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே.

நீரேறு திருமேனி யுடையான் கண்டாய்
நெற்றிமே லொற்றைக்கண் நிறைந்தான் கண்டாய்
கூறாக உமைபாகங் கொண்டான் கண்டாய்
கொடியவிட முண்டிருண்ட கண்டன் கண்டாய்
ஏறேறி யெங்குந் திரிவான் கண்டாய்
ஏழுலகும் ஏழ்மலையு மானான் கண்டாய்
மாறானார் தம்அரணம் அட்டான் கண்டாய்
மழபாடி மன்னு மணாளன் றானே.

துறந்தார்தந் தூநெறிக்கண் சென்றே னல்லேன்
துணைமாலை சூட்டநான் தூயே னல்லேன்
பிறந்தேன்நின் திருவருளே பேசி னல்லாற்
போசாத நாளெல்லாம் பிறவா நாளே
செறிந்தார் மதிலிலங்கைக் கோமான் தன்னைச்
செறுவரைக்கீ ழடர்த்தருளிச் செய்கை யெல்லாம்
அறிந்தேன் அடியேனை அஞ்சே லென்னாய்
ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி

மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி

ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி

ஓவாத சத்தத் தொலியே போற்றி

ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி

ஆறங்கம் நால்வேத மானாய் போற்றி

காற்றாகி யெங்குங் கலந்தாய் போற்றி

கயிலை மலையானே போற்றி போற்றி.

அன்றாலின் கீழிருந்தங் கறஞ்சொன் னானை

அகத்தியனை யுகப்பானை அயன்மால் தேட

நின்றானைக் கிடந்தகடல் நஞ்சுண் டானை

நேரிழையைக் கலந்திருந்தே புலன்க ளைந்தும்

வென்றானை மீயச்சூர் மேவி னானை

மெல்லியலாள் தவத்தினிறை யளக்க லுற்றுச்

சென்றானைத் திருவீழி மிழலை யானைச்

சேராதார் தீநெறிக்கே சேர்கின் றாரே.

பேரா யிரம்பரவி வானோ ரேத்தும்

பெம்மானைப் பிரிவிலா அடியார்க் கென்றும்

வாராத செல்வம் வருவிப் பானை

மந்திரமுந் தந்திரமும் மருந்து மாகித்

தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னைத்

திரிபுரங்கள் தீயெழத்திண் சிலைகைக் கொண்ட

போரானைப் புள்ளிருக்கு வேளு ரானைப்

போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுத்தானை இலங்கையர்கோன் சிரங்கள் பத்தும்
எழுநரம்பின் இன்னிசைகேட் டின்புற் றானை
அறுத்தானை அடியார்தம் அருநோய் பாவம்
அலைகடலில் ஆலால முண்டு கண்டங்
கறுத்தானைக் கண்ணழலாற் காமன் ஆகங்
காய்ந்தானைக் கனன்மழுவுங் கலையு மங்கை
பொறுத்தானைப் புள்ளிருக்கு வேளு ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே.

கற்றவர்க ளுண்ணுங் கனியே போற்றி
கழலடைந்தார் செல்லுங் கதியே போற்றி
அற்றவர்கட் காரமுத மானாய் போற்றி
அல்லலறுத் தடியேனை ஆண்டாய் போற்றி
மற்றொருவ ரொப்பில்லா மைந்தா போற்றி
வானவர்கள் போற்றும் மருந்தே போற்றி
செற்றவர்தம் புரமெரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவ்னுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்
தன்னை மறந்தாள்தன் நாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானவன் காண் வானவர்க்கும் மேல் ஆனான் காண்
வடமொழியும் தென் தமிழும் மறைகள் நான்கும்
ஆனவன் காண் ஆன் ஐந்தும் ஆடினான் காண் ஐயன்
காண் கையில் அனல் ஏந்தி ஆடும்
கானவன் காண் கானவனுக்கு அருள் செய்தான் காண்
கருதுவார் இதயத்துக் கமலத்து ஊறும்
தேன் அவன் காண் சென்று அடையாச் செல்வன் தான் காண்
சிவன் அவன் காண் சிவபுரத்து எம் செல்வன் தானே.

அடுத்தானை யுரித்தானை யருச்சுனற்குப் பாசுபதம்
கொடுத்தானைக் குலவரையே சிலையாகக் கூரம்பு
தொடுத்தானைப் புரமெரியச் சுனைமல்கு கயிலாயம்
எடுத்தானைத் தடுத்தானை யென்மனத்தே வைத்தேனே.

தூண்டு சுடரனைய சோதி கண்டாய்
தொல்லமரர் சூளா மணிதான் கண்டாய்
காண்டற் கரிய கடவுள் கண்டாய்
கருதுவார்க் காற்ற எளியான் கண்டாய்
வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்
மெய்ந்நெறி கண்டாய் விரத மெல்லாம்
மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் றானே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுந்தரமூர்த்தி நாயனார்
## அருளிய தேவாரம்

பித்தாபிறை சூடீபெரு
	மானே அருளாளா
எத்தான்மற வாதேநினைக்
	கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
	நல்லூர் அருட்டுறையுள்
அத்தாஉனக் காளாயினி
	அல்லேன்எனல் ஆமே.

தாழ்வெனும் தன்மை விட்டுத்
	தனத்தையே மனத்தில் வைத்து
வாழ்வதே கருதித் தொண்டர்
	மறுமைக்குஒன்று ஈய கில்லார்
ஆழ்குழிப் பட்ட போது
	அலக்கணில் ஒருவர்க்கு ஆவர்
யாழ்முயன்று இருக்கும் ஆரூர்
	அப்பனே அஞ்சி னேனே.

நீள நினைந்தடி யேனுமை
	நித்தலுங் கைதொழுவேன்
வாளன கண்மட வாளவள்
	வாடி வருந்தாமே
கோளிலி எம்பெரு மான்குண்டை
	யூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
ஆளிலை எம்பெரு மானவை
	அட்டித் தரப்பணியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னார் மேனியனே
புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல்
மிளிர்கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே
மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால்
இனியாரை நினைக்கேனே.

பண்ணிடைத் தமிழொப்பாய் பழத்தினிற் சுவையொப்பாய்
கண்ணிடை மணியொப்பாய் கடுவிருட் சுடரொப்பாய்
மண்ணிடை அடியார்கள் மனத்திடர் வாராமே
விண்ணிடைக் குருகாவூர் வெள்ளடை நீயன்றே.

தம்மையேபுகழ்ந் திச்சைபேசினுஞ்
சார்வினுந்தொண்டர் தருகிலாப்
பொய்ம்மையாளரைப் பாடாதேயெந்தை
புகலூர்பாடுமின் புலவீர்காள்
இம்மையேதருஞ் சோறுங்கூறையும்
ஏத்தலாமிடர் கெடலுமாம்
அம்மையேசிவ லோகமாள்வதற்
கியாதுமையுற வில்லையே.

தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்
திரு நீல கண்டத்துக் குயவனார்க்கு அடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான் தன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெல்லுமா மிக வல்ல மெய்ப்பொருளுக்கு அடியேன்
விரி பொழில் சூழ் குன்றையார் விறல் மிண்டற்கு அடியேன்
அல்லி மென் முல்லை அம்தார் அமர் நீதிக்கு அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிச்சார்ந்த அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

காதல் செய்து களித்துப் பிதற்றிக்
கடிமா மலரிட்டுனை ஏத்தி
ஆதல் செய்யும் அடியார் இருக்க
ஐயங் கொள்வது அழகிதே
ஓதக் கண்டேன் உன்னை மறவேன்
உமையாள் கணவா எனையாள்வாய்
ஆதற் பழனக் கழனிக் கச்சூர்
ஆலக் கோயில் அம்மானே.

ஐயனை அத்தனை ஆளுடை ஆமாத்தூர் அண்ணலை
மெய்யனை மெய்யர்க்கு மெய்ப்பொரு ளான விமலனை
மையனை மையணி கண்டனை வன்றொண்டன் ஊரன்சொல்
பொய்யொன்று மின்றிப் புலம்புவார் பொற்கழல் சேர்வரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றுப் பற்றெனக் கின்றி நின்றிருப்
பாத மேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேனி னிப்பிற
வாத தன்மைவந் தெய்தினேன்
கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்ற வாவுனை நான்ம றக்கினுஞ்
சொல்லும் நாநமச்சி வாயவே.

பொய்யே செய்து புறம்புறமே
திரிவேன் றன்னைப் போகாமே
மெய்யே வந்திங் கெனையாண்ட
மெய்யா மெய்யர் மெய்ப்பொருளே
பையா டரவம் அரைக்கசைத்த
பரமா பழைய னூர்மேய
ஐயா ஆலங் காடாவுன்
அடியார்க் கடியேன் ஆவேனே.

கணக்கி லாரையும் கற்றுவல் லாரையும்
வணக்கி லாநெறி கண்டுகொண் டாரையும்
தணக்கு வார்தணிப் பார்எப் பொருளையும்
பிணக்கு வாரவர் பேரெயி லாளரே.

நற்றமிழ் வல்ல ஞானசம் பந்தன்
நாவினுக்கு அரையன் நாளைப்போ வானும்
கற்ற சூதன்நற் சாக்கியன் சிலந்தி
கண்ணப் பன்கணம் புல்லன்என் றிவர்கள்
குற்றம் செய்யினும் குணம்எனக் கருதும்
கொள்கை கண்டுநின் குறைகழல் அடைந்தேன்
பொற்றி ரள்மணிக் கமலங்கள் மலரும்
பொய்கை சூழ்திருப் புன்கூர் உளானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவி னால்மிக்க அறுவகைச் சமயத்து
அவ்வவர்க்கு அங்கே ஆரருள் புரிந்து
எரியு மாகடல் இலங்கையர் கோனைத்
துலங்க மால்வரைக் கீழ்அடர்த் திட்டுக்
குறிக்கொள் பாடலின் இன்னிசை கேட்டுக்
கோல வாளொடு நாளது கொடுத்த
செறிவு கண்டுநின் திருவடி அடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூர் உளானே.

மாய மாய மனங்கெடுப் பானை
மனத்து ளேமதி யாய்இருப் பானைக்
காய மாயமும் ஆக்குவிப் பானைக்
காற்று மாய்க்கன லாய்க்கழிப் பானை
ஓயு மாறுரு நோய்புணர்ப் பானை
ஒல்லை வல்வினை கள்கெடுப் பானை
வேய்கொள் தோள்உமைப் பாகனை நீடூர்
வேந்த னைப்பணி யாவிட லாமே.

வெந்த நீறுமெய் பூசவல் லானை
வேத மால்விடை ஏறவல் லானை
அந்தம் ஆதிஅறி தற்கரி யானை
ஆறலைத் தசடை யானைஅம் மானைச்
சிந்தை யென்றடு மாற்றறுப் பானைத்
தேவ தேவனென் சொல்முனி யாதே
வந்தென் உள்ளம்புகும் வாழ்கொளி புத்தூர்
மாணிக்கத் தைமறந் தென்நினைக் கேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னும் மெய்ப்பொரு ளும்தரு வானைப்
போக முந்திரு வும்புணர்ப் பானைப்
பின்னை என்பிழை யைப்பொறுப் பானைப்
பிழையெ லாந்தவி ரப்பணிப் பானை
இன்ன தன்மையன் என்றறி வொண்ணா
எம்மா னைஎளி வந்தபி ரானை
அன்னம் வைகும் வயற்பழ னத்தணி
ஆரூரானை மறக்கலு மாமே.

கரியா னைஉரி கொண்டகை யானைக்
கண்ணின் மேலொரு கண்ணுடை யானை
வரியா னைவருத் தங்களை வானை
மறையா னைக்குறை மாமதி சூடற்
குரியா னைஉல கத்துயிர்க் கெல்லாம்
ஒளியா னைஉகந் துள்கிநண் ணாதார்க்
கரியா னைஅடி யேற்கெளி யானை
ஆரூ ரானை மறக்கலு மாமே.

குற்றந் தன்னொடு குணம்பல பெருக்கிக்
கோல நுண்ணிடை யாரொடு மயங்கிக்
கற்றி லேன்கலை கள்பல ஞானங்
கடிய ஆயின கொடுமைகள் செய்தேன்
பற்ற லாவதோர் பற்றுமற் றில்லேன்
பாவி யேன்பல பாவங்கள் செய்தேன்
எற்று ளேன்எனக் குய்வகை அருளாய்
இடைம ருதுறை எந்தைபி ரானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலந் தானுகந் தமுதுசெய் தானை
ஆதி யைஅம ரர்தொழு தேத்துஞ்
சீலந் தான்பெரி தும்முடை யானைச்
சிந்திப் பாரவர் சிந்தையு ளானை
ஏல வார்குழ லாள்உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பனெம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே.

சிந்தித் தென்றும் நினைந்தெழு வார்கள்
சிந்தை யில்திக ழுஞ்சிவன் றன்னைப்
பந்தித் தவினைப் பற்றறுப் பானைப்
பாலோ டானஞ்சும் ஆட்டுகந் தானை
அந்த மில்புக ழாள்உமை நங்கை
ஆத ரித்து வழிபடப் பெற்ற
கந்த வார்சடைக் கம்பனெம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே.

அன்ற யன்சிரம் அரிந்ததிற் பலிகொண்
டமர ருக்கருள் வெளிப்படுத் தானைத்
துன்று பைங்கழ லிற்சிலம் பார்த்த
சோதி யைச்சுடர் போலொளி யானை
மின்ற யங்கிய இடைமட மங்கை
மேவும் ஈசனை வாசமா முடிமேற்
கொன்றை யஞ்சடைக் குழகனை அழகார்
கோலக் காவினிற் கண்டுகொண் டேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளும் இன்னிசை யாற்றமிழ் பரப்பும்

ஞான சம்பந்த னுக்குல கவர்முன்

தாளம் ஈந்தவன் பாடலுக் கிரங்குந்

தன்மை யாளனை என்மனக் கருத்தை

ஆளும் பூதங்கள் பாடநின் றாடும்

அங்க ணன்றனை எண்கணம் இறைஞ்சுங்

கோளி லிப்பெருங் கோயிலுள் ளானைக்

கோலக் காவினிற் கண்டுகொண் டேனே.

நீறு தாங்கிய திருநுத லானை

நெற்றிக் கண்ணனை நிரைவளை மடந்தை

கூறு தாங்கிய கொள்கையி னானைக்

குற்றம் இல்லியைக் கற்றையஞ் சடைமேல்

ஆறு தாங்கிய அழகனை அமரர்க்

கரிய சோதியை வரிவரால் உகளுஞ்

சேறு தாங்கிய திருத்தினை நகருட்

சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே.

அணிகொள் ஆடையம் பூண்மணி மாலை

அமுது செய்தமு தம்பெறு சண்டி

இணைகொள் ஏழெழு நூறிரு பனுவல்

ஈன்ற வன்றிரு நாவினுக் கரையன்

கணைகொள் கண்ணப்பன் என்றிவர் பெற்ற

காத லின்னருள் ஆதரித் தடைந்தேன்

திணைகொள் செந்தமிழ் பைங்கிளி தெரியுஞ்

செல்வத் தென்றிரு நின்றியூ ரானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெருண்ட வாயிடை நூல்கொண்டு சிலந்தி
சித்தி ரப்பந்தர் சிக்கென இயற்றச்
சுருண்ட செஞ்சடை யாயது தன்னைச்
சோழன் ஆக்கிய தொடர்ச்சிகண் டடியேன்
புரண்டு வீழ்ந்துநின் பொன்மலர்ப் பாதம்
போற்றி போற்றியென் றன்பொடு புலம்பி
அருண்டென் மேல்வினைக் கஞ்சிவந் தடைந்தேன்
ஆவ டுதுறை ஆதிஎம் மானே.

நல்லிசை ஞானசம் பந்தனும் நாவினுக்
கரசரும் பாடிய நற்றமிழ் மாலை
சொல்லிய வேசொல்லி ஏத்துகப் பானைத்
தொண்ட னேன்அறி யாமை அறிந்து
கல்லி யல்மனத் தைக்கசி வித்துக்
கழலடி காட்டியென் களைகளை அறுக்கும்
வல்லியல் வானவர் வணங்க நின்றானை
வலிவ லந்தனில் வந்துகண் டேனே.

மங்கை பங்கனை மாசிலா மணியை
வான நாடனை ஏனமோ டன்னம்
எங்கு நாடியுங் காண்பரி யானை
ஏழை யேற்கெளி வந்தபி ரானை
அங்கம் நான்மறை யால்நிறை கின்ற
அந்த ணாளர் அடியது போற்றும்
நங்கள் கோனைநள் ளாறனை அமுதை
நாயி னேன்மறந் தென்நினைக் கேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணின் மேல்மயங் கிக்கிடப் பேனை
வலிய வந்தெனை ஆண்டுகொண் டானே
கண்ணி லேன்உடம் பில்லடு நோயாற்
கருத்த ழிந்துனக் கேபொறை ஆனேன்
தெண்ணி லாஎறிக் குஞ்சடை யானே
தேவ னேதிரு வாவடு துறையுள்
அண்ண லேயெனை அஞ்சலென் றருளாய்
ஆரெ னக்குற வமரர்கள் ஏறே.

பிழைத்த பிழையொன் றறியேன்நான்
பிழையைத் தீரப் பணியாயே
மழைக்கண் நல்லார் குடைந்தாட
மலையும் நிலனுங் கொள்ளாமைக்
கழைக்கொள் பிரசங் கலந்தெங்குங்
கழனி மண்டிக் கையேறி
அழைக்குந் திரைக்கா விரிக்கோட்டத்
தையா றுடைய அடிகளோ.

வாழ்வாவது மாயம்மிது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய்செய்த பறிதான்
தாழாதறஞ் செய்ம்மின்தடங் கண்ணான்மல ரோனுங்
கீழ்மேலுற நின்றான்றிருக் கேதாரமெ னீரே.

நத்தார்படை ஞானன்பசு
வேறிந்நனை கவுள்வாய்
மத்தம்மத யானையுரி
போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு
பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்திருக்
கேதீச்சரத் தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெற்றிக்கண் ணுடையானை
நீறேறுந் திருமேனிக்
குற்றமில் குணத்தானைக்
கோணாதார் மனத்தானைப்
பற்றிப்பாம் பரையார்த்த
படிறன்றன் பனங்காட்டூர்ப்
பெற்றொன்றே றும்பிரானைப்
பேசாதார் பேச்சென்னே.

பேணா தொழிந்தேன் உன்னைய லாற்பிற தேவரைக்
காணா தொழிந்தேன் காட்டுதி யேலின்னங் காண்பன்நான்
பூணாண் அரவா புக்கொளி யூரவி நாசியே
காணாத கண்கள் காட்டவல் லகறைக் கண்டனே.

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப்
பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று
முகத்தால் மிகவாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள்
அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர்
வாழ்ந்து போதீரே

தானெனை முன்படைத் தானத
றிந்துதன் பொன்னடிக்கே
நானென பாடலந் தோநாயி
னேனைப் பொருட்படுத்து
வானெனை வந்தெதிர் கொள்ளமத்
தயானை அருள்புரிந்து
ஊனுயிர் வேறுசெய் தான்நொடித்
தான்மலை உத்தமனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திரன் மால்பிர மன்னெழி
லார்மிகு தேவரெல்லாம்
வந்தெதிர் கொள்ளஎன் னைமத்த
யானை அருள்புரிந்து
மந்திர மாமுனி வர்இவ னாரென
எம்பெருமன்
நந்தமர் ஊரனென் றான்நொடித்
தான்மலை உத்தமனே.

வெல்லும் வெண்மழு ஒன்றுடை யானை
வேலைநஞ் சுண்ட வித்தகன் தன்னை
அல்லல் தீர்த்தருள் செய்யவல் லானை
அரும றையவை அங்கம்வல் யானை
எல்லை யில்புக ழாள்உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
நல்ல கம்பனை எங்கள் பிரானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே.

பண்ணிடைத் தமிழ்ஒப்பாய்
பழத்தினில் சுவையொப்பாய்
கண்ணிடை மணியொப்பாய்
கடுஇருள் சுடரொப்பாய்
மண்ணிடை அடியார்கள்
மனத்திடர் வாராமே
விண்ணிடைக் குருகாவூர்
வெள்ளடை நீயன்றே.

புலியூர்ச் சிற்றம் பலத்தாய் புகலூர்ப் போதா மூதூரா
பொலிசேர் புரமூன் றெரியச் செற்ற புரிபுன் சடையானே
வலிசேர் அரக்கன் தடக்கை ஐஞ்ஞான் கடர்த்த மதிசூடீ
கலிசேர் புறவிற் கடவூ ராளீ காண அருளாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய
# திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்
துன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி
சயசய போற்றியென்னும்
கைதான் நெகிழ விடேன்உடை
யாய்என்னைக் கண்டுகொள்ளே

நாடகத்தால் உன்னடியார்
போல்நடித்து நான்நடுவே
வீடகத்தே புகுந்திடுவான்
மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே
இடையறா அன்புனக்கென்
ஊடகத்தே நின்றுருகத்
தந்தருள்எம் உடையானே.

சிந்தனைநின் றனக்காக்கி நாயி னேன்றன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கிஐம் புலன்கள் ஆர
வந்தெனைஆட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே உன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே இரண்டுமிலித் தனிய னேற்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடு கின்றிலை கூத்துடை

யான்கழற் கன்பிலை என்புருகிப்

பாடு கின்றிலை பதைப்பதும்

செய்கிலை பணிகிலை பாதமலர்

சூடு கின்றிலை சூட்டுகின்

றதுமிலை துணையிலி பிணநெஞ்சே

தேடு கின்றிலை தெருவுதோ

றலறிலை செய்வதொன் றறியேனே.

செய்வ தறியாச் சிறுநாயேன்

செம்பொற் பாத மலர்காணாப்

பொய்யர் பெறும்பே றத்தனையும்

பெறுதற் குரியேன் பொய்யிலா

மெய்யர் வெறியார் மலர்ப்பாதம்

மேவக் கண்டுங் கேட்டிருந்தும்

பொய்ய னேன்நான் உண்டுடுத்திங்

கிருப்ப தானேன் போரேறே.

போற்றியோ நமச்சி வாய

புயங்கனே மயங்கு கின்றேன்

போற்றியோ நமச்சி வாய

புகலிடம் பிறிதொன் றில்லை

போற்றியோ நமச்சி வாய

புறமெனைப் போக்கல் கண்டாய்

போற்றியோ நமச்சி வாய

சயசய போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசப் பட்டேன் நின்னடி
யாரில் திருநீறே
பூசப் பட்டேன் பூதல
ரால்உன் அடியானென்
றேசப் பட்டேன் இனிப்படு
கின்ற தமையாதால்
ஆசைப் பட்டேன் ஆட்பட்
டேன்உன் அடியேனே.

யானேபொய் என்நெஞ்சும் பொய்
என் அன்பும்பொய்
ஆனால் வினையேன் அழுதால்
உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின்
தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன்
உனைவந் துறுமாறே.

பாட வேண்டும்நான் போற்றி நின்னையே
பாடி நைந்துநைந் துருகி நெக்குநெக்
காட வேண்டும்நான் போற்றி அம்பலத்
தாடு நின்கழற் போது நாயினேன்
கூட வேண்டும்நான் போற்றி இப்புழுக்
கூடு நீக்கெனைப் போற்றி பொய்யெலாம்
வீட வேண்டும்நான் போற்றி வீடுதந்
தருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடையவ னேனைக் கருணையி
னாற்கலந் தாண்டுகொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண்
டாய்விறல் வேங்கையின்தோல்
உடையவ னேமன்னும் உத்தர
கோசமங் கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேன்எம்பி
ரான்என்னைத் தாங்கிக்கொள்ளே.

இந்திரனும் மாலயனும் ஏனோரும் வானோரும்
அந்தரமே நிற்கச் சிவனவனி வந்தருளி
எந்தரமும் ஆட்கொண்டு தோட்கொண்ட நீற்றனாய்ச்
சிந்தனையை வந்துருக்குஞ் சீரார் பெருந்துறையான்
பந்தம் பரியப் பரிமேற்கொண்டான்தந்த
அந்தமிலா ஆனந்தம் பாடுதுங்காண் அம்மானாய்.

பண் சுமந்த பாடல் பரிசு படைத்தருளும்
பெண் சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண் சுமந்த கீர்த்தி வியன் மண்டலத்தீசன்
கண் சுமந்த நெற்றிக் கடவுள் கலி மதுரை
மண் சுமந்து கூலி கொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண் சுமந்த பொன் மேனி பாடுதுங்காண் அம்மானாய்.

விண்ணாளுந் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ணாளும் மன்னவர்க்கு மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையிற்
கண்ணார் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணா மலையானைப் பாடுதுங்காண் அம்மானாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையும்ஆட் கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனைப்
பேயேன துள்ளப் பிழைபொறுக்கும் பெருமையனைச்
சீயேதும் இல்லாதென் செய்பணிகள் கொண்டருளும்
தாயான ஈசற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

குலம்பாடிக் கொக்கிற கும்பாடிக் கோல் வளையாள்
நலம்பாடி நஞ்சுண்ட வாபாடி நாள்தோறும்
அலம்பார் புனல்தில்லை அம்பலத்தே ஆடுகின்ற
சிலம்பாடல் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ.

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ.

வணங்கத் தலை வைத்து வார்கழல்வாய் வாழ்த்தவைத்து
இணங்கத்தன் சீரடியார் கூட்டமும்வைத் தெம்பெருமான்
அணங்கொடணிதில்லை அம்பலத்தே ஆடுகின்ற
குணங் கூரப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடையாள் உன்தன் நடுவிருக்கும் உடையாள்
நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும் இருப்ப
தானால் அடியேன்உன்
அடியார் நடுவுள் இருக்கும் அரு ளைப்புரி
யாய் பொன்னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து முடியும்
வண்ணம் முன்னின்றே.

சிரிப்பார் களிப்பார் தேனிப்பார் திரண்டு
திரண்டுன் திருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார் வெவ்வே
றிருந்துன் திருநாமம்
தரிப்பார் பொன்னம் பலத்தாடும் தலைவா
என்பார் அவர்முன்னே
நரிப்பாய் நாயேன் இருப்பேனோ நம்பி
இனித்தான் நல்காயே.

குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெறா நீர்போல் சிந்தைவாய்ப்பாயும்
திருப்பெருந்துறையுறை சிவனே
இறைவனே நீயென் உடலிடங் கொண்டாய்
இனியுன்னை யென்னிரக் கேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்

பரனே பற்றுநான் மற்றிலேன் கண்டாய்

சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே

திருப்பெருந்துறையுறை சிவனே

ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்

ஆண்டநீ அருளிலை யானால்

வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்

வருகஎன்றருள் புரியாயே.

முத்தனே முதல்வா முக்கணா முனிவா

மொட்டறா மலர்பறித் திறைஞ்சிப்

பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப்

பரகதி கொடுத்தருள் செய்யுஞ்

சித்தனே செல்வத் திருப்பெருந்துறையில்

செழுமலர்க் குருந்தமே வியசீர்

அத்தனே அடியேன் ஆதரித் தழைத்தால்

அதெந்துவே என்றரு ளாயே.

கல்லாத புல்அறிவின்

கடைப்பட்ட நாயேனே

வல்லாள னாய்வந்து

வனப்பெய்தி இருக்கும்வண்ணம்

பல்லோரும் காணஎன்றன்

பசுபாசம் அறுத்தானை

எல்லோரும் இறைஞ்சுதில்லை

அம்பலத்தே கண்டேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டத்தக்க தறிவோய்நீ வேண்ட

முழுதுந் தருவோய்நீ

வேண்டும் அயன்மாற் கரியோய்நீ வேண்டி

என்னைப் பணிகொண்டாய்

வேண்டி நீயா தருள்செய்தாய் யானும்

அதுவே வேண்டின் அல்லால்

வேண்டும் பரிசொன் றுண்டென்னில் அதுவும்

உன்றன் விருப்பன்றே.

அன்றே என்றன் ஆவியும் உடலும்

உடைமை எல்லாமுங்

குன்றே அனையாய் என்னைஆட் கொண்ட

போதே கொண்டிலையோ

இன்றோர் இடையூ றெனக்குண்டோ எண்தோள்

முக்கண் எம்மானே

நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ

இதற்கு நாயகமே.

புற்றில்வாள் அரவும் அஞ்சேன் பொய்யர்தம்

மெய்யும் அஞ்சேன்

கற்றைவார் சடைஎம் அண்ணல் கண்ணுதல்

பாதம் நண்ணி

மற்றும்ஓர் தெய்வந் தன்னை உண்டென

நினைந்தெம் பெம்மாற்கு

அற்றிலா தவரைக் கண்டால் அம்மநாம்

அஞ்சு மாறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம்உண் டாகவே காதல்செய்

துய்ம்மின் கருதரிய

ஞாலம் உண் டானொடு நான்முகன்

வானவர் நண்ணரிய

ஆலம்உண் டானெங்கள் பாண்டிப்

பிரான்தன் அடியவர்க்கு

மூலபண் டாரம் வழங்குகின்

றான்வந்து முந்துமினே.

பிட்டு நேர்பட மண் சுமந்த

பெருந்துறைப்பெரும் பித்தனே

சட்டநேர்பட வந்திலாத

சழக்கனேன் உனைச் சார்ந்திலேன்

சிட்டனே சிவலோகனேசிறு

நாயினுங்கடையாய வெங்

கட்டனேனையும் ஆட்கொள்வான்வந்து

காட்டினாய் கழுக்குன்றிலே.

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே

அன்பினில் விளைந்தஆ ரமுதே

பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்

புழுத்தலைப் புலையனேன் றனக்குச்

செம்மையே ஆய சிவபதம் அளித்த

செல்வமே சிவபெரு மானே

இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்

எங்கெழுந் தருளுவ தினியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

கற்றறியேன் கலைஞானம் கசிந்துருகேன் ஆயிடினும்
மற்றறியேன் பிறதெய்வம் வாக்கியலால் வார்கழல்வந்
துற்றிறுமாந் திருந்தேன்எம் பெருமானே அடியேற்குப்
பொற்றவிசு நாய்க்கிடுமா றன்றேநின் பொன்னருளே.

நானேயோ தவஞ் செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய்இன் அமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே.

உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனியமையும்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாஉன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே.

நரியைக் குதிரைப் பரியாக்கி ஞால மெல்லாம் நிகழ்வித்துப்
பெரிய தென்னன் மதுரையெல்லாம் பிச்ச தேற்றும் பெருந்துறையாய்
அரிய பொருளே அவிநாசி அப்பா பாண்டி வெள்ளமே
தெரிய அரிய பரஞ்சோதி செய்வ தொன்றும் அறியேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்ததுன் தன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான்
திருப்பெருந்துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யான் இதற் கிலன்ஓர்கைம் மாறே.

அப்ப னேயெனக் கமுத னேஆ
னந்த னேஅகம் நெகஅள் ளூறுதேன்
ஒப்ப னேஉனக் குரிய அன்பரில்
உரிய னாய்உனைப் பருக நின்றதோர்
துப்ப னேசுடர் முடிய னேதுணை
யாள னேதொழும் பாள ரெய்ப்பினில்
வைப்ப னேஎனை வைப்ப தோசொலாய்
நைய வையகத் தெங்கள் மன்னனே.

அல்லிக் கமலத் தயனும் மாலும்
அல்லா தவரும் அமரர்கோனுஞ்
சொல்லிப் பரவும் நாமத் தானைச்
சொல்லும் பொருளும் இறந்த சுடரை
நெல்லிக் கனியைத் தேனைப் பாலை
நிறையின் அமுதை அமுதின் சுவையைப்
புல்லிப் புணர்வ தென்றுகொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணியெலாம் வரினும் அஞ்சேன் பிறப்பினோ

டிறப்பும் அஞ்சேன்

துணிநிலா அணியினான்தன் தொழும்பரோ

டழுந்தி அம்மால்

திணிநிலம் பிளந்துங் காணாச்

சேவடி பரவி வெண்ணீறு

அணிகிலா தவரைக் கண்டால் அம்மநாம்

அஞ்சு மாறே.

புலைய னேனையும் பொருளென நினைந்துன்

அருள்புரிந்தனை புரிதலுங் களித்துத்

தலையினால் நடந்தேன் விடைப்பாகா

சங்கரா எண்ணில் வானவர்க்கெல்லாம்

நிலையனே அலைநீர்விடமுண்ட நித்தனே

அடையார்புர மெரித்த

சிலையனே யெனைச் செத்திடப் பணியாய்

திருப்பெருந்துறை மேவிய சிவனே.

வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்

பெருமானே எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்

பள்ளந்தாழ் உறுபுனலிற் கீழ்மே லாகப்

பதைத்துருகும் அவர்நிற்க என்னை யாண்டாய்க்

குள்ளந்தாள் நின்றுச்சி யளவும் நெஞ்சாய்

உருகாதால் உடம்பெல்லாங் கண்ணாய் அண்ணா

வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சம் கல்லாம்

கண்ணிணையு மரமாம்தீ வினையி னேற்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே !
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே !
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே !
சித்தத்துள் தித்திக்கும் தேனே !
அளிவளர் உள்ளத்(து) ஆனந்தக் கனியே !
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

இடர்கெடுத்(து) என்னை ஆண்டுகொண்(டு) என்னுள்
இருட்பிழம்பு அறஎறிந்(து) எழுந்த
சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்கும்
தூயநற் சோதியுள் சோதீ !
அடல்விடைப் பாகா ! அம்பலக் கூத்தா !
அயனொடு மாலறி யாமைப்
படரொளிப் பரப்பிப் பரந்துநின் றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.

கோலமே மேலை வானவர் கோவே !
குணங்குறி இறந்ததோர் குணமே !
காலமே கங்கை நாயகா எங்கள்
காலகாலா! காம நாசா !
ஆலமே அமுதுண்டு அம்பலம் செம்பொற்
கோயில்கொண்டு ஆடவல் லானே !
ஞாலமே தமியேன் நற்றவத் தாயைத்
தொண்டனேன் நணுகுமா நணுகே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீறணி பவளக் குன்றமே ! நின்ற
நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே !
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா !
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன்செய் அம்பலத் தரசே !
ஏறணி கொடியெம் ஈசனே, உன்னைத்
தெர்ண்டனேன் இசையுமாறு இசையே.

தக்கன்நல் தலையும் எச்சன்வன் தலையும்
தாமரை நான்முகன் தலையும்
ஒக்கவிண்(டு) உருள ஒண்திருப் புருவம்
நெறித்தரு ளியவுருத் திரனே !
அக்கணி புலித்தோல் ஆடைமேல் ஆட
ஆடப்பொன் னம்பலத்து ஆடும்
சொக்கனே எவர்க்கும் தொடர்வரி யாயைத்
தொண்டனேன் தொடருமா தொடரே.

அருள்திரள் செம்பொன் சோதி அம்பலத் தாடுகின்ற
இருள்திரள் கண்டத் தெம்மான் இன்பருக்(கு) அன்பு செய்யா
அரட்டரை அரட்டுப் பேசும் அழுக்கரைக் கழுக்க ளாய
பிரட்டரைக் காணா கண்வாய் பேசா(து) அப் பேய்க ளோடே.

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்(டு) உள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.
துண்டவெண் பிறையும் படர்சடை மொழுப்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழியமும் சூலமும் நீல
கண்டமும் குழையும் பவளவாய் இதழும்
கண்ணுதல் திலகமும் காட்டிக்
கெண்டையும் கயலும் உகளுநீர்ப் பழனம்
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
வண்டறை மணியம் பலத்துள்நின் றாடும்
மைந்தன்என் மனங்கலந் தானே.

புவனநா யகனே ! அகவுயிர்க்(கு) அமுதே
பூரணா ! ஆரணம் பொழியும்
பவளவாய் மணியே ! பணிசெய்வார்க்(கு) இரங்கும்
பசுபதீ ! பன்னகா பரணா !
அவனிஞா யிறுபோன்(று) அருள்புரிந்(து) அடியேன்
அகத்திலும் முகத்தலை மூதூர்த்
தவளமா மணிப்பூங் கோயிலும் அமர்ந்தாய்
தனியனேன் தனிமைநீங் குதற்கே.

என்னையுன் பாத பங்கயம் பணிவித்(து)
என்பெலாம் உருகநீ எளிவந்(து)
உன்னைஎன் பால்வைத்(து) எங்கும்எஞ் ஞான்றும்
ஒழிவற நிறைந்தஒண் சுடரே !
முன்னைஎன் பாசம் முழுவதும் அகல
முகத்தலை அகத்தமர்ந்(து) எனக்கே
கன்னலும் பாலும் தேனும்ஆ ரமுதும்
கனியுமாய் இனியை ஆயினையே.

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயா !நீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதுஅருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ? அருள்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னமாய் விசும்பு பறந்தயன் தேட
அங்ஙனே பெரியநீ சிறிய
என்னையாள் விரும்பி என்மனம் புகுந்த
எளிமையை என்றும்நான் மறக்கேன்
முன்னம்மால் அறியா ஒருவனாம் இருவா
முக்கணா நாற்பெருந் தடந்தோள்
கன்னலே தேனே அமுதமே கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே.

செங்கணா போற்றி ! திசைமுகா போற்றி !
சிவபுர நகருள்வீற் றிருந்த
அங்கணா போற்றி ! அமரனே போற்றி !
அமரர்கள் தலைவனே போற்றி !
தங்கள்நான் மறைநூல் சகலமும் கற்றோர்
சாட்டியக் குடியிருந் தருளும்
எங்கள்நா யகனே போற்றி ! ஏழ் இருக்கை
இறைவனே ! போற்றியே போற்றி !

சித்தனே ! அருளாய் ! செங்கணா ! அருளாய் !
சிவபுர நகருள்வீற் றிருந்த
அத்தனே ! அருளாய் ! அமரனே ! அருளாய் !
அமரர்கள் அதிபனே ! அருளாய்
தத்துநீர்ப் படுகர்த் தண்டலைச் சூழல்
சாட்டியக் குடியுள்ஏழ் இருக்கை
முத்தனே ! அருளாய் ! முதல்வனே ! அருளாய் !
முன்னவா துயர்கெடுத்(து) எனக்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலையார் கதிர்வேல் இலங்கைவேந்தன்
இருபது தோளும்இற
மலைதான் எடுத்த மற்றவற்கு
வாளொடு நாள்கொடுத்தான்
சிலையால் புரமூன்(று) எய்த
வில்லி செம்பொனின் அம்பலத்துக்
கலையார் மறிபொன் கையி
னானைக் காண்பதும் என்றுகொலோ

நின்றுநினைந்(து) இருந்துகிடந்து
எழுந்துதொழும் தொழும்பனேன்
ஒன்றிஒரு கால்நினையா(து)
இருந்தாலும் இருக்கவொட்டாய்
கன்றுபிரி கற்றாப்போல்
கதறுவித்தி வரவுநில்லாய்
நன்றிதுவோ திருத்தில்லை
நடம்பயிலும் நம்பானே.

படுமதமும் மிடவயிறும்
உடையகளி றுடையபிரான்
அடியறிய உணர்த்துவதும்
அகத்தியனுக்(கு) ஒத்தன்றே
இடுவதுபுல் ஓர்எருதுக்(கு)
ஒன்றினுக்கு வையிடுதல்
நடுஇதுவோ திருத்தில்லை
நடம்பயிலும் நம்பானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவளமால் வரையைப் பனிபடர்ந்(து)
அனையதோர் படரொளிதரு திருநீறும்
குவளை மாமலர்க் கண்ணியும் கொன்றையும்
துன்றுபொற் குழல்திருச் சடையும்
திவள மாளிகை சூழ்தரு
தில்லையுள்திரு நடம்புரி கின்ற
தவள வண்ணனை நினைதொறும்
என்மனம் தழல்மெழு(கு)ஒக் கின்றதே.

மாலோ(டு) அயனும் அமரர் பதியும் வந்து வணங்கிநின்(று)
ஆல கண்டா ! அரனே ! அருளாய் என்றென்(று) அவரேத்தச்
சேலா டும்வயல் தில்லை மல்கு சிற்றம் பலந்தன்னுள்
பாலா டுமுடிச் சடைகள் தாழப் பரமன் ஆடுமே.

கூத்தனை வானவர்தம் கொழுந்தைக்
கொழுந்தாய் எழுந்த
மூத்தனை மூவுருவின்
முதலைமுத லாகிநின்ற
ஆத்தனைத் தான்படுக்கும் அந்தணர்
தில்லை அம்பலத்துள்
ஏத்தநின் றாடுகின்ற
எம்பிரானடி சேர்வன்கொலோ

ஏக நாயகனை இமையவர்க்கு அரசை
என்னுயிர்க்கு அமுதினை எதிரில்
போக நாயகனைப் புயல்வனற்கு அருளிப்
பொன்னெடுஞ்சிவிகை யாவூர்ந்த
மேக நாயகனை மிகு திரு வீழி
மிழலை விண்ணிழி செழுங்கோயில்
யோக நாயகனையன்றி மற்றொன்றும்
உண்டென உயர்கிலேன் யானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம்
பத்தர்கள் வஞ்சகர் போயகல
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே. 1

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்தும் குடிகுடி
ஈசற்(கு)ஆட் செய்மின் குழாம்புகுந்து
அண்டாங் கடந்த பொருள்அள
வில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள்
என்றே பல்லாண்டு கூறுதுமே. 2

நிட்டையி லாவுடல் நீத்தென்னை
ஆண்ட நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவனடி யாரைச்
சீராட்டும் திறங்களுமே சிந்தித்(து)
அட்ட மூர்த்திக்கென் அகம்நெக
ஊறும் அமிர்தினுக்(கு) ஆலநீழற்
பட்டனுக்(கு) என்னைத்தன் பாற்படுத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லாண் டசுரு திருப்பொருள்
சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண் டிற்சிதை யும்சில
தேவர் சிறுநெறி சேராமே
வில்லாண் டகன கத்திரள்
மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே. 4

புரந்தரன் மாலயன் பூசலிட்(டு)
ஓலமிட்(டு) இன்னம் புகலரிதாய்
இரந்திரந்(து) அழைப்பஎன் னுயிராண்ட
கோவினுக்(கு) என்செய வல்லம் என்றும்
கரந்துங் கரவாத கற்பக
னாகிக் கரையில் கருணைக்கடல்
பரந்தும் நிரந்தும் வரம்பிலாப்
பாங்கற்கே பல்லாண்டு கூறுதுமே. 5

சேவிக்க வந்தயன் இந்திரன்
செங்கண்மால் எங்கும்திசை திசையன
கூவிக் கவர்ந்து நெருங்கிக்
குழாம்குழா மாய் நின்று கூத்தாடும்
ஆவிக்(கு) அமுதைஎன் ஆர்வத்
தனத்தினை அப்பனை ஒப்பமரர்
பாவிக்கும் பாவகத்(து) அப்புறத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே. 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரும் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமைமண வாளனுக்(கு)ஆட்
பாரும் விசும்பும் அறியும்
பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே. 7

சேலுங் கயலும் திளைக்கும்
கண்ணார்இளங் கொங்கையில் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங்
குமென்று புண்ணியர் போற்றிசைப்ப
மாலும் அயனும் அறியா
நெறி தந்துவந்தென் மனத்தகத்தே
பாலும் அமுதமும் ஒத்துநின்
றானுக்கே பல்லாண்டு கூறுதுமே. 8

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள்
செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே. 9

தாதையைத் தாளற வீசிய
சண்டிக்(கு)இவ் வண்டத்தொடும் உடனே
பூதலத் தோரும் வணங்கப்பொற்
கோயிலும் போனகமும் அருளிச்
சோதி மணிமுடித் தாமமும்
நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே. 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழலொலி யாழொலி கூத்தொலி
ஏத்தொலி எங்கும் குழாம்பெருகி
விழவொலி விண்ணளவும் சென்று
விம்மி மிகுதிரு ஆரூரின்
மழவிடை யாற்கு வழிவழி
யாளாய் மணஞ்செய் குடிப்பிறந்த
பழஅடி யாரொடுங் கூடி
எம்மானுக்கே பல்லாண்டு கூறுதுமே. 11

ஆரார் வந்தார் அமரர்
குழாத்தில் அணியுடை ஆதிரைநாள்
நாராயணனொடு நான்முகன்
அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும்
ஆடியும் பல்லாண்டு கூறுதுமே. 12

எந்தை எந்தாய் சுற்றம் முற்றும்
எமக்கு அமுதாம் எம்பிரான் என்றென்று
சிந்தை செய்யும் சிவன்சீர்
அடியார் அடிநாய் செப்புறை
அந்தமில் ஆனந்தச் சேந்தன்
எனைப்புகுந் தாண்டுகொண் டாருயிர்மேல்
பந்தம் பிரியப் பரிந்தவனே
என்று பல்லாண்டு கூறுதுமே 13

திருப்பல்லாண்டு முற்றிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேக்கிழார் பெருமான் அருளிய
# பெரியபுராணம்

**உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்**
**நிலவு உலாவிய நீர்மலி வேணியன்**
**அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்**
**மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்**

எடுக்கும் மாக்கதை இன்றமிழ்ச் செய்யுளாய்
நடக்கும் மேன்மை நமக்கருள் செய்திடத்
தடக்கை ஐந்துடைத் தாழ்செவி நீள்முடிக்
கடக்க ளிற்றைக் கருத்துள் இருத்துவாம்.

"மற்று நீ வன்மை பேசி வன்தொண்டன் என்னும் நாமம்
பெற்றனை நமக்கும் அன்பில் பெருகிய சிறப்பின் மிக்க
அற்சனை பாட்டே ஆகும் ஆதலால் மண் மேல் நம்மைச்
சொற் தமிழ் பாடுக என்றார்" தூமறை பாடும் வாயார்.

ஐந்து பேர் அறிவும் கண்களே கொள்ள அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம் ஒரு மூன்றும் திருந்து சாத்து விகமே ஆக
இந்து வாழ் சடையான் ஆடும் ஆனந்த எல்லையில் தனிப் பெருங்கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

**தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன் திருநடம் கும்பிடப் பெற்று**
**மண்ணிலே வந்த பிறவியே எனக்கு வாலிதாம் இன்பம் ஆம்" என்று**
**கண்ணில் ஆனந்த அருவி நீர் சொரியக் கைம்மலர் உச்சி மேற் குவித்துப்**
**பண்ணினால் நீடி அறிவரும் பதிகம் பாடினார் பரவினார் பணிந்தார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியாய் நடுவுமாகி அளவு இலா அளவுமாகிச்
சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா ஏகம் ஆகிப் பெண்ணுமாய் ஆணும் ஆகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொது நடம் போற்றி போற்றி

கற்பனை கடந்த சோதி கருணையே உருவம் ஆகி
அற்புதக் கோலம் நீடி அரு மறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோமம் ஆகும் திருச் சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடம் செய்கின்ற பூங் கழல் போற்றி போற்றி

இயற்பகை முனிவா ஓலம் ஈண்டுநீ வருவாய் ஓலம்
அயர்ப்பிலா தானே ஓலம் அன்பனே ஓலம் ஓலம்
செயற்கருஞ் செய்கை செய்த தீரனே ஓலம் என்றான்
மயக்கறு மறைஓ லிட்டு மாலயன் தேட நின்றான்.

சொல்லுவ தறியேன் வாழி தோற்றிய தோற்றம் போற்றி
வல்லைவந் தருளி என்னை வழித்தொண்டு கொண்டாய் போற்றி
எல்லையில் இன்ப வெள்ளம் எனக்கருள் செய்தாய் போற்றி
தில்லையம் பலத்து ளாடும் சேவடி போற்றி என்ன.

மலர்மிசை அயனும் மாலும் காணுதற் கரிய வள்ளல்
பலர்புகழ் வெண்ணெய்நல்லூர் ஆவணப் பழமை காட்டி
உலகுய்ய ஆண்டு. கொள்ளப் பெற்றவர் பாதம் உன்னித்
தலைமிசை வைத்து வாழும் தலைமைநந் தலைமையாகும்.

அடியனே அறிவி லாமை கண்டும்என் அடிமை வேண்டிப்
படிமிசைக் கமரில் வந்திங் கமுதுசெய் பரனே போற்றி
துடியிடை பாக மான தூயநற் சோதி போற்றி
பொடியணி பவள மேனிப் புரிசடைப் புராண போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்டர் பிரானுந் தொண்டர்தமக் கதிப னாக்கி அனைத்துநாம்
உண்ட கலமும் உடுப்பனவும் சூடு வனவும் உனக்காகச்
சண்டீசனுமாம் பதந்தந்தோம் என்றங் கவர்பொற்றடமுடிக்குத்
துண்ட மதிசேர் சடைக் கொன்றை மாலை வாங்கிச் சூட்டினார்.

சொற்றுணை வேதியன் என்னுந் தூய்மொழி
நற்றமிழ் மாலையா நமச்சிவாய என்று
அற்றமுன் காக்கும்அஞ் செழுத்தை அன்பொடு
பற்றிய உணர்வினால் பதிகம் பாடினார்.

நன்மைபெரு கருள்நெறியே வந்தணைந்து நல்லூரின்
மன்னுதிருத் தொண்டனார் வணங்கிமகிழ்ந் தெழும்போதில்
உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் என்றவர்தஞ்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினான் சிவ பெருமான்.

காதணிவெண் குழையானைக் காளத்தி மலைக்கொழுந்தை
வேதமொழி மூலத்தை விழுந்திறைஞ்சி எழுந்து பெருங்
காதல்புரி மனங்களிப்பக் கண்களிப்பப் பரவசமாய்
நாதனை என் கண்ணுளான் எனுந்திருத்தாண் டகம்நவின்றார்.

அண்ண லேஎனை ஆண்டுகொண் டருளிய
விண்ணி லேமறைந் தருள்புரி வேதநா யகனே
கண்ணி னால்திருக் கயிலையில் இருந்தநின் கோலம்
நண்ணி நான்தொழ நயந்தருள் புரி எனப் பணிந்தார்.

மண்முதலாம் உலகேத்த மன்னுதிருத் தாண்டகத்தைப்
புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன் எனப்புகன்று
நண்ணரிய சிவானந்த ஞானவடி வேயாகி
அண்ணலார் சேவடிக்கீழ் ஆண்டஅரசு அமர்ந்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறை விளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை யறமாற்றும் பாங்கினிலோங் கியஞானம்
உவமையிலாக் கலைஞான முணர்வரிய மெய்ஞ்ஞானந்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தர ரந்நிலையில்

மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லார்அடி யார்தமை அமுதுசெய் வித்தல்
கண்ணி னால்அவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மை யாமெனில் உலகர்முன் வருகெனஉரைப்பார்.

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்

ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்குங்
கானத்தின் எழுபிறப்பைக் கண் களிப்பக் கண்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நகரில் அமர்ந்தங்கண் இனிது மேவி
ஆழியுடை சூழ்ந்தொலிக்கும் ஈழந்தன்னில்
மன்னுதிருக் கோணமலை மகிழ்ந்த செங்கண்
மழவிடையார் தமைப்போற்றி வணங்கிப் பாடிச்
சென்னிமதி புனைபாட மாதோட்டத்தில்
திருக் கேதீச சரத்தண்ணல் செய்ய பாதம்
உன்னிமிகப் பணிந் தேத்தி அன்ப ரோடும்
உலவாத கிழிபெற்றார் உவகை யுற்றார்.

தண்ணளிவெண் குடைவேந்தன் செயல்கண்டு தரியாது
மண்ணவர்கண் மழைபொழிந்தார் வானவர்பூ மழை சொரிந்தார்
அண்ணலவன் கண்ணெதிரே அணிவீதி மழவிடை மேல்
விண்ணவர்கள் தொழநின்றான் வீதிவிடங் கப்பெருமான்.

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்.

சென்றகா லத்தின் பழுதிலாத் திறமும்
இனிஎதிர் காலத்தின் சிறப்பும்
இன்றெழுந் தருளப் பெற்றபே றிதனால்
எற்றைக்குந் திருவருள் உடையேம்
நன்றியில் நெறியில் அழுந்திய நாடும்
நற்றமிழ் வேந்தனும் உய்ந்து
வென்றிகொள் திருநீற் றொளியினில் விளங்கும்
மேன்மையும் படைத்தனம் என்பார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருணகிரிநாதர் அருளிய
# திருப்புகழ்

கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி

கப்பிய கரிமுக ...... னடிபேணிக்

கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவ

கற்பக மெனவினை ...... கடிதேகும்

மத்தமு மதியமும் வைத்திடு மரன்மகன்

மற்பொரு திரள்புய ...... மதயானை

மத்தள வயிறனை உத்தமி புதல்வனை

மட்டவிழ் மலர்கொடு ...... பணிவேனே

முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்

முற்பட எழுதிய ...... முதல்வோனே

முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்

அச்சது பொடிசெய்த ...... அதிதீரா

அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்

அப்புன மதனிடை ...... இபமாகி

அக்குற மகளுட னச்சிறு முருகனை

அக்கண மணமருள் ...... பெருமாளே

உம்பர்தருத் தேநுமணிக் ...... கசிவாகி

ஒண்கடலிற் றேனமுதத் ...... துணர்வூறி

இன்பரசத் தேபருகிப் ...... பலகாலும்

என்றனுயிர்க் காதரவுற் ...... றருள்வாயே

தம்பிதனக் காகவனத் ...... தணைவோனே

தந்தைவலத் தாலருள்கைக் ...... கனியோனே

அன்பர்தமக் கானநிலைப் ...... பொருளோனே

ஐந்துகரத் தானைமுகப் ...... பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கரைவி சித்ரமணி பொற்கலனை யிட்டநடை
பட்சியெனு முக்ரதுர ...... கமுநீபப்
பக்குவம லர்த்தொடையும் அக்குவடு பட்டொழிய
பட்டுருவ விட்டருள்கை ...... வடிவேலும்
திக்கதும திக்கவரு குக்குடமும் ரட்சைதரு
சிற்றடியு முற்றிய ...... னிருதோளும்
செய்ப்பதியும் வைத்துயர்தி ருப்புகழ்வி ருப்பமொடு
செப்பெனஎ னக்கருள்கை ...... மறவேனே
இக்கவரை நற்கனிகள் சர்க்கரைப ருப்புடனெய்
எட்பொரிய வற்றுவரை ...... இளநீர்வண்
டெச்சில்பய றப்பவகை பச்சரிசி பிட்டுவெள
ரிப்பழமி டிப்பல்வகை ...... தனிமூலம்
மிக்கஅடி சிற்கடலை பட்சணமெ னக்கொளொரு
விக்கிநச மர்த்தனெனும் ...... அருளாழி
வெற்பகுடி லச்சடில விற்பரம ரப்பரருள்
வித்தகம ருப்புடைய ...... பெருமாளே.

தந்த பசிதனைய றிந்து முலையமுது
தந்து முதுகுதட ...... வியதாயார்
தம்பி பணிவிடைசெய் தொண்டர் பிரியமுள
தங்கை மருகருயி ...... ரெனவேசார்
மைந்தர் மனைவியர்க டும்பு கடனுதவு
மந்த வரிசைமொழி ...... பகர்கேடா
வந்து தலைநவிர விழ்ந்து தரைபுகம
யங்க வொருமகிட ...... மிசையேறி
அந்த கனுமெனைய டர்ந்து வருகையினி
லஞ்ச லெனவலிய ...... மயில்மேல்நீ
அந்த மறலியொடு கந்த மனிதனம
தன்ப னெனமொழிய ...... வருவாயே
சிந்தை மகிழமலை மங்கை நகிலிணைகள்
சிந்து பயமயிலு ...... மயில்வீரா
திங்க ளரவுநதி துன்று சடிலரருள்
செந்தி னகரிலுறை ...... பெருமாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரியார் கருங்கண் ...... மடமாதர்
மகவா சைதொந்த ...... மதுவாகி
இருபோ துறைந்து ...... மெலியாதே
இருதா ளினன்பு ...... தருவாயே
பரிபா லனஞ்செய் ...... தருள்வோனே
பரமே சுரன்ற ...... னருள்பாலா
அரிகே சவன்றன் ...... மருகோனே
அலைவா யமர்ந்த ...... பெருமாளே.

விறல்மார னைந்து மலர்வாளி சிந்த
மிகவானி லிந்து ...... வெயில்காய
மிதவாடை வந்து தழல்போல வொன்ற
வினைமாதர் தந்தம் ...... வசைகூற
குறவாணர் குன்றி லுறைபேதை கொண்ட
கொடிதான துன்ப ...... மயல்தீர
குளிர்மாலை யின்க ணணிமாலை தந்து
குறைதீர வந்து ...... குறுகாயோ
மறிமானு கந்த இறையோன்ம கிழ்ந்து
வழிபாடு தந்த ...... மதியாளா
மலைமாவு சிந்த அலைவேலை யஞ்ச
வடிவேலெ றிந்த ...... அதிதீரா
அறிவால றிந்து னிருதாளி றைஞ்சு
மடியாரி டைஞ்சல் ...... களைவோனே
அழகான செம்பொன் மயில்மேல மர்ந்து
அலைவாயு கந்த ...... பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவினுரு வாகி வந்து வயதளவி லேவ ளர்ந்து

கலைகள்பல வேதெ ரிந்து.... மதனாலே

கரியகுழல் மாதர் தங்க ளடிசுவடு மார்பு தைந்து

கவலைபெரி தாகி நொந்து... மிகவாடி

அரகரசி வாய வென்று தினமுநினை யாமல் நின்று

அறுசமய நீதி யொன்று ... மறியாமல்

அசனமிடு வார்கள் தங்கள் மனைகள்தலை வாசல் நின்று

அனுதினமும் நாண மின்றி... அழிவேனோ

உரகபட மேல்வ ளர்ந்த பெரியபெரு மாள ரங்கர்

உலகளவு மால்ம கிழ்ந்த ... மருகோனே

உபயகுல தீப துங்க விருதுகவி ராஜ சிங்க

உறைபுகலி யூரி லன்று... வருவோனே

பரவைமனை மீதி லன்று ஒருபொழுது தூது சென்ற

பரமனரு ளால்வ ளர்ந்த...குமரேசா

பகையசுரர் சேனை கொன்று அமரர்சிறை மீள வென்று

பழநிமலை மீதில் நின்ற...பெருமாளே.

வசனமிக வேற்றி ...... மறவாதே

மனதுதுய ராற்றி ...... லுழலாதே

இசைபயில்ஷ டாக்ஷ ...... ரமதாலே

இகபரசௌ பாக்ய ...... மருள்வாயே

பசுபதிசி வாக்ய ...... முணர்வோனே

பழநிமலை வீற்ற ...... ருளும்வேலா

அசுரர்கிளை வாட்டி ...... மிகவாழ

அமரர்சிறை மீட்ட ...... பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தியால் யானுனைப் பலகாலும் பற்றியே மா திருப்புகழ் பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின் முத்தியே சேர்வதற்கு அருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாத வெற்றி வேலாயுதப் பெருமாளே

காலனிடத் ...... தணுகாதே காசினியிற் ...... பிறவாதே
சீலஅகத் ...... தியஞான தேனமுதைத் ...... தருவாயே
மாலயனுக் ...... கரியானே மாதவரைப் ...... பிரியானே
நாலுமறைப் ...... பொருளானே நாககிரிப் ...... பெருமாளே.

உலகபசு பாச தொந்த ...... மதுவான
உறவுகிளை தாயர் தந்தை ...... மனைபாலர்
மலசலசு வாச சஞ்ச ...... லமதாலென்
மதிநிலைகெ டாம லுன்ற ...... னருள்தாராய்
சலமறுகு பூளை தும்பை ...... யணிசேயே
சரவணப வாமு குந்தன் ...... மருகோனே
பலகலைசி வாக மங்கள் ...... பயில்வோனே
பழநிமலை வாழ வந்த ...... பெருமாளே.

உலகபசு பாச தொந்த ...... மதுவான
உறவுகிளை தாயர் தந்தை ...... மனைபாலர்
மலசலசு வாச சஞ்ச ...... லமதாலென்
மதிநிலைகெ டாம லுன்ற ...... னருள்தாராய்
சலமறுகு பூளை தும்பை ...... யணிசேயே
சரவணப வாமு குந்தன் ...... மருகோனே
பலகலைசி வாக மங்கள் ...... பயில்வோனே
பழநிமலை வாழ வந்த ...... பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதி மதிநதி போது மணிசடை

நாத ரருளிய ...... குமரேசா

பாகு கனிமொழி மாது குறமகள்

பாதம் வருடிய ...... மணவாளா

காது மொருவிழி காக முறஅருள்

மாய னரிதிரு ...... மருகோனே

கால னெனையணு காம லுனதிரு

காலில் வழிபட ...... அருள்வாயே

ஆதி யயனொடு தேவர் சுரருல

காளும் வகையுறு ...... சிறைமீளா

ஆடு மயிலினி லேறி யமரர்கள்

சூழ வரவரு ...... மிளையோனே

சூத மிகவளர் சோலை மருவுசு

வாமி மலைதனி ...... லுறைவோனே

சூர னுடலற வாரி சுவறிட

வேலை விடவல ...... பெருமாளே.

காமியத் தழுந்தி ...... யிளையாதே

காலர்கைப் படிந்து ...... மடியாதே

ஓமெழுத் திலன்பு ...... மிகவூறி

ஓவியத் திலந்த ...... மருள்வாயே

தூமமெய்க் கணிந்த ...... சுகலீலா

சூரனைக் கடிந்த ...... கதிர்வேலா

ஏமவெற் புயர்ந்த ...... மயில்வீரா

ஏரகத் தமர்ந்த ...... பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரி லாத பத்தி ...... தனைமேவி

இனிய தாள்நி னைப்பை ...... யிருபோதும்

இதய வாரி திக்கு ...... ளுறவாகி

எனது ளேசி றக்க ...... அருள்வாயே

கதிர காம வெற்பி ...... லுறைவோனே

கனக மேரு வொத்த ...... புயவீரா

மதுர வாணி யுற்ற ...... கழலோனே

வழுதி கூனி மிர்த்த ...... பெருமாளே.

அகரமு மாகி யதிபனு மாகி யதிகமு மாகி ...... அகமாகி

அயனென வாகி அரியென வாகி அரனென வாகி ...... அவர்மேலாய்

இகரமு மாகி யெவைகளு மாகி யினிமையு மாகி ...... வருவோனே

இருநில மீதி லெளியனும் வாழ எனதுமு னோடி ...... வரவேணும்

மகபதி யாகி மருவும் வலாரி மகிழ்களி கூரும் ...... வடிவோனே

வனமுறை வேட னருளிய பூஜை மகிழ்கதிர் காம ...... முடையோனே

செககண சேகு தகுதிமி தோதி திமியென ஆடு ...... மயிலோனே

திருமலி வான பழமுதிர் சோலை மலைமிசை மேவு ...... பெருமாளே.

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் ...... குருவாகிப்

பிறவாகித் திரமான பெருவாழ்வைத் ...... தருவாயே

குறமாதைப் புணர்வோனே குகனேசொற் ...... குமரேசா

அறநாலைப் புகல்வோனே அவிநாசிப் ...... பெருமாளே.

துள்ளுமத வேள்கைக் ...... கணையாலே தொல்லைநெடு நீலக் ...... கடலாலே

மெள்ளவரு சோலைக் ...... குயிலாலே மெய்யுருகு மானைத் ...... தழுவாயே

தெள்ளுதமிழ் பாடத் ...... தெளிவோனே செய்யகும ரேசத் ...... திறலோனே

வள்ளல்தொழு ஞானக் ...... கழலோனே வள்ளிமண வாளப் ...... பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த வீடுங் கொஞ்சிய சிறுவரு ...... முறுகேளும்
இசைந்த வூரும் பெண்டிரு மிளமையும் ...... வளமேவும்
விரிந்த நாடுங் குன்றமு நிலையென ...... மகிழாதே
விளங்கு தீபங் கொண்டுனை வழிபட ...... அருள்வாயே
குருந்தி லேறுங் கொண்டலின் வடிவினன் ...... மருகோனே
குரங்கு லாவுங் குன்றுறை குறமகள் ...... மணவாளா
திருந்த வேதந் தண்டமிழ் தெரிதரு ...... புலவோனே
சிவந்த காலுந் தண்டையு மழகிய ...... பெருமாளே.

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசல மமர்ந்த பெருமாளே.

பொன்னை விரும்பிய ......பொதுமாதர்
புன்மை விரும்பியெ ...... தடுமாறும்
என்னை விரும்பிநி ...... யொருகால்நின்
எண்ணி விரும்பவு ...... மருள்வாயே
மின்னை விரும்பிய ...... சடையாளர்
மெய்யின் விரும்பிய ...... குருநாதா
அன்னை விரும்பிய ...... குறமானை
அண்மி விரும்பிய ...... பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீலங்கொள் மேகத்தின் ...... மயில்மீதே
நீவந்த வாழ்வைக்கண் ...... டதனாலே
மால்கொண்ட பேதைக்குன் ...... மணநாறும்
மார்தங்கு தாரைத்தந் ...... தருள்வாயே
வேல்கொண்டு வேலைப்பண் ...... டெறிவோனே
வீரங்கொள் சூரர்க்குங் ...... குலகாலா
நாலந்த வேதத்தின் ...... பொருளோனே
நானென்று மார்தட்டும் ...... பெருமாளே.

சந்ததம் பந்தத் ...... தொடராலே
சஞ்சலந் துஞ்சித் ...... திரியாதே
கந்தனென் றென்றுற் ...... றுனைநாளும்
கண்டுகொண் டன்புற் ...... றிடுவேனோ
தந்தியின் கொம்பைப் ...... புணர்வோனே
சங்கரன் பங்கிற் ...... சிவைபாலா
செந்திலங் கண்டிக் ...... கதிர்வேலா
தென்பரங் குன்றிற் ...... பெருமாளே.

அற்றைக் கிரைதேடி அத்தத் ...... திலுமாசை
பற்றித் தவியாத பற்றைப் ...... பெறுவேனோ
வெற்றிக் கதிர்வேலா வெற்பைத் ...... தொளைசீலா
கற்றுற் றுணர்போதா கச்சிப் ...... பெருமாளே.

சிரத்தா னத்திற் பணியாதே
செகத்தோர் பற்றைக் குறியாதே
வருத்தா மற்றெப் பிலதான
மலர்த்தாள் வைத்தெத் தனையாள்வாய்
நிருத்தா கர்த்தத் துவநேசா
நினைத்தார் சித்தத் துறைவோனே
திருத்தாள் முத்தர்க் கருள்வோனே
திருக்கா ளத்திப் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோளறு திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழம் வெள்ளி
சனிபாம்பி ரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 1

என்பொடு கொம்பொடாமை யிவைமார் பிலங்க
எருதேறி யேழையுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றொடேழு பதினெட்டொ டாறும்
உடனாய நாள்க ளவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 2

உருவளர் பவளமேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றைதிங்கள் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசை தெய்வ மான பலவும்
அருநெதி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிநுதல் மங்கையோடு வடவாலி ருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடுநோய்க ளான பலவும்
அதிகுணம் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 4

நஞ்சணி கண்டன் எந்தை மடவாள் தனோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் உருமிடியும் மின்னும்
மிகையான பூத மவையும்
அஞ்சிடும் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 5

வாள்வரி யதளதாடை வரிகோ வணத்தர்
மடவாள் தனோடு முடனாய்
நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி யுழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்பிள முலைநன்மங்கை யொரு பாகமாக
விடையேறு செல்வ னடைவார்
ஒப்பிள மதியும்அப்பும் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும்வாதம் மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 7

வேள்பட விழிசெய்தன்று விடைமே லிருந்து
மடவாள் தனோடும் உடனாய்
வாண்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரையன்ற னோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 8

பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமக ளோடெருக்கும் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனுமாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேருநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமு மதியுநாகம் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
புத்தரொ டமணைவாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 10

தேனமர் பொழில் கொளாலை விளைசெந்நெல்துன்னி
வளர்செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும்நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே. 11

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநீற்றுப் பதிகம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயாந் திருநீறே (1)

வேதத்தில் உள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையில் உள்ளது நீறு
சீதப் புனல்வயல்சூழ்ந்த திரு ஆலவாயான் திருநீறே (2)

முத்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் திருநீறே (3)

காணஇனியது நீறு கவினைத் தருவது நீறு
பேணிஅணிபவர்க்கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருஆல வாயான் திருநீறே (4)

பூச இனியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச இனியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருஆல வாயான் திருநீறே (5)

அருத்தம தாவது நீறு அவலம் அறுப்பது நீறு
வருத்தம் தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும் வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயான் திருநீறே (6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எயிலது அட்டது நீறு இருமைக்கும் உள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கியமாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தமதாவது நீறு
அயில்லைப் பொலிதரு சூலத்து ஆலவாயான் திருநீறே (7)

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவண மாவதுநீறு பாவம் அறுப்பது நீறு
தராவணம் ஆவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் கும்திரு மேனி ஆலவா யான்திருநீறே (8)

மாலொடு அயனறி யாத வண்ணமும் உள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு
ஏல உடம்பிடர் தீர்க்கும் இன்பந் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம் ஆலவாயான் திருநீறே (9)

குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமும் கூடக்
கண்திகைப் பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்திசைப் பட்ட பொருளார் ஏத்தும் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்தும் ஆலவாயன் திருநீறே (10)

ஆற்றல் அடல்விடையேறும் ஆலவாயான் திருநீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்னன் உடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே (11)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகேதீஸ்வரப் பதிகம்

திருச்சிற்றம்பலம்

விருது குன்றமா மேருவில் நாணரு
வாவனல் எரிஅம்பாப்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின்
றுறைபதி யெந்நாளும்
கருது கின்றவூர் கனைகடற் கடிகமழ்
பொழிலணி மாதோட்டம்
கருத நின்றகே தீச்சரங் கைதொழக்
கடுவினை யடையாவே. 1

பாடல் வீணையர் பலபல சரிதையர்
எருதுகைத் தருநட்டம்
ஆடல் பேணுவர் அமரர்கள் வேண்டநஞ்
சுண்டிருள் கண்டத்தர்
ஈட மாவது இருங்கடற் கரையினில்
எழில்திகழ் மாதோட்டம்
கேடி லாதகே தீச்சரங் கைதொழக்
கெடுமிடர் வினைதானே. 2

பெண்ணொர் பாகத்தர் பிறைதவழ் சடையினர்
அறைகழல் சிலம்பார்க்கச்
சுண்ண மாதரித் தாடுவர் பாடுவர்
அகந்தொறும் இடுபிச்சைக்
குண்ண லாவதோர் இச்சையி னுழல்பவர்
உயர்தரு மாதோட்டத்
தண்ணல் நண்ணுகே தீச்சரம் அடைபவர்க்
கருவினை யடையாவே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொடிகொள் மேனியர் புலியத ளரையினர்
விரிதரு கரத்தேந்தும்
வடிகொள் மூவிலை வேலினர் நூலினர்
மறிகடல் மாதோட்டத்
தடிக ளாதரித் திருந்தகே தீச்சரம்
பரிந்தசிந் தையராகி
முடிகள் சாய்த்தடி பேணவல் லார்தம்மேல்
மொய்த்தெழும் வினைபோமே. 4

நல்ல ராற்றவும் ஞானநன் குடையர்தம்
மடைந்தவர்க் கருளீய
வல்லர் பார்மிசை வான்பிறப் பிறப்பிலர்
மலிகடல் மாதோட்டத்
தெல்லை யில்புகழ் எந்தைகே தீச்சரம்
இராப்பகல் நினைந்தேத்தி
அல்லல் ஆசறுத் தரனடி யிணைதொழும்
அன்பராம் அடியாரே. 5

பேழை வார்சடைப் பெருந்திரு மகள்தனைப்
பொருந்தவைத் தொருபாகம்
மாழை யங்கயற் கண்ணிபா லருளிய
பொருளினர் குடிவாழ்க்கை
வாழை யம்பொழில் மந்திகள் களிப்புற
மருவிய மாதோட்டக்
கேழல் வெண்மருப் பணிந்தநீள் மார்பர்கே
தீச்சரம் பிரியாரே. 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டு நால்வருக் கறமுரைத் தருளிப்பல்
�லுலகினில் உயிர்வாழ்க்கை
கண்ட நாதனார் கடலிடங் கைதொழக்
காதலித் துறைகோயில்
வண்டு பண்செயு மாமலர்ப் பொழில்மஞ்ஞை
நடமிடு மாதோட்டம்
தொண்டர் நாடொறுந் துதிசெய அருள்செய்கே
தீச்சர மதுதானே. 7

தென்னி லங்கையர் குலபதி மலைநலிந்
தெடுத்தவன் முடிதிண்தோள்
தன்ன லங்கெட அடர்த்தவற் கருள்செய்த
தலைவனார் கடல்வாயப்
பொன்னி லங்கிய முத்துமா மணிகளும்
பொருந்திய மாதோட்டத்
துன்னி யன்பொடும் அடியவ ரிறைஞ்சுகே
தீச்சரத் துள்ளாரே. 8

பூவு ளானுமப் பொருகடல் வண்ணனும்
புவியிடந் தெழுந்தோடி
மேவி நாடிநின் அடியிணை காண்கிலா
வித்தக மென்னாகும்
மாவும் பூகமுங் கதலியும் நெருங்குமா
தோட்டநன் னகர்மன்னித்
தேவி தன்னொடுந் திருந்துகே தீச்சரத்
திருந்தஎம் பெருமானே. 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்த ராய்ச்சில புனைதுகி லுடையவர்
புறனுரைச் சமணர்ஆதர்
எத்த ராகிநின் றுண்பவ ரியம்பிய
ஏழைமை கேளேன்மின்
மத்த யானையை மறுகிட உரிசெய்து
போர்த்தவர் மாதோட்டத்
தத்தர் மன்னுபா லாவியின் கரையிற்கே
தீச்சரம் அடைமின்னே. 10

மாடெ லாமண முரசெனக் கடலின
தொலிகவர் மாதோட்டத்
தாடலேறுடை அண்ணல்கே தீச்சரத்
தடிகளை யணிகாழி
நாடு ளார்க்கிறை ஞானசம் பந்தன்சொல்
நவின்றெழு பாமாலைப்
பாட லாயின பாடுமின் பத்தர்கள்
பரகதி பெறலாமே. 11

சுவாமி : திருக்கேதீஸ்வரர்
அம்பாள் : கௌரியம்மை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை பதிகம்

திருச்சிற்றம்பலம்

நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பும்
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலங் கொழிக்குங்
கோணமா மலையமர்ந் தாரே. 1

கடிதென வந்த கரிதனை யுரித்து
அவ்வுரி மேனிமேற் போர்ப்பர்
பிடியன நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுத லவளொடும் உடனாய்க்
கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து
கொள்ளமுன் நித்திலஞ் சுமந்து
குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றுங்
கோணமா மலையமர்ந் தாரே. 2

பனித்திளந் திங்கட் பைந்தலை நாகம்
படர்சடை முடியிடை வைத்தார்
கனித்திளந் துவர்வாய்க் காரிகை பாக
மாகமுன் கலந்தவர் மதின்மேற்
தனித்தபே ருருவ விழித்தழல் நாகந்
தாங்கிய மேருவெஞ் சிலையாக்
குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழித்திளங் கங்கை சடைமுடி வைத்துப்
பாங்குடை மதனனைப் பொடியா
விழித்தவன் தேவி வேண்டமுன் கொடுத்த
விமலனார் கமலமார் பாதர்
தெழித்துமுன் அரற்றுஞ் செழுங்கடற் றரளஞ்
செம்பொனும் இப்பியுஞ் சுமந்து
கொழித்துவன் றிரைகள் கரையிடைச் சேர்க்குங்
கோணமா மலையமர்ந் தாரே. 4

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலங்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே. 5

பரிந்துநன் மனத்தால் வழிபடும் மாணி
தன்னுயிர் மேல்வருங் கூற்றைத்
திரிந்திடா வண்ணம் உதைத்தவற் கருளுஞ்
செம்மையார் நம்மையா ளுடையார்
விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை
வேங்கைவண் செருந்திசெண் பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ்
கோணமா மலையமர்ந் தாரே. 6

இப்பதிகத்தில் 7-ம் செய்யுள் சிதைந்து போயிற்று. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்தவன் றருக்கை யிழித்தவர் விரலால்
ஏத்திட வாத்தமாம் பேறு
தொடுத்தவர் செல்வந் தோன்றிய பிறப்பும்
இறப்பறி யாதவர் வேள்வி
தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை
தன்னருட் பெருமையும் வாழ்வுங்
கொடுத்தவர் விரும்பும் பெரும்புக ழாளர்
கோணமா மலையமர்ந் தாரே. 8

அருவரா தொருகை வெண்டலை யேந்தி
யகந்தொறும் பலியுடன் புக்க
பெருவரா யுறையும் நீர்மையர் சீர்மைப்
பெருங்கடல் வண்ணனும் பிரமன்
இருவரும் அறியா வண்ணம்ஒள் ளெரியாய்
உயர்ந்தவர் பெயர்ந்தநன் மாற்குங்
குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக்
கோணமா மலையமர்ந் தாரே. 9

நின்றுணுஞ் சமணும் இருந்துணுந் தேரும்
நெறியலா தனபுறங் கூற
வென்றுநஞ் சுண்ணும் பரிசினர் ஒருபால்
மெல்லிய லொடும்உட னாகித்
துன்றுமொண் பௌவ மவ்வலுஞ் சூழ்ந்து
தாழ்ந்துறு திரைபல மோதிக்
குன்றுமொண் கானல் வாசம்வந் துலவுங்
கோணமா மலையமர்ந் தாரே. 10

குற்றமி லாதார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரைக்
கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான்
கருத்துடை ஞானசம் பந்தன்
உற்றசெந் தமிழார் மாலை யீரைந்தும்
உரைப்பவர் கேட்பவர் உயர்ந்தோர்
சுற்றமு மாகித் தொல்வினை யடையார்
தோன்றுவர் வானிடைப் பொலிந்தே. 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

தொல்லை யிரும் பிறவிச் சூழும் தளை நீக்கி
அல்ல லறுத்தானந்தம் ஆக்கியதே எல்லை
மருவாநெறி யளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் மென்னும் தேன்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம் ஆகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க

ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்த னடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறந்தார்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க

கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க
ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சேவடி போற்றி

நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி

சிவன் அவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பணியான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழல்இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந்து எல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொல்லா வினையேன் புகழுமா றென்றறியேன்
புல்லாகி பூடாயி புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவைய்யாப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்

வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டுடின்று வீடுற்றேன்

உய்யஎன் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா ஏனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா

பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே

மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்

நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்

கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே

தேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே

நீரா யுரக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமு மில்லானே யுள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே

ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே

போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமென் காவலனே காண்பரிய பேர் ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப

ஆற்றேன் எம் மையா அரனேஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே

நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்

சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பள்ளியெழுச்சி

போற்றி என் வாழ் முதல் ஆகிய பொருளே
புலர்ந்தது பூம் கழற்கு இணை துணை மலர்
(கொண்டு
ஏற்றி நின் திருமுகத்து எமக்கு அருள் மலரும்
எழில் நகை கொண்டு நின் திருவடி தொழுகோம்
சேற்று இதழ்க் கமலங்கள் மலரும் தண் வயல் சூழ்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே
ஏறு உயர் கொடி உடையாய் உனை உடையாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே. (1)

அருணன் இந்திரன் திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம் நின் மலர்த் திருமுகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனம்
கடி மலர் மலர மற்று அண்ணல் அம் கண் ஆம்
திரள் நிரை அறுபதம் முரல்வன இவை ஓர்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே
அருள் நிதி தரவரும் ஆனந்த மலையே
அலை கடலே பள்ளி எழுந்தருளாயே. (2)

கூவின பூங் குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளி ஒளி உதயத்து
ஒருப்படுகின்றது விருப்பொடு நமக்குத்
தேவ நல் செறி கழல் தாள் இணை காட்டாய்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே
யாவரும் அறிவு அரியாய் எமக்கு எளியாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே. (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன் இசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒரு பால்
துன்னிய பிணை மலர்க் கையினர் ஒரு பால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒரு பால்
சென்னியின் அஞ்சலி கூப்பினர் ஒரு பால்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே
என்னையும் ஆண்டு கொண்டு இன் அருள் புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே. (4)

பூதங்கள் தோறும்நின் றாய்எனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்அரியாய் எங்கள் முன்வந்து
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தருளாயே. (5)

பப்புஅற வீடு இருந்து உணரும் நின் அடியார்
பந்தனை வந்து அறுத்தார் அவர் பலரும்
மைப்புஉறு கண்ணியர் மானுடத்து இயல்பின்
வணங்குகின்றார் அணங்கின் மணவாளா
செப்புஉறு கமலங்கள் மலரும் தண் வயல் சூழ்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே
இப்பிறப்பு அறுத்து எமை ஆண்டு அருள் புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே. (6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது பழச் சுவை என அமுது என அறிதற்கு
அரிது என எளிது என அமரரும் அறியார்
இது அவன் திரு உரு இவன் அவன் எனவே
எங்களை ஆண்டுகொண்டு இங்கு எழுந்தருளும்
மது வளர் பொழில் திரு உத்தரகோச
மங்கை உள்ளாய் திருப்பெருந்துறை மன்னா
எது எமைப் பணி கொளும் ஆறு அது கேட்போம்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே. (7)

முந்திய முதல் நடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர் யாவர் மற்று அறிவார்
பந்து அணை விரலியும் நீயும் நின் அடியார்
பழம் குடில் தொறும் எழுந்தருளிய பரனே
செம் தழல் புரை திருமேனியும் காட்டித்
திருப்பெருந்துறை உறை கோயிலும் காட்டி
அந்தணன் ஆவதும் காட்டி வந்து ஆண்டாய்
ஆர் அமுதே பள்ளி எழுந்தருளாயே. (8)

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்ட
விழுப்பொருளே உன தொழுப்பு அடியோங்கள்
மண்ணகத்தே வந்து வாழச்செய்தானே
வண் திருப்பெருந்துறையாய் வழி அடியோம்
கண் அகத்தே நின்று களி தருதேனே
கடல் அமுதே கரும்பே விரும்பு அடியார்
எண் அகத்தாய் உலகுக்கு உயிர் ஆனாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே. (9)

புவனியில் போய்ப் பிறவாமையின் நாள்தாம்
போக்குகின்றோம் அவமே இந்தப்பூமி
சிவன் உய்யக் கொள்கின்ற ஆறு என்று நோக்கித்
திருப்பெருந்துறை உறைவாய் திருமாஆம்
அவன் விருப்பு எய்தவும் மலரவன் ஆசைப்
படவும் நின் அலர்ந்த மெய்க்கருணையும்நீயும்
அவனியில் புகுந்து எமை ஆட்கொள்ள வல்லாய்
ஆர் அமுதே பள்ளி எழுந்தருளாயே. (10)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன் செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்மறந்து
போதார் அமளியின் மேல் நின்றும் புரண்டி இங்ஙன்
ஏதேனு மாகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதே எந்தோழி பரிசேலோ ரெம்பாவாய் 1

பாசம் பரஞ்சோதிக்கென்பாய் இராப்பகல் நாம்
பேசும்போ தெப்போது இப்போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசுமிடம் ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய். 2

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந்தெதிரெழுந்தென்
அந்தனா னந்த னமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீ ரீசன் பழ அடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த்தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை யெல்லோ மறியோமோ
சித்த மழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய் 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒண்ணித் திலநகையா யின்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியா ரெல்லோரும் வந்தாரோ?
எண்ணிக் கொடுள்ளவா சொல்லுகோம் அவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொரு மருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்
தெண்ணிக் குறையில் துயிலோ ரெம்பாவாய் 4

மாலறியா நான்முகனுங் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைத்திறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மை ஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலமிடினு முணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய் 5

மானே நீ நன்னலை நாளை வந்துங்களை
நானே யெழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசை பகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானே வந்தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்கு ன்வாய்திறவாய்
ஊனெ உருகாய் உனக்கே உறுமெமெங்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய். 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னே இவையுஞ் சிலவோ பலவமரர்

உன்னற் கரியா னொருவன் இருஞ்சீரான்

சின்னங்கள் கேட்பச் சிவனென்றேவாய் திறப்பாய்

தென்னா என்னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்

என்னானை என்னரையன் இன்னமுதென்றெல்லோமும்

சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ

வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்

என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். 7

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்

ஏழி லியம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்

கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை

கேழில் விழுப் பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ

வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்

ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ

ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை

ஏழை பங்காளனையே பாடேலோ ரெம்பாவாய். 8

முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளே

பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே

உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்

உன்னடி யார்தாள்பணிவோ மாங்கவர்க்கே பாங்காவோம்

அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து

சொன்னபரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்

இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்

என்ன குறையுமிலோமேலோ ரெம்பாவாய் 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரு மண்ணுந் துதித்தாலும்
ஓதஉலவா ஒரு தோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப் பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆர் அயலார்
ஏதவனைப்பாடும் பரிசேலோரெம்பாவாய்.. 10

மொய்யார் தடம்பொய்கைபுக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழற்போற்
செய்யா, வெண்ணீறாடி செல்வா சிறு மருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயா நீ ஆட்கொண்டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லா முயந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையலோ ரெம்பாவாய். 11

ஆர்த்த பிறவித் துயர் கெட நாம் ஆர்த்தாடும்
தீர்த்தனற் றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும்
கூத்தன் இவ்வானுங் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளை சிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி யிருஞ்சுனை நீராடலோ ரெம்பாவாய். 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தாற் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 13

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம்பலம் பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி யந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி யாடேலோ ரெம்பாவாய் 14

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால்வந்தனையாள்விண்ணோரைதான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய் 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னிக் கடலைச்சுருக்கி யெழுந்துடையாள்
என்னத்திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பி திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன் சுரக்கும் இன்னருளே
என்னைப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய் 16

செங்கணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந்தாடேலோ ரெம்பாவாய் 17

அண்ணா மலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விணணோர் முடியின் மணித்தொகை வீறற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கி த்தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணாரமுதமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இப் பூம்புனல்பாய்ந்தாடேலோ ரெம்பாவாய் 18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
அங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன்று ரைம்போம்கோள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லாதோள் சேறற்க
எங்கை உனக்கெல்லா தெப்பணியும் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கு எங்கோன் நல்குதியேல்
எங்கெழிடுலன் ஞாயி றெமக்கலோ ரெம்பாவாய் 19

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றி யெல்லா வுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி யெல்லா வுயிர்கும் போகமாம் பூங்ககழல்கள்
போற்றி யெல்லா வுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றி மால்நான் முகனும் காணாத புண்டரிகம்
போற்றி யாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றி யாம்மார்கழி நீராடேலோ ரெம்பாவாய். 20





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சோப் பதிகம்

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனைஆண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே. 1

நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும்வண்ணம்
குறியொன்றும் இல்லாத கூத்தன்தன் கூத்தையெனக்கு
அறியும்வண்ணம் அருளியவா றார்பெறுவார் அச்சோவே. 2

பொய்யெல்லாம் மெய்யென்று புணர்முலையார் போகத்தே
மையலுறக் கடவேனை மாளாமே காத்தருளித்
தையலிடங் கொண்டபிரான் தன்கழலே சேரும்வண்ணம்
ஐயன்எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே. 3

மண்ணதனிற் பிறந்தெய்த்து மாண்டுவிழக் கடவேனை
எண்ணமிலா அன்பருளி எனையாண்டிட் டென்னையுந்தன்
சுண்ணவெண்ணீ றணிவித்துத் தூநெறியே சேரும்வண்ணம்
அண்ணல்எனக் கருளியவா றார்வபெறுவார் அச்சோவே. 4

பஞ்சாய அடிமடவார் கடைக்கண்ணால் இடர்ப்பட்டு
நெஞ்சாய துயர்கூர நிற்பேன்உன் அருள்பெற்றேன்
உய்ஞ்சேன்நான் உடையானே அடியேனை வருகஎன்று
அஞ்சேல்என் றருளியவா றார்பெறுவார் அச்சோவே. 5

வெந்துவிழும் உடற்பிறவி மெய்யென்று வினைபெருக்கிக்
கொந்துகுழல் கோல்வளையார் குவிமுலைமேல் வீழ்வேனைப்
பந்தமறுத் தெனையாண்டு பரிசறஎன் துரிசுமறுத்து
அந்தமெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே. 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையலார் மையலிலே தாழ்ந்துவிழக் கடவேனைப்
பையவே கொடுபோந்து பாசமெனுந் தாழுருவி
உய்யும்நெறி காட்டுவித்திட் டோங்காரத் துட்பொருளை
ஐயன்எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே. 7

சாதல்பிறப் பென்னுந் தடஞ்சுழியில் தடுமாறிக்
காதலின்மிக் கணியிழையார் கலவியிலே விழுவேனை
மாதொருகூ றுடையபிரான் தன்கழலே சேரும்வண்ணம்
ஆதியெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே. 8

செம்மைநலம் அறியாத சிதடரொடுந் திரிவேனை
மும்மைமலம் அறுவித்து முதலாய முதல்வன்தான்
நம்மையும்ஓர் பொருளாக்கி நாய்சிவிகை ஏற்றுவித்த
அம்மையெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே. 9

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பொற்சுண்ணம்

தில்லையில் அருளியது - ஆனந்த மனோலயம்

திருச்சிற்றம்பலம்

முத்துநல் தாமம்பூ மாலை தூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம் வைம்மின்
சத்தியும் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியும் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரி கொண்மின்
அத்தன் ஐயாறன் அம்மானைப் பாடி
ஆடற்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 1

பூவியில் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்க வேண்டும்
மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நிலாமே
குனிமின் தொழுமினெங் கோனெங் கூத்தன்
தேவியுந் தானும் வந்தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்தும் நாமே. 2

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி எங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடி யெடுமின்
அந்தரர் கோன் அயன் றன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன் தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்கு
ஏய்ந்த பொற்சுண்ணம் இடித்தும் நாமே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசணி மின்கள் உலக்கை யெல்லாங்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங் கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடிப்
பாசவினையைப் பறித்து நின்று
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே. 4

அறுகெடுப் பாரய னும்மரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்க ளெல்லாம்
நம்மிற்பின் பல்லதெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்த வில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கணப்பற்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 5

உலக்கை பலவோச்சு வார் பெரியர்
உலகமெ லாமுரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
காண உலகங்கள் போதா தென்றே
நலக்க அடியோமை ஆண்டு கொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத் தந்த
முலைக்கு மருகனைப் பாடிப் பாடி
மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்தும் நாமே. 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூடகந் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
பாடக மெல்லடி ஆர்க்கும் மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்ன கோவுக்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே. 7

வாள்தடங் கண்மட மங்கை நல்லீர்
வரிவளை ஆர்ப்பவன் கொங்கை பொங்கத்
தோள்திரு முண்டந் துதைந்தி லங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச் சொல்லி
நாள்கொண்ட நாண்மலர்ப் பாதங் காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மை இம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப் பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே. 8

வையகம் எல்லாம் உரல தாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப் பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கை பற்றி
ஐயன் அணிதில்லை வாண னுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தணி கொங்கைகள் ஆட ஆட
மொய் குழல் வண்டினம் ஆட ஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆட ஆடச்
செங்கயற் கண்பனி ஆட ஆடச்
பித்தெம் பிரானொடும் ஆட ஆடச்
பிறவி பிறரொடும் ஆட ஆட
அத்தன் கருணையொடு ஆட ஆட
ஆடற்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 10

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப் பாடித்
தேடுமின் எம்பெரு மானைத் தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத் தாடி னானுக்கு
ஆடற்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 11

மையமர் கண்டனை வான நாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் தன்னை
ஐயனை ஐயர்பி ரானை நம்மை
அகப்படுத் தாட்கொண் டருமை காட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொ டித்தோள்
பையர வல்குல் மடந்தை நல்லீர்
பாடிப் பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னிடைச செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை யாரமு தெங்களப்பன்
எம்பெரு மானிம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே. 13

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலை யாடச்
செங்கனி வாயித ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம் பாடிக்
கங்கை இரைப்ப அராவிரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்க ழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே. 14

ஞானக் கரும்பின் தெளிவைப் பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்துதித் திக்க வல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும் பேற வாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவகை நாமும்வந் தன்பர் தம்மோடு
ஆட்செயும் வண்ணங்கள் பாடி விண்மேல்
தேவர் கனாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவகம் ஏந்திய வெல் கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்ற கொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப் பாடிச்
செம்பொன் செய்சுண்ணம் இடித்தும் நாமே. 16

தேனக மாமலர்க் கொன்றை பாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளை பாடி
மால்விடை பாடி வலக்கை யேந்தும்
ஊனக மாமழுச் சூலம் பாடி
உம்பரும் இம்பரும் உய்ய வன்று
போனக மாகநஞ் சுண்டல் பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே. 17

ஆயன்தலை கொண்டுசெண் டாடல் பாடி
அருக்கன் எயிறு பறித்தல் பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக்
காலனைக் காலால் உதைத்தல் பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டு கொண்ட
நயந்தனைப பாடிநின் றாடி யாடி
நாதற்குச் சுண்ணம் இடித்தும் நாமே. 18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்ட மலர்க்கொன்னைற மாலை பாடி
மத்தமும் பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லை பாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம் பாடிக்
கட்டிய மாசுணக் கச்சை பாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம் மேல்
இட்டுநின் றாடும் அரவம் பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்தும் நாமே. 19

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மேய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியு மாயிருள் ஆயினார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயினார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயினார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயினாருக்கு
ஆதியும் அந்தமும் ஆயினார்க்க
ஆடப் பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 20





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிராமி அந்தாதி

## கணபதி காப்பு

### 1. ஞானமும் நல்வித்தையும் பெற

உதிக்கின்ற செங்கதிர், உச்சித்திலகம், உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம், மாதுளம் போது, மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி, மென்கடிக்குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்தன் விழித்துணையே.

### 2. பிரிந்தவர் ஒன்று சேர

துணையும் தொழும் தெய்வமும், பெற்றதாயும் சுருதிகளின்
பணையும், கொழுந்தும் பதி கொண்டவேரும் பனிமலர்பூங்
கணையும், கருப்புச்சிலையும், மென்பாசாங்குசமும், கையில்
அணையும் திரிபுர சுந்தரி ஆவது அறிந்தனமே.

### 3. குடும்பக் கவலையிலிருந்து விடுபட

அறிந்தேன் எவரும் அறியா மறையை, அறிந்துகொண்டு
செறிந்தேன் உனது திருவடிக்கே, திருவே! வெருவிப்
பிறந்தேன் நின்அன்பர் பெருமைஎண்ணாதகரும நெஞ்சால்
மறிந்தே விழும் நரகுக்கு உறவாய மனிதரையே.

### 4. உயர் பதவிகளை அடைய

மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்து சென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே! கொன்றைவார்சடைமேல்
பனிதரும் திங்களும், பாம்பும், பகீரதியும் படைத்த
புனிதரும் நீயும் என்புந்தி எந்நாளும் பொருந்துகவே.

### 5. மனக்கவலை தீர

பொருந்திய முப்புரை! செப்புரை செய்யும் புணர்முலையால்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி! வார்சடையோன்
அருந்திய நஞ்சு அமுதாக்கிய அம்பிகை! அம்புயமேல்
திருந்திய சுந்தரி அந்தரி பாதம்என் சென்னியதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**6. மந்திர சித்தி பெற**

சென்னியது உன்பொன் திருவடித்தாமரை சிந்தையுள்ளே
மன்னியது உன் திருமந்திரம் சிந்துர வண்ணப்பெண்ணே!
முன்னிய நின் அடி யாருடன் கூடி முறை முறையே
பன்னியது என்றும் உன் தன் பரமாகம பத்ததியே.

**7. மலையென வரும் துன்பம் பனியென நீங்க**

ததியுறு மத்திற் சுழலும் என்ஆவி தளர்விலதோர்
கதியுறும் வண்ணம் கருது கண்டாய் கமலாலயனும்,
மதியுறு வேணி மகிழ்நனும், மாலும் வணங்கிஎன்றும்
துதியுறு சேவடியாய்! சிந்துரானன சுந்தரியே.

**8. பற்றுகள் நீங்கி பக்தி பெருகிட**

சுந்தரி! எந்தை துணைவி! என் பாசத் தொடரைஎல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தினாள் மகிடன் தலைமேல்
அந்தரி நீலி அழியாத கன்னிகை ஆரணத்தோன்
சுந்தரி கைத்தலத்தாள் மலர்த்தாள் என் கருத்தனவே.

**9. அனைத்தும் வசமாக**

கருத்தன, எந்தை தன் கண்ணன், வண்ணக் கனகவெற்பில்
பெருத்தன, பால்அழும் பிள்ளைக்கு நல்கின, பேரருள்கூர்
திருத்தன பாரமும் ஆரமும், செங்கைச் சிலையும், அம்பும்
முருத்தனமூரலும், நீயும், அம்மே! வந்துஎன்முன் நிற்கவே.

**10. மோட்ச சாதனம் பெற**

நின்றும், இருந்தும், கிடந்தும், நடந்தும் நினைப்பது உன்னை
என்றும் வணங்குவது உன்மலர்த்தாள் எழுதாமறையின்
ஒன்றும் அரும் பொருளே! அருளே! உமையே இமயத்து
அன்றும் பிறந்தவளே! அழியா முத்தி ஆனந்தமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**11. இல்வாழ்க்கையில் இன்பம் பெற**

ஆனந்தமாய் என் அறிவாய், நிறைந்த அமுதமுமாய்,
வான் அந்தமான வடிவுடையாள், மறை நான்கினுக்கும்
தான் அந்தமான சரணார விந்தம் தவளநிறக்
கானம் தம் ஆடரங்கம் எம்பிரான் முடிக்கண்ணியதே.

**12. தியானத்தில் நிலைபெற**

கண்ணியது உன்புகழ் கற்பது உன் நாமம் கசிந்து பத்தி
பண்ணியது உன் இருபாதாம் புயத்தில் பகல் இரவா
நண்ணியது உன்னை நயந்தோர் அவையத்து நான் முன்செய்த
புண்ணியம் ஏது என் அம்மே புவி ஏழையும் பூத்தவளே.

**13. வைராக்கிய நிலை எய்த**

பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின்கரந்தவளே! கறைக் கண்டனுக்கு
மூத்தவளே! என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே!
மாத்தவளே உன்னை அன்றிமற்றோர் தெய்வம் வந்திப்பதே!

**14. தலைமை பெற**

வந்திப்பவர் உன்னை வானவர், தானவர், ஆனவர்கள்
சிந்திப்பவர் நல் திசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப்பவர் அழியாப் பரமானந்தர் பாரில் உன்னைச்
சந்திப்பவர்க்கு எளிதாம் எம்பிராட்டி நின் தண் ஒளியே.

**15. பெருஞ்செல்வமும் பேரின்பமும் பெற**

தண்ணளிக்கு என்றுமுன்னே பலகோடிதவங்கள் செய்வார்
மண்ணளிக்கும் செல்வமோ பெறுவார்? மதிவானவர் தம்
விண்ணளிக்கும் செல்வமும் அழியா முத்தி வீடுமன்றோ?
பண்ணளிக்கும் சொல் பரிமள யாமளைப் பைங்கிளியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**16. முக்காலமும் உணரும் திறன் உண்டாக**

கிளியே! கிளைஞர் மனத்தே கிடந்து, கிளர்ந்து, ஒளிரும்
ஒளியே! ஒளிரும் ஒளிக்கிடமே எண்ணில் ஒன்றுமில்லா
வெளியே! வெளிமுதல் பூதங்களாகி விரிந்த அம்மே!
அளியேன் அறிவளவிற்கு அளவானது அதிசயமே.

**17. கன்னிகைகளுக்கு நல்ல வரன் அமைய**

அதிசயமான வடிவுடையாள், அரவிந்தமெல்லாம்
துதிசய ஆனன சுந்தரவல்லி, துணை, ரதி
பதிசயமானது அபசயம் ஆக முன் பார்த்தவர் தம்
மதிசயமாக அன்றோ வாமபாகத்தை வவ்வியதே.

**18. மரண பயம் நீங்க**

வவ்விய பாகத்து இறைவரும், நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும், உங்கள் திருமணக்கோலமும் சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்தென்னை ஆண்டபொற்பாதமும் ஆகிவந்து
வெவ்விய காலன் என்மேல்வரும் போது வெளிநிற்கவே.

**19. பேரின்ப நிலையடைய**

வெளிநின்ற நின் திருமேனியைப்பார்த்தேன் விழியும் நெஞ்சும்,
களிநின்ற வெள்ளம் கரை கண்டதில்லை கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானம் திகழ்கின்றது என்ன திருவுளமோ?
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே.

**20. வீடு வாசல் முதலிய செல்வங்கள் உண்டாக**

உறைகின்ற நின் திருக்கோயிலில் நின்கேள்வர் ஒருபக்கமோ?
அறைகின்ற நான்மறையின் அடியோ? முடியோ? அமுதம்
நிறைகின்ற வெண்திங்களோ? கஞ்சமோ? எந்தன் நெஞ்சமோ?
மறைகின்ற வாரிதியோ? பூரணாசல மங்கலையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**21. அம்பிகையை வழிபடாமல் இருந்த பாவம் தொலைய**

மாங்கலை! செங்கலசம் முலையாள்! மலையாள்! வருணச்
சங்கலை செங்கை! சகலகலாமயில்! தாவுகங்கை
பொங்கு அலைதங்கும் புரிசடையோன் புடையாள்! உடையாள்!
பிங்கலை! நீலி! செய்யாள்! வெளியாள்! பசும் பொற்கொடியே.

**22. இனிப் பிறவா நெறி அடைய**

கொடியே! இளவஞ்சிக் கொம்பே எனக்கு வம்பே பழுத்த
படியே! மறையின் பரிமளமே! பனிமால் இமயப்
பிடியே! பிரமன் முதலாய தேவரைப் பெற்ற அம்மே!
அடியேன் இறந்து இங்கு இனிப்பிறவாமல் வந்தாண்டு கொள்ளே.

**23. எப்போதும் மகிழ்ச்சியாய் இருக்க**

கொள்ளேன் மனத்தில் நின்கோலம் அல்லாது என்பர் கூட்டம் தன்னை
விள்ளேன் பரசமயம் விரும்பேன் வியன் மூவுலகுக்கு
உள்ளே, அனைத்தினுக்கும் புறம்பே உள்ளத்தே விளைந்த
கள்ளே! களிக்கும் களியே அளிய என் கண்மணியே.

**24. நோய்கள் விலக**

மணியே! மணியின் ஒளியே! ஒளிரும் மணிபுனைந்த
அணியே! அணியும் அணிக்கு அழகே! அணுகாதவர்க்குப்
பிணியே! பிணிக்கு மருந்தே! அமரர் பெருவிருந்தே!
பணியேன் ஒருவரை நின் பத்மபாதம் பணிந்தபின்னே.

**25. நினைத்த காரியம் நிறைவேற**

பின்னே திரிந்து உன் அடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்று கொண்டேன் முதல் மூவருக்கும்
அன்னே! உலகுக்கு அபிராமி என்னும் அருமருந்தே!
என்னே! இனி உன்னையான் மறவாமல் நின்று ஏத்துவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**26. சொல்வாக்கும் செல்வாக்கும் பெருக**

ஏத்தும் அடியவர் ஈரேழுலகினையும் படைத்தும்,
காத்தும், அழித்தும் திரிபவராம் கமழ் பூங்கடம்பு
சாத்தும்குழல் அணங்கே! மணம் நாறும் நின்தாள் இணைக்கு என்
நாத்தங்கு புன்மொழி ஏறியவாறு நகையுடத்தே.

**27. மனநோய் அகல**

உடைத்தனை வஞ்சப் பிறவியை உள்ளம் உருகும் அன்பு
படைத்தனை பத்மபதயுகம் சூடும் பணி எனக்கே
அடைத்தனை நெஞ்சத்து அழுக்கை எல்லாம் நின் அருள்புனலால்
துடைத்தனை சுந்தரி! நின்னருள் ஏதென்று சொல்லுவதே.

**28. இம்மை மறுமை இன்பங்கள் அடைய**

சொல்லும் பொருளும் என நடமாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே நின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும் அவர்க்கே அழியா அரசும்
செல்லும் தவநெறியும் சிவலோகமும் சித்திக்குமே.

**29. எல்லா சித்திகளும் அடைய**

சித்தியும், சித்திதரும் தெய்வமுமாகத் திகழும்
பராசத்தியும், சக்தி தழைக்கும் சிவமும் தவம் முயல்வார்
முத்தியும், முத்திக்கு வித்தும், வித்தாகி முளைத்தெழுந்த
புத்தியும், புத்தியின் உள்ளே புரக்கும் புரத்தையன்றே.

**30. அடுத்தடுத்து வரும் துன்பங்கள் நீங்க**

அன்றே தடுத்து! என்னை ஆண்டுகொண்டாய் கொண்டதல்ல என்கை
நன்றே உனக்கு இனி நான் என்செயினும், நடுக்கடலுள்
சென்றே விழினும் கரையேற்றுகை நின் திருவுளமே
ஒன்றே! பல உருவே! அருவே! என் உமையவளே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**31. மறுமையில் இன்பம் உண்டாக**

உமையும், உமையொரு பாகனும் ஏக உருவில் வந்திங்கு
எமையும் தமக்கு அன்பு செய்ய வைத்தார் இனி எண்ணுதற்குச்
சமையங்களும் இல்லை ஈன்றெடுப்பாள் ஒரு தாயும் இல்லை
அமையும் அமையுறு தோளியர் மேல் வைத்த ஆசையுமே.

**32. துர்மரணம் வராமலிருக்க**

ஆசைக்கடலில் அகப்பட்டு அருளற்ற அந்தகன் கைப்
பாசத்தில் அல்லல்பட இருந்தேனை, நின் பாதம் என்னும்
வாசக்கமலம் தலைமேல் வலியவைத்து ஆண்டு கொண்ட
நேசத்தை என் சொல்லுவேன்? ஈசர்பாகத்து நேரிழையே!

**33. இறக்கும் நிலையிலும் அம்பிகை நினைவோடு இருக்க**

இழைக்கும் வினைவழியே ஆடும் காலன் எனைநடுங்க
அழைக்கும் பொழுதுவந்து அஞ்சல் என்பாய் அத்தர் சித்தமெல்லாம்
குழைக்கும் களபக் குவிமுலை யாமலைக் கோமளையே!
உழைக்கும் பொழுது உன்னையே அன்னையே என்பன் ஓடிவந்தே.

**34. சிறந்த நன்செய் நிலங்கள் கிடைக்க**

வந்தே சரணம் புகும் அடியாருக்கு வான்உலகம்
தந்தே பரிவொடு தான்போய் இருக்கும் சதுர்முகமும்
பைந்தேன் அலங்கல் பருமணி ஆகமும் பாகமும் பொன்
செந்தேன் மலரும் அலர்கதிர் ஞாயிறும் திங்களுமே.

**35. திருமணம் நிறைவேற**

திங்கள் பசுவின் மணம் நாறும் சீறடி சென்னிவைக்க
எங்கட்கு ஒருதவம் எய்தியவா! எண்ணிறந்த விண்ணோர்
தங்கட்கும் இந்தத் தவம் எய்துமோ? தரங்கக் கடலுள்
வெங்கண் பணியணைமேல் துயில்கூரும் விழுப்பொருளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 36. பழைய வினைகள் வலிமை பெற

பொருளே! பொருள் முடிக்கும் போகமே! அரும்போகம் செய்யும்
மருளே! மருளில் வரும் தெருளே என் மனத்து வஞ்சத்து
இருளேதும் இன்றி ஒளிவெளியாகி இருக்கும் உன்தன்
அருளேது அறிகின்றிலேன் அம்புயாதனத்து அம்பிகையே!

### 37. நவமணிகளைப் பெற

கைக்கே அணிவது கன்னலும் பூவும் கமலம் அன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்து மாலை விட அரவின்
பைக்கே அணிவது பண்மணிக்கோவையும் பட்டும், எட்டுத்
திக்கே அணியும் திருவுடையான் இடம் சேர்பவளே!

### 38. வேண்டியதை வேண்டியவாறு அடைய

பவளக் கொடியில் பழுத்த செவ்வாயும், பனிமுறுவல்
தவளத் திருநகையும் துணையா எங்கள் சங்கரனைத்
துவளப் பொருது துடியிடை சாய்க்கும் துணை முலையாள்
அவளைப் பணிமின் கண்டீர் அமராவதி ஆளுகைக்கே.

### 39. கருவிகளைக் கையாளும் வலிமை பெற

ஆளுகைக்கு உன் தன் அடித்தாமரைகள் உண்டு அந்தகன்பால்
மீளுகைக்கு உன் தன் விழியின் கடைஉண்டு மேல் இவற்றின்
மூளுகைக்கு என்குறை நின்குறையே அன்று முப்புரங்கள்
மாளுகைக்கு அம்பு தொடுத்த வில்லான் பங்கில் வாள்நுதலே!

### 40. பூர்வ புண்ணியம் பலன்தர

வாணுதல் கண்ணியை, விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்
பேணுதற்கு எண்ணிய எம்பெருமாட்டியைப் பேதைநெஞ்சில்
காணதற்கு அண்ணியள் அல்லாத கன்னியைக் காணும் அன்பு
பூணுதற்கு எண்ணிய எண்ணமன்றோ முன்செய் புண்ணியமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**41. நல்லடியார் நட்புப் பெற**

புண்ணியம் செய்தனமே மனமே! புதுப் பூங்குவளைக்
கண்ணியும், செய்ய கணவரும் கூடி நம் காரணத்தால்
நண்ணி இங்கே வந்து தம் அடியார்கள் நடுவிருக்கப்
பண்ணிநம் சென்னியின் மேல் பத்மபாதம் பதித்திடவே.

**42. உலகினை வசப்படுத்த**

இடம் கொண்டு விம்மி, இணைகொண்டு இறுகி, இளகி, முத்து
வடம்கொண்ட கொங்கை மலை கொண்டு, இறைவர் வலிய நெஞ்சை
நடம்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி நல்லரவின்
படங்கொண்ட அல்குல் பனிமொழி வேதப்பரிபுரையே.

**43. தீமைகள் ஒழிய**

பரிபுரச் சீறடி! பாசாங் குசை! பஞ்ச பாணி! இன்சொல்
திரிபுர சுந்தரி சிந்துர மேனியள் தீமைநெஞ்சில்
பரிபுர வஞ்சரை அஞ்சக் குனிபொருப்புச் சிலைக்கை
எரிபுரை மேனி இறைவர் செம்பாகத்து இருந்தவளே.

**44. பிரிவுணர்ச்சி அகல**

தவளே! இவள் எங்கள் சங்கரனார் மனை மங்கலமாம்
அவளே, அவர் தமக்கு அன்னையும் ஆயினள் ஆகையினால்
இவளே, கடவுளர் யாவர்க்கும் மேலை இறைவியுமாம்
துவளேன், இனியொரு தெய்வம் உண்டாக மெய்த்தொண்டு செய்தே.

**45. உலகோர் பழியிலிருந்து விடுபட**

தொண்டு செய்யாது நின் பாதம் தொழாது, துணிந்து இச்சையே
பண்டு செய்தார் உளரோ? இலரோ? அப்பரிசு அடியேன்
கண்டு செய்தால் அது கைதவமோ? அன்றிச் செய்தவமோ?
மிண்டு செய்தாலும் பொறுக்கை நன்றே பின் வெறுக்கை அன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**46. நல்நடத்தையோடு வாழ**

வெறுக்கும் தகைமைகள் செய்யினும் தம் அடியாரை மிக்கோர்
பொறுக்கும் தகைமை புதியதன்றே புது நஞ்சைஉண்டு
கறுக்கும் திருமிடற்றான் இடப்பாகம் கலந்துபொன்னே!
மறுக்கும் தகைமைகள் செய்யினும், யான் உன்னை வாழ்த்துவேனே!

**47. யோகநிலை அடைய**

வாழும்படி ஒன்று கண்டு கொண்டேன் மனத்தே ஒருவர்
வீழும்படி அன்று, விள்ளும் படி அன்று, வேலைநிலம்
ஏழும் பருவரை எட்டும் எட்டாமல் இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே.

**48. உடல் பற்று நீங்க**

சுடரும் கலைமதி துன்றும் சடைமுடிக் குன்றில் ஒன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதிந்து நெஞ்சில்
இடரும் தவிர்த்து இமைப்போது இருப்பார் பின்னும் எய்துவரோ
குடரும் கொழுவும் குருதியும் தோயும் குரம்பையிலே.

**49. மரணத் துன்பம் இல்லாதிருக்க**

குரம்பை அடுத்துக் குடிபுக்க ஆவி வெங்கூற்றுக்கிட்ட
வரம்பை அடுத்து மறுகும் அப்போது வளைக்கை அமைத்து
அரம்பை அடுத்த அரிவையர் சூழவந்து அஞ்சல்என்பாய்
நரம்பை அடுத்த இசைவடிவாய் நின்ற நாயகியே.

**50. அம்பிகையை நேரில் காண**

நாயகி நான்முகி நாராயணி கை நளின பஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கி என்று
ஆயகி ஆதி உடையாள் சரணம் அரண் நமக்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**51. மோகம் நீங்க**

அரணம் பொருள் என்றருள் ஒன்றிலாத அசுரர் தங்கள்
முரண்அன்றழிய முனிந்த பெம்மானும், முகுந்தனுமே
சரணம் சரணம் எனநின்ற நாயகி தன் அடியார்
மரணம், பிறவி இரண்டும் எய்தார் இந்த வையகத்தே.

**52. பெருஞ்செல்வம் அடைய**

வையம், துரகம், மதகரி, மாமகுடம், சிவிகை
பெய்யும் கனகம், பெருவிலை ஆரம், பிறைமுடித்த
ஐயன் திருமனையாள் அடித்தாமரைக்கு, அன்பு முன்பு
செய்யும் தவம் உடையார்க்கு உளவாகிய சின்னங்களே.

**53. பொய்யுணர்வு நீங்க**

சின்னஞ்சிறிய மருங்கினில் சாத்திய செய்யபட்டும்,
பென்னம் பெரிய முலையும், முத்தாரமும் பிச்சிமொய்த்து
கன்னங்கரிய குழலும்கண் மூன்றும் கருத்தில் வைத்துத்
தன்னந்தனி இருப்பார்க்கு இது போலும் தவமில்லையே.

**54. கடன் தீர**

இல்லாமை சொல்லி ஒருவர் தம்பால்சென்று இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவிரேல், நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம்பால் ஒரு காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே.

**55. மோனநிலை எய்த**

மின்னாயிரம் ஒரு மெய்வடிவாகி விளங்குகின்றது
அன்னாள் அகமகிழ் ஆனந்தவல்லி அருமறைக்கு
முன்னாய் நடுஎங்குமாய் முடிவாய முதல்விதன்னை
உன்னாது ஒழியினும், உன்னினும் வேண்டுவது ஒன்று இல்லையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**56. யாவரையும் வசீகரிக்கும் ஆற்றல் உண்டாக**

ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து இவ்வுலம் எங்குமாய்
நின்றாள், அனைத்தையும் நீங்கி நிற்பாள்என்தன் நெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்றவா் இப்பொருள் அறிவார்
அன்று ஆலிலையில் துயின்ற பெம்மானும் என் ஐயனுமே.

**57. வறுமை ஒழிய**

ஐயன் அளந்தபடி இருநாழி கொண்டு அண்டமெல்லாம்
உய்ய அறம்செய்யும் உன்னையும் போற்றி ஒருவர்தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலையும் கொண்டு சென்று பொய்யும்
மெய்யும் இயம்ப வைத்தாய் இதுவோ உன்தன் மெய்யருளே.

**58. மனஅமைதி பெற**

அருணாம் புயத்தும் என் சித்தாம் புயத்தும் அமர்ந்திருக்கும்
தருணாம் புயத்தும் முலைத்தையல் நல்லாள், தகை சேர்நயனக்
கருணாம் புயமும் வதனாம் புயமும் கராம்புயமும்,
சரணாம் புயமும் அல்லாற் கண்டிலேன் ஒருதஞ்சமுமே.

**59. பிள்ளைகள் நல்லவர்களாக வளர**

தஞ்சம் பிறதில்லை ஈதல்லது என்று உன் தவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக்கின்றிலேன் ஒன்றை நீள்சிலையும்
அஞ்சும் அம்பும் மிக்கலராக நின்றாய் அறியார் எனினும்
பஞ்சு அஞ்சும் மெல்லடியார் அடியார் பெற்ற பாலரையே.

**60. மெய்யுணர்வு பெற**

பாலினும் சொல் இனியாய்! பனி மாமலர்ப்பாதம் வைக்க
மாலினும் தேவர் வணங்கநின்றோன் கொன்றை வார்சடையின்
மேலினும் கீழ்நின்று வேதங்கள் பாடும் மெய்ப்பீடம் ஒரு
நாலினும் சாலநன்றோ அடியேன் முடைநாய்த்தலையே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**61. மாலையை வெல்ல**

நாயேனையும் இங்கு ஒரு பொருளாக நயந்துவந்து
நீயே நினைவின்றி ஆண்டுகொண்டாய் நின்னை உள்ளவண்ணம்
பேயேன் அறியும் அறிவுதந்தாய் என்ன பேறுபெற்றேன்?
தாயே! மலைமகளே! செங்கண்மால் திருத்தங்கச்சியே.

**62. எத்தகைய அச்சமும் அகல**

தங்கச்சிலை கொண்டு தானவர் முப்புரம் சாய்த்து, மத
வெங்கண் கரிபுரி போர்த்த செஞ்சேவகன் மெய்யடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி! கோகனகச்
செங்கைக் கரும்பும், அலரும் எப்போதும் என் சிந்தையதே.

**63. அறிவு தெளிவோடு இருக்க**

தேறும்படி சில ஏதுவும் காட்டிமுன் செல்கதிக்குக்
கூறும்பொருள் குன்றில்கொட்டும் தறிகுறிக்கும் சமயம்
ஆறும் தலைவி இவளாய் இருப்பது அறிந்திருந்தும்
வேறும் சமயம் உண்டென்று கொண்டாடிய வீணருக்கே.

**64. பக்தி பெருக**

வீணே பலிகவர் தெய்வங்கள் பாற்சென்று மிக்க அன்பு
பூணேன் உனக்கு அன்பு பூண்டு கொண்டேன் நின்புகழ்ச்சியன்றிப்
பேணேன் ஒருபொழுதும் திருமேனி பிரகாசமின்றிக்
காணேன் இருநிலமும் திசை நான்கும் ககனமுமே.

**65. ஆண்மகப்பேறு அடைய**

ககனமும், வானமும், புவனமும் காணவிற் காமன் அங்கம்
தகனம்முன் செய்த தவப்பெருமாற்குத் தடக்கையும் செம்
முகனும் முந்நான்கு ,ருமூன்றெனத் தோன்றிய மூதறிவின்
மகனும் உண்டாயது அன்றோ? வல்லி நீ செய்த வல்லபமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 66. கவிஞராக

வல்லபம் ஒன்றறியேன் சிறியேன் நின் மலரடிச்செம்
பல்லவம் அல்லது பற்று ஒன்றிலேன் பசும் பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப்பாய் வினையேன்தொடுத்த
சொல் அவமாயினும் நின்திருநாமங்கள் தோத்திரமே.

### 67. பகைவர்கள் அழிய

தோத்திரம் செய்து, தொழுது, மின்போலும் நின் தோற்றம்ஒரு
மாத்திரைப் போதும் மனதில் வையாதவர் வண்மை, குலம்
கோத்திரம், கல்வி, குணம், குன்றி நாளும் குடில்கள்தொறும்
பாத்திரம் கொண்டு பலிக்கு உழலாநிற்பர் பாரெங்குமே.

### 68. நிலம் வீடு போன்ற செல்வங்கள் பெருக

பாரும், புனலும், கனலும், வெங்காலும், படர்விசும்பும்,
ஊரும் முருகு சுவைஒளி ஊறொலி ஒன்றுபடச்
சேரும் தலைவி, சிவகாமசுந்தரி சீரடிக்கே
சாரும் தவமுடையார் படையாத தனம் இல்லையே.

### 69. சகல சௌபாக்கியங்களும் அடைய

தனந்தரும் கல்வி தரும் ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந்தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.

### 70. நுண் கலைகளில் சித்தி பெற

கண்களிக்கும்படி கண்டுகொண்டேன் கடம்பாடவியில்
பண்களிக்கும் குரல் வீணையும் கையும் பயோதரமும்
மண்களிக்கும் பச்சை வண்ணமும் ஆகி மதங்கர் குலப்
பெண்களில் தோன்றிய எம்பெருமாட்டிதன் பேரழகே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**71. மனக்குறைகள் தீர**

அழகுக்கு ஒருவரும் ஒவ்வாதவல்லி அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம் புயத்தாள் பனி மாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க
இழவுற்று நின்றுநெஞ்சே இரங்கேல் உனக்கு என் குறையே!

**72. பிறவிப் பிணி தீர**

என்குறை தீரநின்று ஏத்துகின்றேன் இனி யான் பிறக்கின்
நின்குறையே அன்றி யார் குறை காண் இரு நீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்?
தன்குறை தீர எங்கோன் சடைமேல்வைத்த தாமரையே.

**73. குழந்தைப் பேறு உண்டாக**

தாமம் கடம்பு படைபஞ்சபாணம் தனுக்கரும்பு
யாமம் வயிரவர் ஏத்தும் பொழுது எமக்கென்று வைத்த
சேமம் திருவடி செங்கைகள் நான்கு ஒளி செம்மை அம்மை
நாமம் திரிபுரை ஒன்றோடு இரண்டு நயனங்களே.

**74. தொழிலில் மேன்மை அடைய**

நயனங்கள் மூன்றுடை நாதனும், வேதமும், நாரணனும்
அயனும் பரவும் அபிராமவல்லி அடியிணையப்
பயன்என்று கொண்டவர் பாவையர் ஆடவும், பாடவும்பொன்
சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவரே.

**75. விதியை வெல்ல**

தங்குவர் கற்பகத் தருவின் நீழலில் தாயரின்றி
மங்குவர், மண்ணில் வழுவாப் பிறவியை மால்வரையும்
பொங்குவர் அழியும்! ஈரேழ்புவனமும் பூத்த உந்திக்
கொங்கிவர் பூங்குழலாள் திருமேனி குறித்தவரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**76. தனக்கு உரிமையானதைப் பெற**

குறித்தேன் மனத்தில் நின்கோலம் எல்லாம் நின் குறிப்பறிந்து
மறித்தேன் மறலிவருகின்ற நேர்வழி வண்டுகிண்டி
வெறித்தேன் அவிழ்கொன்றை வேணிப்பிரான் ஒருகூற்றை மெய்யில்
பறித்தே குடிபுகுதும் பஞ்சபாண பயிரவியே.

**77. பகை அச்சம் நீங்க**

பயிரவி, பஞ்சமி, பாசாங்குசை, பஞ்சபாணி, வஞ்சவர்
உயிரவி உண்ணும் உயர்சண்டி, காளி ஒளிரும்கலா
வயிரவி, மண்டலி, மாலினி, சூலி வராகி என்றே
செயிரவி நான்மறை சேர்திருநாமங்கள் செப்புவரே.

**78. சகல செல்வங்களையும் அடைய**

செப்பும், கனக கலசமும் போலும் திருமுலைமேல்
அப்பும் களப அபிராமவல்லி! அணிதிரளக்
கொப்பும், வயிரக் குழையும், விழியின் கொழுங்கடையும்
துப்பும் நிலவும் எழுதிவைத்தேன்என் துணைவிழிக்கே.

**79. கட்டுகளில் இருந்து விடுபட**

விழிக்கே அருளுண்டு அபிராமவல்லிக்கு வேதம்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்டு எமக்கு அவ்வழி கிடக்கப்
பழிக்கே சுழன்று எம் பாவங்களே செய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர் தம்மோடு என்ன கூட்டினியே.

**80. பெற்ற மகிழ்ச்சி நிலைத்திட**

கூட்டியவா! என்னைத் தன் அடியாரில் கொடியவினை
ஓட்டியவா! எண்கண் ஓடியவா! தன்னை உள்ளவண்ணம்
காட்டியவா! கண்ட கண்ணும் மனமும் களிக்கின்றவா!
ஆட்டியவா நடம் ஆடகத்தாமரை ஆரணங்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**81. நன்னடத்தை உண்டாக**

அணங்கே! அணங்குகள் நின் பரிவாரங்கள் ஆகையினால்
வணங்கேன் ஒருவரை வாழ்த்துகிலேன் நெஞ்சில் வஞ்சகரோடு
இணங்கேன் எனது உனது என்றிருப்பார் சிலர் யாவரொடும்
பிணங்கேன் அறிவொன்றிலேன் எண்கண் நீவைத்த பேரளியே.

**82. மன ஒருமைப்பாடு அடைய**

அளியார் கமலத்தில் ஆரணங்கே! அகிலாண்டமும் நின்
ஒளியாக நின்ற ஒளிர்திருமேனியை உள்ளுதொறும்
களியாகி, அந்தக்கரணங்கள் விம்மி, கரைபுரண்டு,
வெளியாய்விடின், எங்ஙனே மறப்பேன் நின்விரகினையேன்.

**83. ஏவலர் பலர் உண்டாக**

விரவும் புதுமலர் இட்டு நின்பாத விரைக்கமலம்
இரவும் பகலும் இறைஞ்ச வல்லார், இமையோர் எவரும்
பரவும் பதமும், அயிராவதமும், பகீரதியும்
உரவும் குலிசமும், கற்பகக் காவும் உடையவரே.

**84. சங்கடங்கள் தீர**

உடையாளை, ஒல்கு செம்பட்டு உடையாளை ஒளிர்மதிசெஞ்
சடையாளை வஞ்சகர் நெஞ்சடையாளை, தயங்குநுண்ணூல்
இடையாளை, எங்கள்பெம்மான் இடையாளை, இங்கு என்னை இனிப்
படையாளை, உங்களையும் படையாவண்ணம் பார்த்திருமே.

**85. துன்பங்கள் நீங்க**

பார்க்கும் திசைதொறும் பாசாங்குசமும், பனிச்சிறை வண்டு
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும், கரும்பும் என் அல்லல்எல்லாம்
தீர்க்கும் திரிபுரையாள் திருமேனியும் சிற்றிடையும்,
வார்க்குங்கும முலையும், முலைமேல் முத்துமாலையுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 86. ஆயுத பயம் நீங்க

மாலயன் தேட, மறைதேட, வானவர் தேட, நின்ற
காலையும், சூடகக் கையையும், கொண்டு, கதித்தகப்பு
வேலை வெங்காலன் என்மேல் விடும்போது வெளிநில்கண்டாய்
பாலையும் தேனையும், பாகையும் போலும் பணிமொழியே.

### 87. செயற்கரிய செய்து புகழ் பெற

மொழிக்கும், நினைவுக்கும் எட்டாத நின் திருமூர்த்தி என்தன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்றதால்! விழியால் மதனை
அழிக்கும் தலைவர் அழியா விரதத்தை அண்டமெல்லாம்
பழிக்கும் படி ஒருபாகம் கொண்டாளும் பராபரையே.

### 88. எப்போதும் அம்பிகை அருள் பெற

பரம் என்று உனை அடைந்தேன் தமியேனும் உன் பக்தருக்குள்
தரம் அன்று இவன்என்று தள்ளத்தகாது தரியலர் தம்
புரம்அன்று எரியப் பொருப்புவில்வாங்கிய போதில் அயன்
சிரம் ஒன்று செற்ற கையான் இடப்பாகம் சிறந்தவளே!

### 89. யோக சித்தி பெற

சிறக்கும் கமலத் திருவே! நின்சேவடி சென்னிவைக்கத்
துறக்கம் தரும், நின் துணைவரும் நீயும் துரியம் அற்ற
உறக்கம் தரவந்து உடம்போடு உயிர் உறவற்ற, அறிவு
மறக்கும் பொழுது, என்முன்னே வரல்வேண்டும் வருந்தியுமே.

### 90. கணவன் மனைவி கருத்து வேற்றுமை நீங்க

வருந்தா வகைஎன் மனத்தாமரையினில் வந்துபுதுந்து
இருந்தாள் பழைய இருப்பிடமாக இனிஎனக்குப்
பொருந்தாது ஒருபொருள் இல்லை விண்மேவும் புலவருக்கு
விருந்தாக, வேலை மருந்தானதை நல்கும் மெல்லியலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**91. அரசாங்கச் செயலில் வெற்றி பெற**

மெல்லிய நுண் இடைமின் அனையாளை, விரிசடையோன்
புல்லிய மென்முலை பொன் அனையாளைப் புகழ்ந்துமறை
சொல்லிய வண்ணம் தொழும்அடியாரைத் தொழுமவர்க்குப்
பல்லியம் ஆர்த்தெழ வெண்பகடு ஊரும் பதம்தருமே.

**92. மனநிலை பக்குவமடைய**

பதத்தே உருகி, நின்பாதத்திலே மனம் பற்றி, உன்தன்
இதத்தே ஒழுக அடிமைகொண்டாய் இனியான் ஒருவர்
மதத்தே மதிமயங்கேன் அவர் போன வழியும் செல்லேன்
முதல்தேவர் மூவரும், யாவரும் போற்றும் முகிழ்நகையே.

**93. உள்ளத்தில் ஒளி உண்டாக**

நகையே இஃதிந்த ஞாலம் எல்லாம்பெற்ற நாயகிக்கு
முகையே முகிழ்முலை மானே முதுகண் முடிவில் அந்த
வகையே பிறவியும் வம்பே மலைமகள் என்பது நாம்
மிகையே இவள்தன் தகைமையை நாடி விரும்புவதே.

**94. மனநிலை தூய்மையாக**

விரும்பித் தொழும் அடியார், விழிநீர்மல்கி மெய்புளகம்
அரும்பி, ததும்பிய ஆனந்தமாகி அறிவிழந்து,
சுரும்பிற் களித்து மொழி தடுமாறி, முன் சொன்னஎல்லாம்
தரும்பித்தர் ஆவரென்றால், அபிராமி சமயம் நன்றே.

**95. மன உறுதி பெற**

நன்றே வருகினும், தீதே விளைகினும், நான் அறிவது
ஒன்றேயும் இல்லை உனக்கே பரம் எனக்கு உள்ள எல்லாம்
அன்றே உனதென்று அளித்து விட்டேன் அழியாத குணக்
குன்றே! அருட்கடலே! இமவான் பெற்ற கோமளமே!

**96. எங்கும் பெருமை பெற**

கோமள வல்லியை அல்லியம் தாமரைக்கோயில் வைகும்
யாமள வல்லியை, ஏதம் இலாளை, எழுதரிய
சாமள மேனிச் சகலகலா மயில் தன்னைத் தம்மால்
ஆமளவும் தொழுவார் எழுபாருக்கும் ஆதிபரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**97. புகழும் அறமும் வளர**

ஆதித்தன், அம்புலி, அங்கி, குபேரன், அமரர்தங்கோன்
போதிற் பிரமன், புராரி, முராரி, பொதியமுனி,
காதிப் பொருபடைக் கந்தன், கணபதி, காமன் முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே.

**98. வஞ்சகர் செயல்களிலிருந்து பாதுகாப்பு பெற**

தைவந்து நின்னடித் தாமரைசூடிய சங்கரற்குக்
கைவந்த தீயும், தலைவந்த ஆறும் கரந்தது எங்கே?
மெய்வந்த நெஞ்சில் அல்லால் ஒருகாலும் விரகர் தங்கள்
பொய்வந்த நெஞ்சில் புக அறியா மடப் பூங்குயிலே.

**99. அருள் உணர்வு வளர**

குயிலாய் இருக்கும் கடம்படாவியிடை கோல இயல்
மயிலாய் இருக்கும் இமயாசலத்திடை வந்துதித்த
வெயிலாய் இருக்கும் விசும்பில் கமலத்தின் மீது அன்னமாம்
கயிலாயருக்கு அன்று இமவான் அளித்த கனங்குழையே.

**100. அம்பிகையை மனத்தில் காண**

குழையைத் தழுவிய ஒன்றை அம்தார் கமழ் கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந்தோளும், கரும்புவில்லும்
விழையப்பொருதிறல்வேரி அம்பாணமும் வெண்ணகையும்,
உழையப் பொருகண்ணும், நெஞ்சில் எப்போதும் உதிக்கின்றனவே.

**101. நூற்பயன்**

ஆத்தாளை, எங்கள் அபிராமவல்லியை, அண்டம் எல்லாம்
பூத்தாளை, மாதுளம் பூநிறத்தாளை, புவிஅடங்காக்
காத்தாளை ஐங்கணை பாசாங்குசமும், கரும்பும், அங்கை
சேர்த்தாளை, முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு தீங்கு இல்லையே..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கலையாத கல்வியும்**

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணியிலாத உடலும்
சலியாத மனமும் அன்பகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
துன்பமில்லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி! அபிராமியே!

**- அபிராமி பட்டர்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லிமாலை

## குமரகுருபர சுவாமிகள்

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டாமரைக்குத் தகாதுகொ
லோசக மேழுமளித்
துண்டா னுறக்க வொழித்தான்பித்
தாகவுன் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோஉளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலாவல்லியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய் வட நூற்கடலுந்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கண் நல்
காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பால்
அமுதந் தெளிக்கும் வண்ணங்
காட்டும்வெள் ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே

சொல்விற் பனமு மவதானமுங்
கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே

சொற்கும் பொருட்கும் உயிராய்மெய்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார் நிலந்தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசென்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே
சகலகலாவல்லியே

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரு மென்
பண்கண் டளவிற் பணியச்செய்வாய்
படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்

**திருச்சிற்றம்பலம்**

### 1. தேவாரம்

அரியானை அந்தணர்தஞ் சிந்தை யானை
அருமறையி னகத்தானை அணுவை யார்க்குந்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கள்தங் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

### திருவாசகம்

இந்திரனும் மாலயனும் ஏனோரும் வானோரும்
அந்தரமே நிற்கச் சிவனவனி வந்தருளி
எந்தரமும் ஆட்கொண்டு தோட்கொண்ட நீற்றனாய்ச்
சிந்தனையை வந்தருக்குஞ் சீரார் பெருந்துறையான்
பந்தம் பறியப் பரிமேற்கொண்டான்தந்த
அந்தமிலா ஆனந்தம் பாடுதுங்காண் அம்மானாய்.

### திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயா !நீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதுஅருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ? அருள்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர்
குழாத்தில் அணியுடை ஆதிரைநாள்
நாராயணனொடு நான்முகன்
அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும்
ஆடியும் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்

## திருப்புகழ்

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசல மமர்ந்த பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவில்லாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. தேவாரம்

திருச்சிற்றம்பலம்

அல்ல லென்செயும் அருவினை யென்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தா னென்செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனார்க்
கெல்லை யில்லதோ ரடிமைபூண் டேனுக்கே.

**திருவாசகம்**

முத்தனே முதல்வா முக்கணா முனிவா
மொட்டறா மலர் பறித்து இறைஞ்சிப்
பத்தியை நினைந்து பரவுவார் தமக்குப்
பரகதி கொடுத்தருள் செய்யும்
சித்தனே செல்வத் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தம் மேவியசீர்
அத்தனே அடியேன் ஆதரித்து அழைத்தால்
அது எந்துவே என்று அருளாயே.

**திருவிசைப்பா**

தனதன்நல் தோழா சங்கரா ! சூல
பாணியே! தாணுவே சிவனே !
கனகநல் தூணே! கற்பகக் கொழுந்தே
கண்கள்மூன் றுடையதோர் கரும்பே !
அனகனே குமர விநாயக சனக
அம்பலத்து அமரசே கரனே !
உன்கழல் இணையென் நெஞ்சினுள் இனிதாத்
தொண்டனேன் நுகருமா நுகரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருப்பல்லாண்டு

குழலொலி யாழொலி கூத்தொலி
ஏத்தொலி எங்கும் குழாம்பெருகி
விழவொலி விண்ணளவும் சென்று
விம்மி மிகுதிரு ஆரூரின்
மழவிடை யாற்கு வழிவழி
யாளாய் மணஞ்செய் குடிப்பிறந்த
பழஅடி யாரொடுங் கூடி
எம்மானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

### திருப்புராணம்

எடுக்கும் மாக்கதை இன்றமிழ்ச் செய்யுளாய்
நடக்கும் மேன்மை நமக்கருள் செய்திடத்
தடக்கை ஐந்துடைத் தாழ்செவி நீள்முடிக்
கடக்க ளிற்றைக் கருத்துள் இருத்துவாம்.

### திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மா திருப்புகழ் பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற்கு அருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாத
வெற்றி வேலாயுதப் பெருமாளே

### வாழ்த்து

ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க - வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க - செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானை தன் அணங்கு - வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்க சீர் அடியார் - எல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. தேவாரம்

திருச்சிற்றம்பலம்

கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்ற னாமம் பயின்றே னுனதருளால்
திருவாய்ப் பொலியச் சிவாய நமவென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீபா திரிப்புலி யூரரனே.

**திருவாசகம்**

அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னைஆட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே

**திருவிசைப்பா**

இடர்கெடுத்து என்னை ஆண்டுகொண்டு என்னுள்
இருட்பிழம்பு அறஎறிந்து எழுந்த
சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்கும்
தூயநற்சோதியுள்சோதீ!
அடல்விடைப் பாகா! அம்பலக் கூத்தா!
அயனொடு மாலறி யாமைப்
படரொளிப் பரப்பிப் பரந்துநின்றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றது ஆர்பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமை மணவாளனுக்கு ஆள்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

### திருப்புராணம்

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன்
திருநடங் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே யெனக்கு
வாலிதாம் இன்பமாம் என்று
கண்ணிலா னந்த அருவிநீர் சொரியக்
கைம்மல ருச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்

### திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசொற் குமரேசா
அறநாலைப் புகல்வோனே அவிநாசிப் பெருமாளே

### வாழ்த்து

வானுலகும் மண்ணுலகும் வாழ மறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
யானைமுகனைப் பரவி அஞ்சலிசெய் கிற்பாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. தேவாரம்

திருச்சிற்றம்பலம்

சோதியைச் சுண்ணவெண் ணீறணிந் திட்டஎம்
ஆதியை ஆதியும் அந்தமும் இல்லாத
வேதியை வேதியஉ தாம்தொழும் வெண்ணியின்
நீதியை நினையவல் லாஉ.வினை நில்லாவே.

### திருவாசகம்

உடையாள் உன்தன் நடுவிருக்கும் உடையாள்
நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும் இருப்ப
தானால் அடியேன்உன்
அடியார் நடுவுள் இருக்கும் அரு ளைப்புரி
யாய் பொன்னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து முடியும்
வண்ணம் முன்னின்றே.

### திருவிசைப்பா

பவளமால் வரையைப் பனிபடர்ந்(து)
அனையதோர் படரொளிதரு திருநீறும்
குவளை மாமலர்க் கண்ணியும் கொன்றையும்
துன்றுபொற் குழல்திருச் சடையும்
திவள மாளிகை சூழ்தரு தில்லை
யுள்திரு நடம்புரி கின்ற
தவள வண்ணனை நினைதொறும்
என்மனம் தழல்மெழு(கு)ஒக் கின்றதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

தாதையைத் தாளற வீசிய சண்டிக்கு மண்டத் தொடுமுடனே
பூதலத் தோரும் வணங்கப் பொற்கோயிலும் போனகமு மருளிச்
சோதி மணிமுடித் தாமமு நாமமுந் தொண்டர்க்குநாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத் தானுக்கே பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

மற்றுநீ வன்ம பேசி வன்றொண்டன் என்னும் நாமம்
பெற்றனை நனக்கும் அன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க
அற்சனை பாட்டே ஆகும் ஆதலால் மண்மேல் நம்மைச்
செற்றமிழ் பாடு கென்றார் தூமறை பாடும் வாயார்.

## திருப்புகழ்

துள்ளுமத வேள்கைக் ...... கணையாலே
தொல்லைநெடு நீலக் ...... கடலாலே
மெள்ளவரு சோலைக் ...... குயிலாலே
மெய்யுருகு மானைத் ...... தழுவாயே
தெள்ளுதமிழ் பாடத் ...... தெளிவோனே
செய்யகும ரேசத் ...... திறலோனே
வள்ளல்தொழு ஞானக் ...... கழலோனே
வள்ளிமண வாளப் ...... பெருமாளே.

## வாழ்த்து

வைய நீடு மாமழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தாந்தழைத்தோங்க
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. தேவாரம்

திருச்சிற்றம்பலம்

பண்ணின் நேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னார்வலஞ் செய்ம்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே

**திருவாசகம்**

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்
  பரனே பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
  திருப்பெருந்துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
  ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
  வருகஎன்றருள் புரியாயே.

**திருவிசைப்பா**

மாலோ(டு) அயனும் அமரர் பதியும் வந்து வணங்கிநின்(று)
ஆல கண்டா ! அரனே ! அருளாய் என்றென்(று) அவரேத்தச்
சேலா டும்வயல் தில்லை மல்கு சிற்றம் பலந்தன்னுள்
பாலா டுமுடிச் சடைகள் தாழப் பரமன் ஆடுமே.

**திருப்பல்லாண்டு**

மிண்டு மனத்தவர் போமின்கள்  மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடி யீசற்காட்  செய்மின் குழாம்புகுந்
தண்டாங்கடந்த பொருள்அள வில்லதோர்  ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள் என்றே  பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவு உலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

## திருப்புகழ்

இருந்த வீடுங் கொஞ்சிய சிறுவரு ...... முறுகேளும்
இசைந்த வூரும் பெண்டிரு மிளமையும் ...... வளமேவும்
விரிந்த நாடுங் குன்றமு நிலையென ...... மகிழாதே
விளங்கு தீபங் கொண்டுனை வழிபட ...... அருள்வாயே
குருந்தி லேறுங் கொண்டலின் வடிவினன் ...... மருகோனே
குரங்கு லாவுங் குன்றுறை குறமகள் ...... மணவாளா
திருந்த வேதந் தண்டமிழ் தெரிதரு ...... புலவோனே
சிவந்த காலுந் தண்டையு மழகிய ...... பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவில்லாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையார் கதை

## காப்பு

கரும்பும் இளநீரும் காரெள்ளுந் தேனும்
விரும்பும் அவல்பலவும் மேன் மேலருந்திக்
குணமுடையனாய் வந்து குற்றங்கள் தீர்க்கும்
கணபதியேயிக் கதைக்குக் காப்பு.

திருவிளங்கு மான்மருகா சேவல் தனிலேறி
வரும்மரன்றா னீன்றருளும் மைந்தா - முருகனுக்கு
முன்பிறந்த யானை முகவா உனைத் தொழுவேன்
என்கதைக்கு நீயென்றுங் காப்பு.

## விநாயகர் துதி

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலாற் கூப்புவர்தம் கை.

ஒற்றை மருப்பும் ஓரிரண்டு கைத்தலமும்
வெற்றி புனைந்த விழிமூன்றும் - பெற்றதொரு
தண்டைக்கால் வாரணத்தைத் தன் மனத்தில் எப்பொழுதும்
கொண்டக்கால் வராது கூற்று.

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துஉனக்கு நான்தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சப்பாணி

எள்ளு பொரிதேன் அவல் அப்பமிக்கும் பயறும் இளநீரும்
வள்ளிக்கிழங்கும் மாம்பழமும் வாழைப்பழமும் பலாப்பழமும்
வெள்ளைப்பாலும் மோதகமும் விரும்பிப்படைத்தேன் சந்நிதியில்
கொள்ளைக் கருணைக் கணபதியே கொட்டி அருள்க சப்பாணி.

சண்டப் பெருச்சாளி ஏறிச் சடைகொண்டு வையத் துலாவி
அண்டத்து அமரர் துதிக்க அடியார்க்கு அருளும் பிரானே
எண்திக்கும் அன்பர்கள் பார்க்க இணையற்ற பேரொளி வீசக்
குண்டைக் கணபதி நம்பி கொடுங்கையாற் சப்பாணி கொட்டே.

## சரஸ்வதி துதி

புத்தகத் துள்ளுறை மாதே பூவில் அமர்ந்திடு வாழ்வே
வித்தகப் பெண்பிள்ளாய் நங்காய் வேதப் பொருளுக்கு இறைவி
முத்தின் குடை உடையாளே மூவுலகுந் தொழுது ஏத்துஞ்
செப்புக் கவித்த முலையாய் செவ்வரி ஓடிய கண்ணாய்
தக்கோலந் தின்னும் வாயாய் சரஸ்வதி என்னுந் திருவே
எக்காலமும் உன்னைத் தொழுவேன் இயல் இசை நாடகம் என்னும்
முத்தமிழ்க் கல்விகள் எல்லாம் முழுதும் எனக்கருள் செய்து என்
சித்தம் தனில் நீ இருந்து திருவருள் செய்திடுவாயே.

## அதிகாரம்

பொன்னிறங் கடுக்கும் புனற்செறி குடுமித்
தென்மலை இருந்த சீர்சால் முனிவன்
கந்த மும்மதக் கரிமுகன் கதைதனைச்
செந்தமிழ் வகையால் தெளிவுறச் செப்பினன்
அன்னதிற் பிறவில் அரில்தபத் திரட்டித்
தொன்னெறி விளங்கச் சொல்லுவன் கதையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதை

மந்திர கிரியில் வடபால் ஆங்கு ஓர்
இந்துவளர் சோலை இராசமா நகரியில்
அந்தணன் ஒருவனும் ஆயிழை ஒருத்தியும்
சுந்தரப் புதல்வரைப் பெறுதல் வேண்டிக்
கடவுள் ஆலயமும் கடிமலர்ப் பொய்கையுந்
தடநிழற் பள்ளியுந் தாம்பல சமைத்துப்
புதல்வரைத் தருக எனப் பொருப்பு அரசு ஈன்ற
மதர்விழி பாகனை வழிபடும் நாளில்
மற்றவர் புரியும் மாதவங் கண்டு
சிற்றிடை உமையாள் சிவனடி வணங்கிப்
பரனே சிவனே பல்லுயிர்க்கு உயிரே
அரனே மறையவற்கு அருள்புரிந்து அருளென
அந்த அந்தணனுக்கு இந்த நற்பிறப்பில்
மைந்தரில்லை என்று மறுத்து அரன் உரைப்ப
எப்பரி சாயினும் எம்பொருட்டு ஒரு சுதன்
தப்பிலா மறையோன் தனக்கு அருள் செய்கென
எமையாளுடைய உமையாள் மொழிய
இமையா முக்கண் இறைவன் வெகுண்டு
பெண்சொற் கேட்டல் பேதைமை என்று
பண்சொற் பயிலும் பாவையை நோக்கிப்
பேதாய் நீ போய்ப் பிறவென மொழிய
மாதுஉமை யவளும் மனந்தளர்வு உற்றுப்
பொன்றிடு மானுடைப் புன்பிறப்பு எய்துதல்
நன்றல என்றே நடுக்கமுற்று உரைப்பக்
கறைமிடற்று அண்ணல் கருணை கூர்ந்து
பிறைநுதல் அவற்கு நீ பிள்ளை யாகச்
சென்று அவன் வளர்ந்து சிலபகல் கழித்தால்
மன்றல் செய்தருள்வோம் வருந்தலை என்று
விடைகொடுத்து அருள விலங்கன் மாமகளும்
பெடைமட யிற்சாயற் பெண்மக வாகித்
தார்மலி மார்பன் சதுர்மறைக் கிழவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர்மலி மனைவி திருவயிற்றில் உதித்துப்
பாவை சிற்றிலும் பந்தொடு கழங்கும்
யாவையும் பயின்ற இயல்பின ளாகி
ஐயாண்டு அடைந்த பின் அன்னையும் அத்தனும்
மையார் கருங்குழல் வாநுதல் தன்னை
மானுட மறையோற்கு வதுவை செய்திடக்
கானமர் குழலியைக் கருதிக் கேட்பப்
பிறப்பிறப் பில்லாப் பெரியோற்கு அன்றி
அறத்தகு வதுவைக்கு அமையேன் யான் என
மற்றவன் தன்னை உன் மணமகனாகப்
பெற்றிடல் அரிதெனப் பெயர்த்து அவர் பேச
அருந்தவ முயற்சியால் அணுகுவேன் யானெனக்
கருந்தட நெடுங்கண் கவுரி அங்கு உரைப்ப
மருமலி கமல மலர்த்தடத்து அருகில்
தருமலி நிழல் தவச் சாலையது அமைத்துப்
பணியணி பற்பல பாங்கியர் சூழ
அணிமலர்க் குழல் உமை அருந்தவம் புரிதலும்
அரிவை தன் அருந்தவம் அறிவோம் யாமென
இருவரும் அறியா இமையவர் பெருமான்
மான் இடம் ஏந்தும் வண்ணமது ஒழிந்து
மானிட யோக மறைவன் ஆகிக்
குடையொடு தண்டு நற்குண்டிகை கொண்டு
மடமயில் தவம்புரி வாவிக் கரையில்
கண்ணுதல் வந்து கருணை காட்டித்
தண்நறும் கூந்தல் தையலை நோக்கி
மின்பெறு நுண்ணிடை மெல்லியலாய் நீ
என்பெறத் தவமிங்கு இயற்றுவது என்றலும்
கொன்றை வார்சடையனைக் கூட என்று உரைத்தலும்
நன்று எனச் சிரித்து நான்மறை யோனும்
மாட்டினில் ஏறி மான் மழுத் தரித்துக்
காட்டினிற் சுடலையிற் கணத்துடன் ஆடிப்
பாம்பும் எலும்பும் பல்தலை மாலையுஞ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாம்பரும் அணிந்து தலையோடு ஏந்திப்
பிச்சை கொண்டு உழலும் பித்தன் தன்னை
நச்சி நீர் செய்தவம் நகைதரும் உமக்கெனப்
பூங்கொடி அருந்தவம் பூசுரன் குலைத்தலும்
ஆங்கு அவள் நாணமுற்று அணிமனை புகுதச்
சேடியர் வந்து செழுமலர் குழலியை
வாடுதல் ஒழிகென மனமிகத் தேற்றிச்
சிந்துர வாள்நுதற் சேடியர் சிலர்போய்த்
தந்தை தாயிருவர் தாளினை வணங்கி
வாவிக் கரையில் வந்தொரு மறையோன்
பாவைதன் செங்கையைப் பற்றினன் என்றலும்
தோடு அலர்கமலத் தொடைமறை முனியை
ஆடக மாடத்து அணிமனை கொணர்க என
மாடக யாழ்முரல் மங்கையர் ஓடி
நீடிய புகழாய் நீ எழுந்து அருள் என
மைம்மலர்க் குழலி வந்து எனை அழைக்கில்
அம்மனைப் புகுவன் என்று அந்தணன் உரைத்தலும்
பொற்றொடி நீ போய்ப் பொய்கையில் நின்ற
நற்றவ முனியை நடாத்திக் கொணர்கெனச்
சிவனை இகழ்ந்த சிற்றறிவுடையோன்
அவனையான் சென்றிங்கு அழைத்திடேன் என்று
சிற்றிடை மடந்தையுஞ் சீறினள் ஆகி
மற்றைய மாதர் மதிமுகம் நோக்கி
நெற்றியிற் கண்ணுடை நிமலனுக்கு அல்லஎன்
பொற்புஅமர் கொங்கை பொருந்துதற்கு அரிதால்
மானிட வேட மறையவன் தனக்கு
யான் வெளிப்படுவது இல்லையென்று இசைப்ப
மலையிடை வந்த மாமுனி தன்னை இணையடி
தொழுதல் இளையோர்க்கு இயல்பெனத்
தந்தையுந் தாயுந் தகைபெற மொழியச்
சிந்தை குளிர்ந்து சீறுதல் ஒழிந்து
தாய் சொல்மறுத்தல் பாவமென்று அஞ்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிழை தானும் அவனெதிர் சென்று
சுற்றிவந்து அவனடி சுந்தரி வணங்கி
மற்றவன் தன்னை மனையிற் கொணர்ந்து
ஆதியம் பகவற்கு அன்பன் ஆகும்
வேதியன் பழைய விருத்தன் என்றெண்ணி
ஆசனம் நல்கி அருக்கியம் முதலாப் பாத
பூசனைகள் பண்ணிய பின்னர்ப்
போனகம் படைத்துப் பொரிக்கறி பருப்புநெய்
ஆன்பால் மாங்கனி அழகிய பலாச்சுளை
தேன் கதலிப்பழம் சீர்பெறப் படைத்து
அந்தணன் தன்னை அமுது செய்வித்துச்
சந்தனங் குங்குமச் சாந்து இவை கொடுத்துத்
தக்கோலத்தொடு சாதிக் காயும்
கற்பூரத்தொடு கவின்பெறக் கொண்டு
வெள்ளிலை அடைக்காய் விளங்கிய பொன்னின்
ஒள்ளிய தட்டில் உவந்து முன்வைத்துச்
சிவனெனப் பாவனை செய்து நினைந்து
தவமறை முனிவனைத் தாளிணை வணங்கத்
தேனமர் குழலி திருமுகம் நோக்கி
மோனமாமுனி புன்முறுவல் காட்டிக்
கற்றைச் சடையுங் கரமொரு நான்கும்
நெற்றியில் நயனமும் நீல கண்டமும்
மானும் மழுவும் மலர்க்கரத்து இலங்கக்
கூன்மதி நிலவும் கொழித்திட முடிமேல்
வரந்தரு முதல்வன் மடமயில் காணக்
கரந்ததன் உருவங் காட்டி முன்நிற்ப
மரகத மேனி மலைமகள் தானும்
விரைவொடு அங்கு அவன் அடி வீழ்ந்து இறைஞ்சினளே
அரிஅயன் இந்திரன் அமரர் விஞ்சையர்
கருடர் கின்னரர் காய வாசியர்
ஏதமில் முனிவர் அவுணர் இராக்கதர்
பூதர் இயக்கர்கிம் புருடர் அலகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தர் தாரகை கந்தர்வர்கள் முதலாய்க்
கணிக்கரும் பதினெண் கணத்தில் உள்ளவரும்
மணிக்கருங் களத்தனை வந்தடைந்து அதன்பின்
மன்றல் அங் குழலிக்கு வதுவைநாள் குறித்துத்
தென்றல் வந்துஇலங்கு முன்றில் அகத்துப்
பொன்திகழ் பவளப் பொற்கால் நாட்டி
மாணிக்கத்தால் வளை பல பரப்பி
ஆணிப்பொன் தகட்டால் அழகுற வேய்ந்து
நித்தில மாலை நிரைநிரை தூக்கிப்
பக்திகள் தோறும் பலமணி பதித்துத்
தோரணம் நாட்டித் துகில் விதானித்துப்
பூரணப் பொற்குடம் பொலிவுற வைத்துத்
திக்குத் தோறும் திருவிளக்கேற்றிப்
பத்திப் படர்முளைப் பாலிகை பரப்பிக்
கன்னலுங் கமுகுங் கதலியும் நாட்டிப்
பன்மலர் நாற்றிப் பந்தர் சோடித்து
நலமிகு கைவலோர் நஞ்சணி மிடற்றனைக்
குலவிய திருமணக் கோலம் புனைந்தார்
வருசுரர் மகளிர் மலைமகள் தன்னைத்
திருமணக் கோலஞ் செய்தனர் ஆங்கே
எம்பிரானையும் இளங்கொடி தன்னையும்
உம்பர் எல்லாம் ஒருங்குடன் கூடிக்
கடலென விளங்கும் காவணந் தன்னில்
சுடர்விடு பவளச் சுந்தரப் பலகையில்
மறைபுகழ்ந்து ஏத்த மகிழ்ந்து உடன் இருத்திப்
பறையொலியோடு பனிவளை ஆர்ப்ப
வதுவைக்கு ஏற்ற மறைவிதி நெறியே
சதுர்முகன் ஓமச் சடங்குகள் இயற்றத்
தறுகலன் ஒளிபொன் தாலி பூட்டிச்
சிறுமதி நுதலியைச் சிவன்கைப் பிடித்தபின்
அறிவலஞ் சூழ எரிவலம் வந்து
பரிவுடன் பரிமளப் பாயலில் வைகிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதுஅணி கருங்குழற் பூவை தன்னுடனே
ஓதநீர் வேலைசூழ் உஞ்சையம் பதிபுக
ஏரார் வழியில் எண்திசை தன்னைப்
பாரா தேவா பனிமொழி நீ என
வருங்கருங் குழலாள் மற்றும் உண்டோ எனத்
திருந்து இழை மடந்தை திரும்பினாள் பார்க்கக்
களிறும் பிடியுங் கலந்து விளையாடல் கண்டு
ஒளிர்மணிப்பூணாள் உரவோடு உடனே
இவ் வகையாய் விளையாடுவோம் இங்கென
அவ்வகை அரனும் அதற்கு உடன் பட்டு
மதகரி உரித்தோன் மதகரி யாக
மதர்விழி உமைபிடி வடிவம் அதாகிக்
கூடிய கலவியில் குவலயம் விளங்க
நீடிய வானோர் நெறியுடன் வாழ
அந்தணர் சிறக்க ஆனினம் பெருகச்
செந்தழல் வேள்வி வேத ஆகமம் சிறக்க
அறம்பல பெருக மறம்பல சுருங்கத்
திறம்பல அரசர் செகதலம் விளங்க
வெங்கரி முகமும் வியன்புழைக்கையோடு
ஐங்கர தலமும் மலர்ப்பதம் இரண்டும்
பவளத்து ஒளிசேர் பைந் துவர்வாயும்
தவளக் கிம்புரித் தடமருப்பு இரண்டும்
கோடி சூரியர் போற் குலவிடு மேனியும்
பேழைபோல் அகன்ற பெருங்குட வயிறும்
நெற்றியில் நயனமும் முப்புரி நூலும்
கற்றைச் சடையுங் கனக நீண்முடியுந்
தங்கிய முறம்போல் தழைமடிச் செவியுமாய்
ஐங்கரத்து அண்ணல் வந்து அவதரித்தலும்
பொங்கரவு அணிந்த புண்ணிய மூர்த்தியும்
மங்கை மனமிக மகிழ்ந்து உடன் நோக்கி
விண்ணு ளோர்களும் விரிந்த நான் முகனும்
மண்ணு ளோர்களும் வந்து உனை வணங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கு அவர் தங்கட்கு அருள் சுரந்து அருளித்
தீங்கது தீர்த்துச் செந்நெறி அளித்துப்
பாரண மாகப் பலகனி அருந்தி
ஏரணி ஆலின்கீழ் இனிதுஇரு என்று
பூதலந் தன்னிற் புதல்வனை இருத்திக்
காதல்கூர் மடநடைக் கன்னியுந் தானும்
மைவளர் சோலை மாநகர் புகுந்து
தெய்வ நாயகன் சிறந்து இனிது இருந்த பின்
வான வராலும் மானு டராலும்
கானமர் கொடிய கடு விலங்காலும்
கருவிகளாலுங் காலனாலும்
ஒரு வகையாலும் உயிரழியாமல்
திரம்பெற மாதவஞ் செய்து முன்னாளில்
வரம் பெறுகின்ற வலிமை யினாலே
ஐம்முகச் சீயம் ஒத்து அடற்படை சூழக்
கைம்முகம் படைத்த கயமுகத்து அவுணன்
பொன்னுலகு அழித்துப் புலவரை வருத்தி
இந்நிலத் தவரை இடுக்கண் படுத்திக்
கொடுந்தொழில் புரியுங் கொடுமை கண்டு ஏங்கி
அடுந்தொழிற் குலிசத்து அண்ணலும் அமரருங்
கறைபடு கண்டக் கடவுளைப் போற்றி
முறையிடக் கேட்டு முப்புரம் எரித்தோன்
அஞ்சலீர் என்று அவர்க்கு அபயங் கொடுத்தே
அஞ்சுகைக் கரிமுகத்து அண்ணலை நோக்கி
ஆனை மாமுகத்து அவுணனோடு அவன் தன்
சேனைகள் முழுவதுஞ் சிந்திடப் பொருது
குன்றுபோல் வளர்ந்த குறட்படை கூட்டி
வென்று வா என்று விடை கொடுத்தருள
ஆங்கு அவன் தன்னோடு அமர்பல உடற்றிப்
பாங்குறும் அவன்படை பற்றறக் கொன்றபின்
தேர்மிசை ஏறிச் சினங்கொடு செருவிற்
கார்முகம் வளைத்த கயமுகா சுரன்மேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றைவெண் மருப்பை ஒடித்து அவன் உரத்திற்
குற்றிட எறிந்தான் குருதிசோர்ந் திடவே
சோர்ந்தவன் வீழ்ந்து துண்ணென எழுந்து

வாய்ந்த மூடிகமாய் வந்து அவன் பொரவே
வந்த மூடிகத்தை வாகனம் ஆக்கி
எந்தை விநாயகன் ஏறினன் இப்பால்
எறிந்த வெண்மருப்பு அங்கு இமைநொடி அளவில்
செறிந்தது மற்று அவன் திருக் கரத்தினிலே
வெல்லவைக் கதிர்வேல் விழிபடைத்து அருளும்
வல்லவை தனைத்தன் மனை என மணந்தே
ஒகையோடு எழுந்து ஆங்கு உயர்படை சூழ
வாகையும் புனைந்து வரும் வழி தன்னிற்
கருச்சசங் கோட்டிக் கயல் கமுகு ஏறும்
திருச்செங் காட்டிற் சிவனை அர்ச்சித்துக்
கணபதீச் சுரம் எனுங் காரண நாமம்
பணபதி புகழ்தரு பதிக்கு உண்டாக்கிச்
சங்கரன் பார்ப்பதி தனிமன மகிழ
இங்குவந்து அன்புடன் எய்திய பின்னர்க்
கணங்களுக்கு அரசாய்க் கதிர்முடி சூட்டி
இணங்கிய பெருமை பெற்று இருந்திட ஆங்கே
தேவர்கள் முனிவர் சித்தர் கந்தருவர்
யாவரும் வந்து இவன் ஏவல் செய்திடுநாள்
அதிகமாய் உரைக்கும் ஆவணித் திங்களின்
மதிவளர் பக்கம் வந்திடு சதுர்த்தியில்
விநாயகற் குரிய விரதமென்று எண்ணி
மனாதிகள் களித்து மரபொடு நோற்றார்
இப்படி நோற்றிட் எண்ணிய பெருநாள்
ஒப்பரும் விரதத்து உறும் ஒரு சதுர்த்தியில்
நோற்று நற்பூசை நுடங்காது ஆற்றிப்
போற்றி செய்திட்டார் புலவர் ஐங்கரனை
மருமலர் தாவும் வானவர் முன்னே
நிருமலன் குமரன் நிருத்தம் புரிந்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவருங் கைதொழுது அடிஇணை போற்ற
வனைகழற் சந்திரன் மனச்செருக்கு அதனால்
பேழைபோல் வயிறும் பெருத்த காத்திரமும்
தாழ்துளைக் கையும் தழைமுறச் செவியும்
கண்டனன் நகைத்தான் கரிமுகக் கடவுளும்
கொண்டனன் சீற்றம் குபேரனை நோக்கி
என்னைக் கண்டு இங்கு இகழ்ந்தனை சிரித்தாய்
உன்னைக் கண்டவர் உரைக்கும் இத்தினத்திற்
பழியொடு பாவமும் பலபல விதனமும்
அழிவும் எய்துவர் என்று அசனிபோற் சபித்தான்
விண்ணவர் எல்லாம் மிகமனம் வெருவிக்
கண்ணருள் கூருங் கடவுள் இத் தினத்திற்
கோரவெஞ் சினமிகக் கொண்டனன் அந்நாள்
மார்கழித் திங்கண் மதிவளர் பக்கஞ்
சதயந் தொட்ட சட்டிநல் விரதமென்
இதயத்து எண்ணி யாவரும் நோற்றார்.
இப்புவி மாந்தர் இயம்பிய விரதம்
வைப்புடன் நோற்ற வகை இனிச் சொல்வாம்
குருமணி முடிபுனை குருகுலத்து உதித்த
தருமனும் இளைய தம்பி மார்களும்
தேவகி மைந்தன் திருமுக நோக்கி
எண்ணிய விரதம் இடையூ றின்றிப்
பண்ணிய பொழுதே பலிப்பு உண் டாகவுஞ்
செருவினில் எதிர்ந்த செறுநரை வென்று
மருமலர்ப் புயத்தில் வாகை சூடவும்
எந்தத் தெய்வம் எவ்விரதத்தை வந்தனை
செய்யில் வருநமக்கு உரையெனப்
பாட்டுஅளி துதையும் பசுந்துழாய் மார்பனுங்
கேட்டருள் வீர் எனக் கிளர்த்த லுற்றான்
அக்கு நீறணியும் அரன்முதல் அளித்தோன்
விக்கினந் தீர்க்கும் விநாயக மூர்த்தி
ஓடவைத் திடும்பொன் ஒத்துஒளி விளங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடி சூரியர்போற் குலவிய மேனியன்
கடகரி முகத்தோன் காத்திரம் பெருத்தோன்
தடவரை போலுஞ் சதுர்ப்புய முடையோன்
சர்வா பரணமுந் தரிக்கப் பெற்றவன்
உறுமதிக் குழவிபோ லொருமருப் புடையோன்
ஒருகையில் தந்தம் ஒருகையிற் பாசம்
ஒருகையின் மோதகம் ஒருகையிற் செபஞ்செய்
உத்தம மாலையோன் உறு நினைவின்படி
சித்தி செய்வதனாற் சித்தி விநாயகன்
என்று இமையவரும் யாவருந் துதிப்ப
நன்றி தரும் திருநாமம் படைத்தோன்
புரவலர்க் காணப் புறப்படும் போதும்
செருவினில் யுத்தஞ் செய்திடும் போதும்
வித்தி யாரம்பம் விரும்பிடும் போதும்
உத்தி யோகங்கள் உற்றிடும் போதும்
ஆங்கவன் தன்னை அருச்சனை புரிந்தாற்
தீங்கு உறாது எல்லாஞ் செயம் உண்டாகும்
கரதலம் ஐந்துடைக் கணபதிக்கு உரிய
விரதமொன்று உளது அதை விரும்பி நோற்றவர்க்குச்
சந்ததி தழைத்திடுஞ் சம்பத் துண்டாம்
புந்தியில் நினைந்த பொருள்கை கூடும்
மேலவர் தமையும் வென்றிட லாமெனத்
தேவகி மைந்தன் செப்பிடக் கேட்டு
நுவலரும் விரதம் நோற்றிடும் இயல்பும்
புகர்முகக் கடவுளைப் பூசை செய்விதமும்
விரித்தெமக்கு உரைத்திட வேண்டுமென்று இரப்ப
வரைக்குடை கவித்தோன் வகுத்துரை செய்வான்
தேருநீர் ஆவணித் திங்களின் மதிவளர்
பூர்வ பக்கம் புணர்ந்திடு சதுர்த்தியின்
முந்தும் புலரியின் முறை நீர் படிந்து
சந்தி வந்தனந் தவறாது இயற்றி
அத்தினம் அதனில் ஐங்கரக் கடவுளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தியோடு அர்ச்சனை பண்ணுதல் வேண்டும்
வெள்ளியாற் பொன்னால் விளங்கும் அவன் தன்
ஒள்ளிய அருள் திரு உருவுண்டாக்கிப்
பூசனை புரியப் புகன்றனர் பெரியோர்
ஆசுஇலா மண்ணால் அமைத்தலுந் தகுமால்
பூசனஞ் செயுமிடம் புனித மாக்கி
வாசமென் மலரின் மஞ்சரி தூக்கிக்
கோடிகம் கோசிகம் கொடி விதானித்து
நீடிய நூல்வளை நிறைகுடத்து இருத்தி
விந்தைசேர் சித்தி விநாயகர் உருவைச்
சிந்தையில் நினைந்து தியானம் பண்ணி
ஆவா கனம் முதல் அர்க்கிய பாத்தியம்
வாகார் ஆச மனம் வரை கொடுத்து
ஐந்து அமிர்தத்தால் அபிடேகித்துக்
கந்தம் சாத்திக் கணேச மந்திரத்தால்
ஈசுர புத்திரன் என்னும் மந்திரத்தால்
மாசு அகல் இரண்டு வத்திரஞ் சாத்திப்
பொருந்து உமை சுதனாப் புகலு மந்திரத்தால்
திருந்தும் பளிதத் தீபங் கொடுத்துப்
பச்சறுகுடன் இருபத்தொரு விதமாய்
பத்திர புஸ்பம் பலபல கொணர்ந்தே
உமாசுதன் கணாதிபன் உயர்கரி முகத்தோன்
குமார குரவன் பாசாங் குசகரன்
ஏக தந்தன் ஈசுர புத்திரன்
ஆகு வாகனன் அருள்தரு விநாயகன்
சர்வ காரியமுந் தந்தருள் புரிவோன்
ஏரம்ப மூர்த்தி என்னும் நாமங்களால்
ஆரம்பத்துடன் அர்ச்சனை பண்ணி
மோதகம் அப்பம் முதற் பணிகாரம்
தீது அகல் மாங்கனி தீங்கதலிப்பழம்
வருக்கை கபித்த மாதுளங் கனியொடு
தரித்திடு நெட்டிலைத் தாழைமுப் புடைக்காய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருப்புநெய் பொரிக்கறி பால்தயிர் போனகம்
விருப்புள சுவைப்பொருள் மிகவும் முன்வைத்து
உருத்திரப்பிரியன் என்று உரைக்கும் மந்திரத்தால்
நிருந்தன் மகற்கு நிவேதனாங் கொடுத்து
நற்றவர் புகன்ற நானான்கு உபசாரமும்
மற்றவன் திருவுளம் மகிழ்ந்திடச் செய்து
எண்ணுந் தகுதி இருபிறப் பாளர்க்கு
உண் அறு சுவைசேர் ஓதனம் நல்கிச்
சந்தன முத்துத் தானந் தக்கிணை
அந்தணர்க்கு ஈந்திட்டு அருச்சகன் தனக்குத்
திருத்தகும் விநாயகத் திருவுருவத்தைத்
தரித்த வத்திரத்துடன் தானமாக் கொடுத்து
நைமித்திகம் என நவில்தரு மரபால்
இம்முறை பூசனை யாவர் செய்தலும்
எண்ணிய கருமம் யாவையும் முடிப்பர்
திண்ணிய செருவிற் செயம்மிகப் பெறுவர்
அரன் இவன் தன்னை முன் அர்ச்சனை பண்ணிப்
புரமொரு மூன்றும் பொடிபட எரித்தான்
உருத்திரன் இவனை உபாசனை பண்ணி
விருத்திரா சுரனை வென்று கொன்றிட்டான்
அகலிகை இவன்தாள் அர்ச்சனை பண்ணிப்
பகர்தருங் கணவனைப் பரிவுட னடைந்தாள்
தண்ணார் மதிமுகத் தாள் தமயந்தி
அன்னான் இவனை அர்ச்சனை பண்ணி
நண்ணார் பரவு நளனை அடைந்தாள்
ஐங்கரக் கடவுளை அர்ச்சனை பண்ணி
வெங்கத நிருதரை வேரறக் களைந்து
தசரதன் மைந்தன் சீதையை அடைந்தான்
பகிரதன் என்னும் பார்த்திவன் இவனை
மதிதலந் தன்னின் மலர்கொடு அர்ச்சித்து
வரநதி தன்னை வையகத்து அழைத்தான்
அட்ட தேவதைகளும் அர்ச்சித்து இவனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்ட போகத்துடன் அமிர்தமும் பெற்றார்
உருக்மணி என்னும் ஒண்டொடி தன்னைச்
செருக்கொடு வவ்விச் சிசுபாலன் தான்
கொண்டு போம் அளவிற் குஞ்சர முகவனை
வண்டு பாண்மிழற்றா மலர்கொடு அர்ச்சித்துத்
தாரியின் மறித்தவன் தனைப்புறங் கண்டு
யாமும் அங்கு அவளை இன்புறப் பெற்றோம்
புகர்முகக் கடவுளைப் பூசனை புரிந்து
மிகமிக மனத்தில் விளைந்தன பெற்றார்
இப்புவி தன்னில் எண்ணுதற்கு அரிதால்
அப்படி நீவிரும் அவனை அர்ச்சித்தால்
எப்பொருள் விரும்பினீர் அப்பொருள் பெறுவீர்
என்று கன்றெறிந்தோன் எடுத்திவை உரைப்ப
அன்றுமுதல் தருமனும் அனுசரும் இவனைப்
பூசனை புரிந்து கட்புலன் இலான் மைந்தரை
நாசனம் பண்ணி நராதிபர் ஆகிச்சிந்தையில்
நினைத்தவை செகத்தினிற் செயங்கொண்டு
அந்தமில் செல்வத்து அரசியல் பெற்றார்.
ஈங்கு இது நிற்க இவ்விரதத்து இயல்
ஓங்கிய காதை மற்றொன்று உரை செய்வாம்
கஞ்சநான் முகன் தரும் காசிபன் புணர்ந்த
வஞ்சக மனத்தாள் மாயை தன் வயிற்றிற்
சூரன் என்று ஒருவனுந் துணைவருந் தோன்றி
ஆர்கலி சூழ்புவி அனைத்தையும் அழித்தே
சீருடைச் சுவர்க்கத் திருவளங் கெடுத்தும்
புரந்தரன் முதலிய புலவரை வருத்தியும்
நிரந்தரந் தீய நெறி நடத்துதலால்
ஆயிரங் கண்ணனும் அமரரும் முனிவரும்
நீ இரங்கு எமக்கென நெடுங்கரங் கூப்பி
இரசத கிரிஉறை இறைவனை வணங்கி
வரமிகுஞ் சூரன் வலிமைகள் உரைக்கச்
சுடர்விடு மணிமுடிச் சூரனை வெல்லக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர்விடு வடிவேல் கரதலத்து ஏந்தும்
புதல்வனைத் தருவோம் போமின் நீர்
என அமரர் கோனுக்கு அரன்விடை கொடுத்துச்
சமரவேல் விழித் தையலுந் தானுங்
கூடிய கலவியிற் கூடாது ஊடலும்
ஓடிய வானோர் ஒருங்குடன் கூடிப்
பாவகன் தன்னைப் பரிவுடன் அழைத்துச்
சூரன் செய்யுந் துயரம் எல்லாம்
ஊர் அரவு அணிந்தோற்கு உரையென உரைப்பக்
காமனை எரித்த கடவுள் என்றஞ்சிப்
பாவகன் பயமுறப் பயமுனக்கு ஏதென
உற்றிடுங் கரத்தலத்து உன்னையே தரித்தான்
நெற்றியின் நயனமும் நீயே ஆதலிற்
குற்றம் அடாது கூறுநீ சென்றென
வானவர் மொழிய மற்றவன் தானுந்
தானும் அச் சபையில் தரியாது ஏகி
எமை ஆளுடைய உமையாளுடனே
அமையா இன்பத்து அமர்ந்து இனிது இருந்த
பள்ளி மண்டபம் பாவகன் குறுகலும்
ஒள்ளிய மடந்தை ஒதுங்கி நாணுதலுந்
தெள்ளிதிற் பரமனுந் தேயுவைக் கண்டே
ஆறுமுகப் பிள்ளையை அவன் கையில் ஈதலும்
வறியவன் பெற்ற வான்பொருள் போலச்
சோதி நீண்முடிச் சுடரோன் கொணர்ந்து
வாத ராசன் மலர்கையிற் கொடுப்ப
நீதி யோடு நின்று கையேந்திப்
போத நீள் வாயுவும் பொறுக்க ஒண்ணாமல்
தரும்புனற் கங்கை தன்கையில் கொடுப்பத்
தரும்புனற் கங்கையுந் தாங்கவொண்ணாமற்
பொருந்திரைச் சரவணப் பொய்கையில் வைப்பத்
தண்ஆர் வதனத் தாமரை ஆறுங்
கண் ஆறு இரண்டும் கரம் ஈராறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூண் எனத் திரண்ட தோள் ஈராறும்
மாண் அயில் ஆதி வான்படை யுங்கொண்டு
அறுமுகக் கடவுள் அங்கு அவதரித் திடலும்
மறுகிய உம்பர் மகிழ்ந்து உடன்கூடி
அறுமீன் களைப்பால் அளித்தீர் என்று அனுப்ப
ஆங்கவர் முலையுண்டு அறுமுகன் தானும்
ஓங்கிய வளர்ச்சி உற்றிடும் நாளில்
விமலனும் உமையும் விடையுகைத்து ஆறு
தலைமகன் இருந்த சரவணத்து அடைந்து
முருகுஅலர் குழல் உமை முலைப்பால் ஊட்ட
இருவரும் இன்பால் எடுத்து எடுத்து அணைத்துத்
தேவர் தம்படைக்குச் சேனா பதியெனக்
காவல்கொண்டு அளிக்கக் கதிர்முடி சூட்டி
அயில்வேல் முதற்பல ஆயுதங் கொடுத்துத்
திசையெலாஞ் செல்லுந் தேருமொன்று உதவிப்
பூதப் படைகள் புடைவரப் போய் நீ
ஓதுறும் அவுணரை ஒறுத்திடு என்றனுப்ப
இருளைப் பருகும் இரவியைப் போலத்
தகுவரென்று அவரைச் சமரிடை முருக்கிக்
குருகுபேர் பெறுங் குன்றமுஞ் சூரன்
மருமமுந் துளைபட வடிவேல் விடுத்தே
யாவரும் வியப்புற இந்திரன் மகளாந்
தேவகுஞ் சரியைத் திருமணம் புணர்ந்திட்டு
அமரர் கோனுக்கு அமருலகு அளித்துக்
குமர வேளுங் குவலயம் விளங்க
அமரா வதியில் அமர்ந்து இனிது இருந்தான்
சமர வேலுடைச் சண்முகன் வடிவுகண்டு
அமரர் மாதர் அனைவரும் மயங்கி
எண்டருங் கற்பினை இழந்தது கண்டே
அண்டர் எல்லாம் அடைவுடன் கூடி
மாதொரு பாகனை வந்து அடி வணங்கி
மருமலர்க் கடம்பன் எம் மாநகர் புகாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்செய வேண்டும் நீ அம்பிகா பதியென
இமையவர் உரைப்ப இறையவன் தானுங்
குமரனைக் கோபங் கொண்டுமுன் முனியக்
காவல்கொண்டு எம்வினை கட்டறுத்து அருளுஞ்
சேவலங் கொடியோன் தேசம் போகத்
திருந்திழை உமையாள் அருந்துயர் எய்தி
வருந்தி முன்னிற்க மங்கையைப் பார்த்து
மங்கை நீ தான் வருந்துதல் ஒழிகுதி
அங்கையாற் சூதெறிந்து ஆடுவோம் வாவென
வென்றதுந் தோற்றதும் விளம்புவார் யாரெனக்
குன்றமென் முலையாள் கூறிய சமயம்
புற்றுஅரவு அணிந்த புனிதனைக் காண அங்கு
உற்றனன் திருமால் ஊழ்வினை வலியாற்
சக்கிர பாணியைச் சான்றெனக் குறித்து
மிக்கதோர் சூது விருப்புடன் ஆடச்
சாயக நேருந் தடநெடுங் கருங்கண்
நாயகி வெல்ல நாயகன் தோற்ப
இன்பவாய் இதழ் உமையாள் வென்றேன் என
எம்பெருமானும் யான்வென்றேன் என
ஒருவர்க் கொருவர் உத்தரம் பேசி
இருவருஞ் சாட்சியம் இவனைக் கேட்ப
மாமனை வதைத்த மால்முகம் நோக்கிக்
காமனை எரித்தோன் கண்கடை காட்ட
வென்ற நாயகி தோற்றாள் என்றுந்
தோற்ற நாயகன் வென்றான் என்றும்
ஒன்றிய பொய்க்கரி உடன் அங்கு உரைப்பக்
கன்றிய மனத்தொடு கவுரி அங்கு உருத்து
நோக்கி நீ இருந்தும் நுவன்றிலை உண்மை
வாக்கினில் ஒன்றாய் மனத்தினில் ஒன்றாய்
மைக்கரி யுரித்தோன் வதனம் நோக்கிப்
பொய்க்கரி உரைத்த புன்மையினாலே
கனலென வயிற்றிற் கடும்பசி கனற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலமிசைக் குருட்டு நெட்டுடற் பாம்பாய்க்
கடகரி முகத்துக் கடவுள் வீற்றிருக்கும்
வடதரு நீழலிற் கிடவெனச் சபித்தாள்
முளரிகள் பூத்த முகில் நிறத்து உருப்போய்த்
துளவு அணி மருமனுந் துணை விழியிழந்தே
ஆண்டு அரைக் கணத்தில் ஆயிரம் யோசனை
நீண்டபைப் பாந்தள் நெட்டுடல் எடுத்து
வளர்மருப்பு ஒன்றுடை வள்ளல் வீற்றிருக்கும்
கிளர்சினை ஆலின் கீழ்க்கிடந் தனனால்
திரிகடக் கரியின் திருமுகக் கடவுளும்
வழிபடும் அடியார் வல்வினை தீர்த்தே
எழில்பெறு வடமரத்தின் கீழ் இருந்தான்
கம்ப மாமுகத்துக் கடவுள் தன் பெருமையை
அம்பு வியோருக்கு அறிவிப்போம் என
உம்பர் உலகத்து ஓர் எழு கன்னியர்
தம்பநூல் ஏணியில் தாரணி வந்து
கரிமுகக் கடவுளைக் கைதொழுது ஏத்திக்
கார்த்திகைக் கார்த்திகைக் கழிந்த பின்னாளில்
ஆர்த்த கலிங்கத்து அணியிழை வாங்கி
இருபத்தோர் இழை இன்புறக் கட்டி
ஒருபோது உண்டி உண்டு ஒரு மனமாய்
வேதத்து ஆதியும் பூமியில் எழுத்தும்
ஆதி விநாயகற்கு ஆன எழுத்தும்
மூன்றெழுத்து அதனால் மொழிந்த மந்திரமும்
தேன்தருங் குழலியர் சிந்தையுட் செபித்தே
உரைதரு பதினாறு உபசாரத்தால்
வரைமகள் மதலையை வழிபாடு ஆற்றி
இருபது நாளும் இப்படி நோற்று
மற்றை நாள் ஐங்கர மாமுகன் பிறந்த
அற்றைநாள் சதயமும் ஆறாம் பக்கமுஞ்
சேரும் அத் தினத்தில் தெளிபுனல் ஆடி
வாரண முகத்தோன் வதிபெருங் கோயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர்பெற மெழுகித் திருவிளக் கேற்றிக்
குலவுபொற் கலைகள் கொடு விதானித்து
மலர்பல தொடுத்திடு மாலைகள் ஆற்றிக்
கொலைபுரி வடிவேற்கு கற்குமுன் வருகை
மலைமுகக் கடவுளை மஞ்சனம் ஆட்டிப்
பொற்கலை நன்னூற் பூந்துகில் சாத்திச்
சொற்பெறு சந்தனச் சுகந்தம் பூசிக்
செருந்தி சண்பகஞ் செங்கழு நீரொடு
குருந்து மல்லிகை கோங்கொடு பிச்சி
கருமுகை புன்னை கடிகமழ் பாதிரி
மருவிரி ஞாழல் மகிழ் இரு வாட்சி
தாமரை முல்லை தழையவில் கொன்றை
பூமலர் நொச்சி பூத்தமைக் குவளை
காந்தள் ஆத்தி கடம்பு செவ்வந்தி
வாய்ந்த நல்எருக்கு மலர்க்கர வீரம்
பச்சிலை நொச்சி படர்கொடி அறுகு
முத்தளக் கூவிளம் முதலிய சாத்தித்
தூப தீபங்கள் சுகம்பெறக் கொடுத்தே
அப்பம் மோதகம் அவல் எள்ளுருண்டை
முப்பழந் தேங்காய் முதிரமொழிக் கரும்பு
சீனிதேன் சர்க்கரை செவ்விள நீருடன்
பால்நறு நெய்தயிர் பருப்புடன் போனகங்
கற்பகக் கடவுள் களித்திடத் திருமுன்
பொற்புறப் படைத்துப் பூசனை பண்ணி
நோற்பது கண்டு நோலாது இருந்த
பாப்புரு வாகிய பஞ்சா யுதனும்
யாப்புறு கொங்கையீர் யானும் நோற்பேன் என
ஆங்கு அவன் தனக்கும் வேண்டுவது அளித்துப்
பாங்கொடு இவ்விரதம் பரிந்து நோற்பித்தார்
அண்டர் நாயகனாம் ஐங்கரன் அருளால்
விண்டுவும் பண்டுஉள வேடம் பெற்றே
உஞ்சைமா நகர்புகுந்து உமையொடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமலன் கஞ்சநாள் மலர்ப்பதங் கைதொழு திடலும்
பஞ்சிமென் சீறடிப் பார்ப்பதி நெஞ்சின்
வெஞ்சினம் மிகுந்து விமலனை நோக்கி
யானிடுஞ் சாபம் நீங்கியது ஏதென
மானெடுங் கண்ணி மணிக்கதவு அடைப்ப
இறையவன் இதற்குக் காரணம் ஏதென
மறிகடல் துயிலும் மாயவன் உரைப்பான்
பிறைமருப்பு ஒன்றுடைப் பிள்ளை அன்று
எனக்குத் தந்தருள் புரிந்த தவப்பயன் ஈதெனச்
சிந்தை மகிழ்ந்து தேவர் தேவனும்
பூங்கொடி அடைத்த பொன்தாழ் நீங்கச்
சாங்குமுன் உரைத்த சக்கர பாணி
இக்கதை சொல்ல அக்கணி சடையனும்
மிக்கநல் விரதம் விருப்புடன் நோற்றபின்
மாதுஉமை அடைந்த வன்தாழ் நீக்கி
நாதனை நணுகிட நம்பனும் நகைத்தான்
நானோ வந்தது நகையானது எனத்
தேன்நேர் மொழியாள் தெளியக் கூறென
நன்மதி நுதலாய் நானிலந் தன்னில்
உன்மகன் நோன்பின் உறுதி அறிந்து
சிந்தை மகிழ்ந்து சிரித்தேன் யானென
அந்தமில் அரனை ஆயிழை வணங்கிப்
பொருஞ் சூர் அறவேல் போக்கிய குமரன்
வரும்படி யானும் வருத்தி நோற்பேனென
இறையவன் கதைசொல ஏந்திழை நோற்றபின்
குறமட மகளைக் குலமணம் புரிந்தோன்.
சுடர்வடி வேலோன் தொல்வினை தீர்ந்து
தாதுமை வண்டு உழுந்தாமத் தாமனை
மாதுமை யாளை வந்து கண்டனனே
கண்ண நீ கண்ணிலாக் கட்செவி ஆகுஎனக்
தண்நறுங் குழலுமை சாபமிட்டதுவும்
அக்கு நீறணியும் அரன்முதல் அளித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கின விநாயகன் விரதம் நோற்று அதன்பின்
சுடர்க்கதை ஏந்துந் துளவ மாலையன்
விடப்பணி உருவம் விட்டு நீங்கியதும்,
பவுரிகொள் கூத்துடைப் பரமனும் நோற்றுக்
கவுரி அன்று அடைத்த கபாடந் திறந்ததும்,
வாசமென் குழலுடை மாதுமை நோற்பத்
தேசம் போகிய செவ்வேள் வந்ததும்,
வானவர் நோற்று வரங்கள் பெற்றதும்,
நாரத முனிவன் நவின்றிடக் கேட்டே
இந்நிலந் தன்னில் இவ்விரதத்தை
மன்னவன் வச்சிர மாலிமுன் நோற்றுக்
காயத் தெழுந்த கடும்பிணி தீர்த்து
மாயிரும் புவியின் மன்னனாய் வாழ்ந்து
தடமுலைத் திலோத்தமை தனைமணம் புணர்ந்து
மழவிடை போற்பல மைந்தரைப் பெற்றுக்
கடைமுறை வெள்ளியங் கயிலையில் உற்றான்
பரிவொடு இவ்விரதம் பாரகந் தன்னில்
விரைகமழ் நறுந்தார் விக்ர மாதித்தன்
மறிகடற் புவிபெற வருந்தி நோற்றிடுநாள்
மற்றவன் காதல் மடவரல் ஒருத்தி
இற்றிடும் இடையாள் இலக்கண சுந்தரி
மெத்த அன்புடன் இவ் விரதம் நோற்பேனென
அத்தந் தன்னில் அணியிழை செறித்துச்
சித்தம் மகிழ்ந்து சிலநாள் நோற்றபின்
உற்ற நோன்பின் உறுதி மறந்து
கட்டிய இழையைக் காரிகை அவிழ்த்து
வற்றிய கொவ்வையின் மாடே போட
ஆங்கு அது தழைத்தே அலருந் தளிருமாய்ப்
பாங்குற ஓங்கிப் படர்வது கண்டு
வேப்பஞ் சேரியிற் போய்ச் சிறையிருந்த
பூப்பயில் குழல்சேர் பொற்றொடி யொருத்தி
அவ்வியம் இல்லாள் அவ்விடந் தன்னிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொவ்வை அடகு கொய்வாள் குறுகி
இழையது கிடப்பக் கண்டு அவள் எடுத்துக்
குழைதவிழ் வரிவிழிக் கோதை கைக்கட்டி
அப்பமோடு அடைக்காய் அவைபல வைத்துச்
செப்பமுடனே திருந்திழை நோற்றிடக்
கரிமுகத்து அண்ணல் கருணை கூர்ந்து
பண்டையில் இரட்டி பதம் அவட்கு அருள
கொண்டுபோய் அரசனுங் கோயிலுள் வைத்தான்
விக்கிர மாதித்தன் விழிதுயில் கொள்ள
உக்கிரமான உடைமணி கட்டித்
தண்டையுஞ் சிலம்புத் தாளினின்று ஒலிப்பக்
கொண்டல் போல்வருங் குஞ்சர முகத்தோன்
மனமிகக் கலங்கு மன்னவன் தன்னிடங்
கனவினில் வந்து காரண மாக
இலக்கண சுந்தரி இம்மனை இருக்கிற்
கலக்கம் வந்திடுங் கழித்திடு புறத்தெனத்
துண்ணென எழுந்து துணைவியை நோக்கிக்
கண்ணுறக் கண்ட கனவின் காரணம்
அண்ணல் உரைத்திடும் அவ்வழி தன்னில்
ஆனை குதிரை அவைபல மடிவுற
மாநகர் கேடுறும் வகையது கண்டு
இமைப்பொழுது இவள் இங்கு இருக்கலாகாது என
அயற் கடை அவனும் அகற்றிய பின்னர்
வணிகன் தனது மனைபுகுந்து இருப்ப
மணியும் முத்தும் வலிய கல்லாய்விட
அணியிழை தன்னை அவனும் அகற்ற
உழவர் தம்மனையில் உற்று அவள் இருப்ப
வளர்பயிர் அழிந்து வளம்பல குன்ற
அயன்மனை அவரும் அகற்றிய பின்னர்க்
குயவன் மனையிற் கோற்றொடி செல்லக்
குயக்கலம் உடைந்து கொள்ளை போக
அயற்கடை அவனும் அகற்றிய பின்னர்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூசுதூய் ஆக்குந் தொழிலோர் மனைபுகத்
தூசுகளெல்லாந் துணிந்து வேறாகத்
தூசரும் அவளைத் தூரஞ் செய்ய
மாலைக் காரன் வளமனை புகலும்
மலை பாம்பாம் வகையது கண்டு
ஞாலம் எல்லாம் நடுங்கவந்து உதித்தாய்
சாலவும் "பாவிநீ தான்யார்?" என்ன
வெம்மனம் மிகவும் மேவி முனிவுறா
அம்மனை அவனும் அகற்றிய பின்னர்
அவ்வை தன்மனை அவள் புகுந்திருப்ப
அவ்வை செல்லும் அகங்கள் தோறும்
வைதனர் எறிந்தனர் மறியத் தள்ளினர்
கைகொடு குத்தினர் கண்டோர் பழித்தனர்
அவ்வை மீண்டும் தன் அகம் அதிற்சென்று
இவ்வகைக் கன்னி நீ யாரென வினாவக்
காத்தாண்டு உலகு கருணையோடு ஆண்ட
மார்த்தாண்ட ராசன் மாமகள் ஒருத்தி
எல்லார்க்கும் மூத்தாள் இலக்கண சுந்தரி
சொல்லும் விக்கிரம சூரியன் மனையெனச்
சீர்கெட இருந்த தெரிவையை நோக்கி
நீரது கொண்டு நிலம் மெழுகிடுக எனச்
சாணி எடுக்கத் தையலுஞ் சென்றாள்
சாணியும் உழுத்துத் தண்ணீர் வற்றிப்
பேணிய புழுவாய்ப் பெரிது தோன்ற
மான்நேர் விழியாள் வருந்துதல் கண்டு
தானே சென்று சாணி எடுத்துத்
தண்ணீர் கொணர்ந்து தரை மெழுக்கிட்டு
மண்ணிய வீட்டில் மணிவிளக்கு ஏற்றிப்
புத்தகம் எடுத்து வாவெனப் புகலப்
புத்தகம் பாம்பாய்ப் பொருந்தி நின்றாட
மெத்தஉள் நடுங்கி வீழ்ந்தவள் கிடப்பக்
கொவ்வையாங் கனிவாய்க் கோதையை விலக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வை தானே அகமதிற் சென்று
புத்தக எடுத்துப் பொருந்தப் பார்த்து
வித்தக நம்பி விநாயக மூர்த்தி
கற்பகப் பிள்ளைசெய் காரியம் இதுவென
உத்தமி அவ்வை உணர்ந்து முன்அறிந்து
தவநெறி பிழைத்த தையலை நோக்கி
துவலரும் விநாயக நோன்பு நோற்றிடுக எனக்
கரத்து மூஏழு இழைக் காப்புக் கட்டி
அப்பமும் அவலும் மாம் பல பண்டமுஞ்
செப்ப மதாகத் திருமுன் வைத்தே
அவ்வை கதைசொல ஆயிழை கேட்டு
மத்தகக் களிற்றின் மகா விரதத்தை
வித்தகமாக விளங்கு இழை நோற்றுக்
கற்பக நம்பி கருணை பெற்றதன் பின்,
சக்கர வாள சைனியத்தோடு
விக்ர மாதித்தன் வேட்டையிற் சென்று
தானுஞ் சேனையுந் தண்ணீர் விரும்பி
எவ்வகை செய்வோம் எனஉளம் மெலிந்தே
அவ்வை தன்மனை அங்குஅவர் அணுக
எய்துந் தாகமும் இளைப்புங் கண்டு
செவ்வே அவற்றைத் தீர்க்க எண்ணி
இலக்கண சுந்தரி என்பவள் தன்னை
அப்பமும் நீரும் அரசற்கு அருள்எனச்
செப்பிய அன்னை திருமொழிப் படியே
உண்நீர்க் கரகமும் ஒரு பணிகாரமும்
பண்நேர் மொழியாள் பார்த்திபற்கு உதவ
ஒப்பறு படையும் உயர்படை வேந்தனும்
அப்பசி தீர அருந்திய பின்னர்
ஆனை குதிரை அவைகளும் உண்டுந்
தான்அது தொலையாத் தன்மையைக் கண்டே
இவ்வகை சமைத்த நீ யாரென வினவ
மவ்வல் அம் குழலாள் மௌனமாய் நிற்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வை தான்சென்று அரசற்கு உரைப்பாள்
கணபதி நோன்பின் காரணங் காண் இது
குணமுடை இவள் உன் குலமனையாட்டி
இலக்கண சுந்தரி என்று அவ்வை கூற
மங்கையை நோக்கி மனம்மிக மகிழ்ந்து
திங்கள்நேர் வெள்ளிச் சிவிகையில் ஏற்றிக்
கொண்டுஊர் புகுந்தான் கொற்ற வேந்தனும்
ஒண்தொடி யாரில் உயர்பதம் உதவினன்
சிந்துர நுதலார் சென்று அடி பணியச்
சுந்தரி இருந்தாள் சுகத்துடன் மகிழ்ந்தே.

## போற்றி திரு அகவல்

அருள்புரிந்து அருளும் அரசே போற்றி
இருவினை துடைக்கும் இறைவா போற்றி
மறைமுனி ஒருவன் மாங்கனி கொணர்ந்து
கறைமிடற்று இறைவன் கையில் கொடுப்ப
வேலனும் நீயும் விரும்பி முன் நிற்ப
ஒருநொடி அதனில் உலகெலாம் வலமாய்
வரும் அவர் தமக்கு வழங்குவோம் யாம் என
விரைவுடன் மயல்மிசை வேலோன் வருமுனர்
அரனை வலம்வந்து அக்கனி வாங்கிய
விரகுள விக்கின விநாயக போற்றி
முன்னடி தெரியா முதல்வனைப் போற்றி
பின்னடி தெரியாப் பெருங்கவிப் பெருமான்
மண்மிசை வைத்து உனை வாவியில் செல்லக்
கண்ணிலான் இவனெனக் கரந்து அவன் போகக்
கரமிசை ஏறிக் காணாது இரங்கி
உரை தடுமாறி உள்ளம் கலங்கிக்
கூகூ கணபதி கூகூ என்னக்
கூகூ என்றருள் குன்றே போற்றி
அப்பணி சடையோன் முப்புரம் எரிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்புவி அதனை இரதம் ஆக்கித்
தினகரன் மதிதேர்ச் சில் இலதாகப்
பொருவரு மறைகளே புரவி யாகச்
சங்கைசேர் நான்முகன் சாரதி யாகப்
பங்கயக் கண்ணன் பகழி யாக
மலை சிலையாக வாசுகி நாணா
நிலைபெற நிற்கும் நெடுந்தேர் தன்னில்
விக்கினம் தீர்க்கும் விநாயக நம எனச்
சிக்கென இறைவன் செப்பா தேறலின்
தச்சுறச் சமைத்த தகைமணி நெடுந்தேர்
அச்சறுத்து அருளும் அரசே போற்றி
வேதப் பொருளாம் விமலா போற்றி
பூதப் படையுடைப் புனிதா போற்றி
கரமைந்து உடைய களிறே போற்றி
பரமன் பயந்த பாலா போற்றி
அகிலம் ஈன்று அருளும் அம்மை தமக்குத்
திருமகன் ஆகிய செல்வா போற்றி
அற்றவர்க்கு அருள்புரி அரசே போற்றி
கற்றவர் மனதிற் காண்பாய் போற்றி
பாசாங்குசம் கை பரித்தாய் போற்றி
தேசார் மணிமுடித் தேவே போற்றி
எழுநரகு எழுபிறப்பு அறுப்பாய் போற்றி
எழுமையும் எமக்கு இங்கு இரங்குவாய் போற்றி
துளைசெறி வக்கிர துண்டா போற்றி
வளநிகர் ஒற்றை மருப்பா போற்றி
சுரர்தொழும் முருகன் துணைவா போற்றி
நல்லவர் புகழும் நம்பா போற்றி
வல்லபைக்கு உரிய மணாளா போற்றி
கயமுகத்து அவுணனைக் காய்ந்தாய் போற்றி
வயமுக மூக்ஷிக வாகனா போற்றி
ஓங்காரத் தனி உருவே போற்றி
நீங்காக் கருணை நிமலா போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறவர் தமக்கு ஒரு துணைவா போற்றி
முறநிகர் தழைசெவி முதல்வா போற்றி
துண்டமா மதிபோல் துலங்கிய கோட்டைக்
கண்டகம் ஆகக் கைதனில் பிடித்துப்
பண்டு பாரதப் பழங்கதை பசும்பொன்
விண்டுவில் வரைந்த விமலா போற்றி
போற்றி போற்றியுன் பொற்பதம் போற்றி

போற்றித் திரு அகவல் முற்றிற்று.

## காரியசித்தி மாலை

பந்தம் அகற்றும் அநந்தகுணப் பரப்பும் எவன்பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில் ஈண்டி இருந்து கரக்குமோ
சந்தமறை ஆகமங் கலைகள் அனைத்தும் எவன்பால் தகவருமோ
அந்த இறையாம் கணபதியை அன்பு கூரத் தொழுகின்றோம்.

உலகமுழுவதும் நீக்கமற ஒன்றாய் நிற்கும்பொருள் எவன்அவ்
உலகிற்பிறக்கும் விகாரங்கள் உறாதமேலாம் ஒளியாவன்?
உலகம் புரியும் வினைப் பயனை ஊட்டும் களைகண் எவன் அந்த
உலக முதலைக் கணபதியை உவந்து சரணம் அடைகின்றோம்.

இடர்கள் முழுதும் எவனருளால் எரிவீழும் பஞ்சென மாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால் சுரர்வாழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க்கு ஊறின்றி கருமம் எவனால் முடிவுறும் அத்
தடவுமருப்புக் கணபதி பொன் சரணம் சரணம் அடைகின்றோம்.

மூர்த்தியாகித் தலமாகி முந்நீர் கங்கை முதலான
தீர்த்தமாகி அறிந்தறியாத் திறத்தினாலும் உயிர்க்கு நலம்
ஆர்த்திநாளும் அறியாமை அகற்றி அறிவிப்பான் எவன் அப்
போர்த்த கருணைக் கணபதியைப் புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் வினையின் முதல்யாவன் செய்யப்படும் அப்பொருள் யாவன்
ஐயமின்றி உளதாகும் அந்தக் கருமப் பயன் யாவன்
உய்யும் வினையின் பயன் விளைவில் ஊட்டி விடுப்பான் எவன் அந்தப்
பொய்யி இறையைக் கணபதியைப் புரிந்து சரணம் அடைகின்றோம்.

வேதம் அளந்தும் அறிவரிய விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேத முடிவில் நடம் நவிலும் விமலன் யாவன் விளங்குபர
நாதமுடிவில் வீற்றிருக்கும் நாதன்எவன் எண்குணன் எவன்அப்
போதமுதலைக் கணபதியைப் புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.

மண்ணின் ஓர் ஐங்குணமாகி வதிவான் எவன் நீரிடை நான்காய்
நண்ணி அமர்வான் எவன்தீயின் மூன்றாய் நவில்வான் எவன் வளியின்
எண்ணும் இரண்டு குணமாகி இயைவான் எவன் வானிடை ஒன்றாம்
அண்ணல் எவன் அக்கணபதியை அன்பிற் சரணம் அடைகின்றோம்.

பாச அறிவில் பசுஅறிவில் பற்றற்கரிய பரன்யாவன்
பாச அறிவும் பசுஅறிவும் பயிலப் பணிக்கும் அவன்யாவன்
பாச அறிவும் பசுஅறிவும் மாற்றி மேலாம் அறிவான
தேசன் எவன் அக்கணபதியைத் திகழச் சரணம் அடைகின்றோம்.

## வருக்கைக் கோவை

அன்புடைக் கடவுளர்க்கு அதிபதி செயசெய
ஆபத்து அகற்றும் ஐங்கர செயசெய
இந்துச் சடைமுடி இறைவா செயசெய
ஈசன் பெற்ற எம்மான் செயசெய
உன்னிய முடிக்கும் ஒருவா செயசெய
ஊர்மனை சந்தி உகந்தாய் செயசெய
எம் பெருமானே ஏகனே செயசெய
ஏழுலகுந் தொழ இருப்பாய் செயசெய
ஐயா கணங்கட்கு ஆதீ செயசெய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றை மருப்பை உடையாய் செயசெய
ஓங்கிய கரிமுகம் உற்றாய் செயசெய
ஔவியம் இல்லாதவனே செயசெய
அஃகர அணிந்த ஆதீ செயசெய
கண்மூன்று உடைய களிறே செயசெய
ஙப்போல் மழு ஒன்று ஏந்தீ செயசெய
சங்கரன் தேரச் சறுத்தாய் செயசெய
ஞயமுடை வித்தக நம்பீ செயசெய
இடமுடை விக்கனேசுரா செயசெய
இ ணங்கிய அன்பர்க்கு இனியாய் செயசெய
தத்துவம் உறைதரு சாமீ செயசெய
நன்னெறி வித்தக நம்பீ செயசெய
பகீரதிக்கு இனிய பாலா செயசெய
மன்றுள் ஆடி மகனே செயசெய
இயக்கரைக் களையும் இறைவா செயசெய
அரவக் கிங்கிணி அணிவாய் செயசெய
இலகக் கொம்பு ஒன்று ஏந்தீ செயசெய
வஞ்சனைப் பழவினை மாற்றுவாய் செயசெய
அழகிய வேலனுக்கு அண்ணா செயசெய
இளமத யானை முகத்தாய் செயசெய
அனந்தல் ஆடும் அரசே செயசெய
கரமைந்து உடைய கணபதி செயசெய
காமன் பகைவன் காதல் செயசெய
கிரியில் பாரதம் தீட்டினாய் செயசெய
கீழ்மை ஒழித்துக் கிளர்வாய் செயசெய
குண்டப் பண்டிக் குருவே செயசெய
கூறிய மும்மதக் கோவே செயசெய
கெண்டையம் கண்ணுமை மகனே செயசெய
கேதார ப்ரியம் ஆனாய் செயசெய
கையில் சக்கரம் உடையாய் செயசெய
கொவ்வைக் கனிவாய் மதலாய் செயசெய
கோலக் குடநிகர் வயிற்றாய் செயசெய
கௌவைப் பழவினை தீர்பாய் செயசெய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தத்துவஞானத் திரு அகவல்

## ஔவையார் அருளியது

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்னமருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்

வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்

இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் ஈன்ற கற்பகக் களிறே!
முப்பழ நுகரும் மூஷிக வாகன!

இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து

குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்கும் கருத்தினை யறிவித்(து)
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து

தலமொரு நான்கும் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி
ஆறா தாரத்(து) அங்குச நிலையும்

பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமும் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்

குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்

குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடல்சக் கரத்தின் உறுப்பையும் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண் முகமாக இனிதெனக் கருளிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி யினிதெனக் கருளி
என்னை யறிவித்(து) எனக்கருள் செய்து

முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே யென்றன் சிந்தை தெளிவித்(து)
இருள்வெளி யிரண்டுக்(கு) ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்(து) அழுத்தியென் செவியில்

எல்லை யில்லா ஆனந் தம்அளித்(து)
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்(கு) அணுவாய் அப்பாலுக்(கு) அப்பாலாய்க்

கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்

தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே!

தத்துவஞானத் திருஅகவல் முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் கவசம்

வளர்சிகையைப் பராபரமாய் வயங்கு விநாயகர் காக்க
வாய்ந்த சென்னியளவு படாதிக சவுந்தரதேக
மதோற்கடர்தாம் அமர்ந்து காக்க
விளரற நெற்றியை என்றும் விளங்கிய காசிபர் காக்க புருவந்தம்மைத்
தளர்வின் மஹோதரர் காக்க
தடவிழிகள் பாலசந்திரனார் காக்க
கவின்வளருமதரங் கசமுகர் காக்க
தாலங் கணக்கிரீடர் காக்க
நவில் சிபுகங்கிரிசை சுதர் காக்க
நனி வாக்கை விநாயகர்தாங் காக்க
அவிர் நகை துன்முகர் காக்க
வள்ளொழிற் செஞ்செவி பாசபாணி காக்க
தவிர்தலுறா திளங்கொடிபோல் வளர்மணி
நாசியைச் சிதிதாரதர் காக்க
காமரூபு முகந்தன்னைக் குணேசர் நனிகாக்க
களங்கணேசர் காக்க
வாமமுறு இருதோளும் வயங்கு கந்தபூர்வசர்தாம் மகிழ்ந்து காக்க
ஏமமுறு மணிமுலை விக்கின விநாசன் காக்க
இதயந்தன்னை தோமகலுங் கணநாதர் காக்க
அகட்டினைத்துலங் கேரம்பர் காக்க
பக்கமிரண்டையும் தராதரர் காக்க
பிருட்டத்தைப் பாவநீக்கும் விக்கின கரன் காக்க
விளங்கி லிங்கம் வியாளபூடணர் தான்காக்க
தக்க குய்யம்தன்னை வக்கிரதுண்டர் காக்க
சகனத்தை அல்லல் உக்கணபன் காக்க
ஒருவை மங்களமூர்த்தி யுவந்து காக்க
தாழ் முழந்தாண் மகாபுத்தி காக்க
இருபத மேகதந்தர் காக்க
வாழ்கரங்கிப் பிரப்பிரசாதனர் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்கையை வணங்குவார் நோய் ஆழ்தரச்
செய்யாச பூரகர்தாங்காக்க
விரல்பதுமவத்தர் காக்க
கேழ்கிளரு நகங்கள் விநாயகர் காக்க
அக்கினிற் சித்தீசர் காக்க
உமாபுத்திரர் தென் ஆசைக்காக்க
மிக்க நிருதியிற் கணேசர் காக்க
விக்கின வர்த்தனர் மேற்கென்னுந் திக்குதனிற் காக்க
வாயுவிற் கசகன்னன் காக்க
திகழுதீசி தக்க நிதிபன் காக்க
வடகிழக்கில் ஈசநந்தனரே காக்க
ஏகதந்தர் பகன்முழுதும் காக்க
விரவினுஞ் சந்தி யிரண்டன் மாட்டும் ஓகையின்
விக்கினகாரகன் காக்க
விராக்கதர் பூதம் உறுவே தாளம் மோகினி பேய் இவையாதி
உயிர்த்திறத்தால் வருந்துயரும் முடிவிலாத வேகமுறு
பிணிபலவும் விலக்குபு பாசாங்குசர்தாம் விரைந்து காக்க
மதி ஞானம் தவம் தானம் மனம் மொழி புகழ்குலம்
வண் சரீரமுற்றும் தனந்தானியம் கிருகம்
மனைவி மைந்தர்பயி னட்பாதிக் கதியாவுங்
கலந்து சர்வாயுதர் காக்க
காமர் பௌத்திரர் முன்னான விதியாருஞ் சுற்றமெலா
மயூரேசர் எஞ்ஞான்றும் விரும்பிக்காக்க
வென்னி சீவிதம் கபிலர் காக்க
கரியாதியெலாம் விகடர் காக்க என்றிவ்வா றிதுதனை
முக்காலமும் ஓதிடினும்
இடை யூறொன்றும் ஒன்றுறா முனிவரர் காளறிமின்கள்
யாரொருவ ரோதினாலும் அன்று அவர் தேகம்
பிணியற வச்சிர தேகமாகி மின்னும்.

(விநாயக கவசம் முற்றிற்று)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூற்பயன்

பொன்னுமிகும் கல்விமிகம் புத்திரரோடு எப்பொருளும்
மன்னும் நவமணியும் வந்து அணுகும் - உன்னி
ஒருக்கொம்பின் யானைமுக உத்தமனார் நோன்பின்
திருக்கதையைக் கேட்கச் சிறந்து.

பொற்பணைக்கை முக்கண் புகர்முகத்துப் பொன்மவுலிக்
கற்பத்தின் நோன்பின் கதைதன்னைச் - சொற்பெருகக்
கற்றவரும் நோற்றவருங் காதலித்துக் கேட்டவரும்
பெற்றிடுவர் கற்பகத்தின் பேறு.

வெள்ளை எருதுஏறும் விரிசடையோன் பெற்று எடுத்த
பிள்ளையார் நோன்பின் பெருங்கதையை - உள்ளபடி
நோற்றார் மிகவாழ்வார் நோலாது அருகுஇருந்து
கேட்டோர்க்கும் வாராது கேடு.

சூலிலார் நோற்கிற் சுதரை மிகப்பெறுவார்
சாலமிகும் வெங்கலியார் தாம்நோற்கில் - மேலைப்
பிறப்புஎல்லாம் நல்ல பெருஞ்செல்வம் எய்திச்
சிறப்பிலே வாழ்வார் சிறந்து.

பிள்ளையார் கதை முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்

## காப்பு

கரும்பும் இளநீரும் காரெள்ளுந் தேனும்
விரும்பும் அவல்பலவும் மேன் மேலருந்திக்
குணமுடையனாய் வந்து குற்றங்கள் தீர்க்கும்
கணபதியேயிக் கதைக்குக் காப்பு.

திருவிளங்கு மான்மருகா சேவல் தனிலேறி
வருமரன்றா னீன்றருளும் மைந்தா - முருகனுக்கு
முன்பிறந்த யானை முகவா உனைத் தொழுவேன்
என்கதைக்கு நீயென்றுங் காப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்த சஷ்டி கவசம்

நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்க்கு செல்வம் பலித்துக் கதித்தோங்கும்
நிஷ்டையும் கைகூடும் நிமலனருள்
கந்தர் சஷ்டி கவசம் தனை.

குறள் வெண்பா

அமரரிடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி

நூல்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக்குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடனஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில் வேலால் எனைக் காக்கவென்றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக!
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக!
சரவண பவனார் சடுதியில் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரவண பவச ர ர ர ர ர ர ர
ரிவண பவச ரி ரி ரி ரி ரி ரி ரி
விநபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசுர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சவ்வும்
உய்யொளி சௌவும் உயிரைங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன் தினம் வருக!
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியில் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோ தனென்று
உன் திருவடியை உறுதியென் றெண்ணும்
எந்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகளி ரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமி ரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை ரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிடண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
முபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத் தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகளி ரண்டும் கருணைவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்கையி ரண்டும் முரண்வேல் காக்க
பின்கையி ரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும். குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசு காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்தோடிட
ஆனை யடியினில் அரும்பாவைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ்சனமும் ஒருவழிப் போக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோட
படியினில் முட்ட பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கைகால் முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடு விடு வேலை வெகுண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் எனை தொடர்ந்தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
குலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புருதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீ எனக் கருள்வாய்
ஈரேழு உலகமும் எனக் குறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன் திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடும்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தனிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பாலகுமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா திருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் ஆடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணிய
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரட்சி அன்னமுஞ் சொன்னமும்
மெத்தமெத்தாக வேலா யுதனார்
சித்திபெற்றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செய்தால்
பெற்றவன் நீ குரு பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேசமுடன் ஒரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கிலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயல்து அருளுவர்
மற்றவ ரல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதனெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரட்டாய் வாழ்வார்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்ரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துணவாகச்
சூரபத்மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு வந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி!
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி!
தேவர்கள் சேனா பதியே போற்றி!
குறமகள் மனமகிழ் கோவே போற்றி!
திறமிகு திவ்விய தேகா போற்றி!
இடும்பா யுதனே இடும்பா போற்றி!
கடம்பா போற்றி கந்தா போற்றி!
வெற்றி புனையும் வேலே போற்றி!
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே!
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்!
சரணம் சரணம் சரவண பவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்! - முற்றிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரிக் காப்பு

கௌரி காப்பின் போது படிப்பவை

முன் நின்று செய்யுள் முறையாய் புனைதற்கு
என் நின்ற ருள்க எலியூர்தி - மன்னவா
சொற்குற்றம் ஏனைப்பொருள் சேர் தொடைக்குற்றம்
எக்குற்றம் வாராமலே

காப்பெடுக்க வந்தேனே கௌரி அம்பாள் தாயாளே
காத்தென்னைத் தேற்றிடுவாய்
காளி மகாதேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்.

எண்ணும் கருமம் இனிதாய் முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிருக்கு உயிராக
என்றும் இருந்தே எனைக் காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளி மகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கைக் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளித்தாயே
கொடிய மகிஷாசுரனைக் கூறுமுன்னே போட்டவளே
அசுரர் குலம் யாவும் அழிக்கும் சுடர்க் கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீ இருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீ இருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தை கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உனை அணைத்தே அருள் மாரி பொளிந்தாளே
வகையாற்று படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெறியதியாத்திகைப் போர்க்கு நெறிமுறையைக் காட்டிவிடு
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டி விடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப் பருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விளைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நற்காப்பு அருளுமம்மா
பிள்ளைகள் அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணி மாமணியே புனிதவதி தாயவளே
நாம் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்குத் திருமகளே வாருமம்மா.
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைய தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம் மிகு வல்லமையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால் பழங்கள் வெற்றிலைகள் பலவகைத் திரவியங்கள்
நாலுளக்கு தாறேனம்மா நயந்தென்னைக் காரும் மம்மா
காளிமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினை காக்கும் காப்பவளே
என் தாயே வாழ்ந்திடுவோம் எல்லாம் உனதருளே
காசினியில் வேற்றுமையைக் கணப்பொழுதில் மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏந்திழையே தாயாரே
காப்பெனக்குப் போட்டு விட்டால் கல்மனதும் இளகிவிடும்
ஞானம் பெருகி வரும் நல்வாழ்வு மிகுந்து வரும்
தொடர்ந்தே அணிவோருக்கு கேட்டதெல்லாம் ஜெயமாகும்
இணைந்து அணிவோர்க்கு நினைந்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோருக்கு நல்ல தெல்லாம் பெருகிவிடும்
நாள் கோள் இவையெல்லாம் நலமுடனே இணைந்து வரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரி அம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பினைக் கட்டிவிட்டு கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதெல்லாம் நறும் காப்பு கட்டதளில்
பூவும் நீருமிட்டு போற்றி வணாங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதில் விழித்திடுவேன்
ஞானம் கொழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்.
காப்பெனக்கு கையில் பூண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிபோல் கனன்றிடுவென்
தீமைச் செயலேதும் கண்திறந்து காட்டுமம்மா
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபத்தொரு நாள் வரையில் இசையும்
விரதமொடு தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிருந்து கண்திறந்து காட்டுமடி
பக்தி மனதோடு பரவி அணிவோருக்கு சித்தி யெல்லாம் தருவாள்
சீர்பெருகு கௌரியவள் முத்திக்கு வழியுண்டு
முக்கால முணர்வுமுண்டு இச்சகத்தில் உள்ளோர்
எல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவார்
சொற்சக்தி பொருட்சக்தி துலக்கமொடு வந்திடவே
அச்சக்தியெல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரி காப்பதனைக் காலம் தவறாமல் முறையாய் அணிந்துவர
முன்வினைகள் நீங்கிவிட ஞானங் கிளர்ந்து வர
நல்லருளைச் செய்திடுவாய்
தெவிட்டாத தீங்கனியே தேவிபராசக்தியம்மா
காளியாய் வந்தமர்ந்த கௌரியம்மா காப்பருள்வாய்

இப்பூலோகத்தில் கேதார விரதத்தை மனப்பூர்வமாக விரும்பிச் செய்பவர்களுக்கு பரமேஸ்வரன் சகல செல்வங்களையும் அநுக்கிரகிப்பார்.

அன்பர்கள் இந்த நோன்பை பக்தி விநயத்தோடு செய்து சுகஷேமங்களை அடைந்து மேன்மையாக வாழ்வார்களாக.

சுபம் சுபம் சுபம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமந்திரமும்
# திருக்குறளும் ஒருமைப்பாடு

அரன் அடி சொல்லி அரற்றி அமுது
பரன் அடி நாடியே பாலிப்ப நாளும்
உரன் அடி செய்து அங்கு ஒதுங்க வல்லாற்கு
நிரன் அடி செய்து நிறைந்து நின்றானே - திருமந்திரம்

வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தாற்கு
யாண்டும் இடும்மை இல - குறள்

செல்வர்யாம் என்று செல்புழி எண்ணாத
புல்லறிவாளர் பெருஞ்செல்வம் - எல்லில்
கருங்கொண்மூ வாய்திறந்த மின்னும்போல் தோன்றி
மருங்கறக் கெட்டு விடும் - திருமந்திரம்

அகடுற யார்மாட்டும் நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும் - குறள்

கடன் கொண்டு நெற்குத்துக் கையரை ஊட்டி
உடம்பினை ஓம்பி உயிராய்த் திரிவர்
தடங்கொண்ட சாரல் தழல் முடுகு ஏறி
இடங்கொண்டு உடலார் கிடக்கின்ற வாறே. - திருமந்திரம்

ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப
கோடியும் அல்ல பல - குறள்

தேற்றித் தெளிமின் தெளிந்தீர் கலங்கல்மின்
ஆற்றுப் பெருக்கில் கலக்கி மலக்காதே
மாற்றிக் களைவீ மறுத்து உங்கள் செல்வத்தை
கூற்றன் வருங்கால் குதிக்கலும் ஆமே. - திருமந்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல். - குறள்

சொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை
வல்லடிக் காரர் வலிக்கயிற்றால் கட்டிச்
செல்லிடு நில்லென்று தீவாய் நரகிடை
நில்லிடும் என்று நிறுத்துவர்தாமே. - திருமந்திரம்

நிலையஞ்சி நீத்தருள் எல்லாம் கொலையஞ்சி
கொல்லாமை சூழ்வான் தலை. - குறள்

பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாரும் காண இயமன் தன்தூதுவர்
செல்லாகப் பற்றித் தீவாய் நகரத்தில்
மல்லாக்கத் தள்ளி மறித்து வைப்பாரே - திருமந்திரம்

உண்ணாமை உள்ளது உயிர்நிலை ஊனுண்ண
அண்ணாத்தல் செய்யாது அளறு. - குறள்

ஆத்த மனையாள் அகத்தே இருக்கவே
காத்த மனையாளைக் காமுறு காளையர்
காச்ச பலாவின் கனி உண்ண மாட்டாமல்
ஈச்சம் பழத்துக்கு இடர் உள்ளவாறே - திருமந்திரம்

பிறன் பொருளாள் பெட்டொழுகும் பேதமைஞாலத்து
அறம் பொருள் கண்டார்கண் இல். - குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்க்கும் இடுமின் அவர் இவர் என்னன்மின்
பார்த்திருந்து உண்மின் பழம்பொருள் போற்றன்மின்
வேட்கை உடையீர் விரைந்து ஒல்லை உண்ணன்மின்
காக்கை கரைந்து உண்ணும் காலம் அறிமினே. - திருமந்திரம்

ஆற்றுணர் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின் - குறள்

யாவர்க்குமாம் இறைவற்கு ஒரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே - திருமந்திரம்

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று - குறள்

இறப்பும் பிறப்பும் இருமையும் நீங்கித்
துறக்கும் தவம்கண்ட சோதிப்பிரானை
மறப்பிலராய் நித்தம் வாய் மொழிவார்க்கு
அறப்பதி காட்டும் அமரர் பிரானே - திருமந்திரம்

யான்எனது என்னும்செருக்கு அறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும். - குறள்

வாசியும் மூசியும் பேசி வகையினால்
பேசியிருந்து பிதற்றிப் பயனில்லை
ஆசையும் அன்பும் அறுமின் அறுத்தபின்
ஈசன் இருந்த இடம் எளிதாமே. - திருமந்திரம்

வேண்டுகால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும். - குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

12.02.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவி அமரர் பத்மலோஜனிதேவி தர்மலிங்கம் அவர்களின் மரணச்சடங்கில் பங்குபற்றி அஞ்சலி செலுத்தியோருக்கும், உள், வெளிநாடுகளில் இருந்தும் ஊடகங்கள் மூலமாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், பதாதைகள் கட்டியும், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் வெளியிட்டும், மலர் வளையங்கள் வைத்தும், இறுதி அஞ்சலிகள் செலுத்திய அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

அன்னார் நோயுற்று இருந்த காலங்களில் வைத்திய சேவை புரிந்த திருகோணமலை "தன்வந்திரி" பிரத்தியேக வைத்தியசாலை, திருகோணமலை பொது வைத்தியசாலை, யாழ் நோதேன் சென்றல் பிரத்தியேக வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள், தாதிமார்கள், மற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் நன்றிகள் உரித்தாகுக. மேலும் அன்னார் 2021ல் யாழ் போதனா வைத்தியசாலை இருதய சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு இருந்த வேளையில் சிகிச்சை அளித்த விஷேட வைத்திய நிபுணர்கள், மற்றும் தாதிகள், ஊழியர்கள் அனைவருக்கும் மேலான நன்றிகள்.

அத்துடன் இறுதி மரணச்சடங்கின் போது கலந்து கொண்டு எம் துயரில் பங்கு கொண்டும், வேறும்பல உதவிகளை எமக்கு நயந்தளித்த உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் யாவருக்கும் எமது அன்பு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரது 31ஆம் நினைவு நாளாகிய இன்று (14.03.2023 செவ்வாய்க்கிழமை) அவரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்தனை நிகழ்விற்கு வருகை தந்து கலந்து கொண்ட அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது உணர்வுபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

41,சமாது ஒழுங்கை,
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடையதை எதை நீ இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொருநாள், அது வேறொருவருடையதாகும்

"இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்"
பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்



ART Printers : 0776566173

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org